கோகுலம்

Gokulam

மார்ச் 83 • ரூ.2





உயிர்களிடத்தில் அன்பு வேணும் - தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும்
- பாரதியார்

கோகுலம்

கௌரவ ஆசிரியர்:

அழ. வள்ளியப்பா


மலர்—1 இதழ்—2

1983 மார்ச் மாத இதழ்

உள்ளே உள்ளவை


ஜகத்குரு


கோதை ஸ்ரீநிவாஸ்


பெ. கு. வரதராசன்


தங்கமணி



அருமைச் சிறுவர், சிறுமியரே,

பொங்கல் திருநாளை மகிழ்ச்சியுடன் கொண்டாடி விருப்பீர்கள். ''கோகுலத்தினால் எங்கள் மகிழ்ச்சி கூடியது'' என்று உங்களில் பலர் எழுதியிருக்கிறீர்கள். அதை அறிந்து நாங்களும் மகிழ்ச்சி அடைகிறோம்.

நாங்கள் எதிர்பார்த்ததற்கு மேலாக 'கோகுலம்' முதல் இதழுக்கு நீங்கள் அமோக வரவேற்பு அளித்திருக்கிறீர்கள். உங்களிடமிருந்து தினந்தோறும் ஏராளமான கடிதங்கள் வருகின்றன. அவற்றில் பல பாராட்டுக் கடிதங்கள்; சில நல்ல நல்ல யோசனைகளைக் கூறும் கடிதங்கள். கடிதங்களை எழுதிய எல்லாருக்கும் நன்றி.

பல ஊர்களில் கோகுலம் கிடைக்கவில்லை என்று ஏக்கத்துடன் பலர் எழுதியிருக்கிறார்கள். அவர்களின் ஏக்கத்தை விரைவிலே நீக்குவோம்.

'கோகுலம்' முதல் இதழை உங்கள் பெற்றோரிடம் காட்டியிருப்பீர்கள். ஏராளமான குழந்தைகள் கோகுலம் சிறுவர் சங்கத்தில் சேர மனுக்கள் அனுப்பியிருக்கிறார்கள். இதைப் பார்க்கும்போது, பெற்றோர்கள் எவ்வளவு தூரம் பிள்ளைகளுக்கு உதவுகிறார்கள் என்பதைப் புரிந்து கொள்ள முடிகிறது. இதழை வாங்க இரண்டு ரூபாய், மனுவைத் தபாலில் அனுப்ப 50 காசு – ஆக இரண்டரை ரூபாயைப் பெற்றோர்கள் தந்ததால்தானே இவ்வாறு அனுப்ப முடிந்தது? உங்கள் பெற்றோருக்கு எங்களின் மனம் கனிந்த நன்றி.

'கோகுலம் சிறுவர் சங்க' உறுப்பினர்களுக்காகவே, சில பக்கங்களை ஒதுக்கலாம் என்றிருக்கிறோம். அதில் உறுப்பினர்கள் எழுதும் நல்ல நல்ல விஷயங்களை வெளியிடுவோம். கோகுலத்தை விலை கொடுத்து வாங்க முடியாதவர்களும் இருப்பார்கள். அவர்கள், ''நாம் உறுப்பினர் ஆகவில்லையே, நாம் எழுதினால் வெளியிடுவார்களா?'' என்று தயங்கலாம். தயக்கமே வேண்டாம். அவர்களும் எழுதி அனுப்பலாம். நன்றாக இருந்தால், வேறு பகுதியில் வெளியிடுவோம்.

இன்று குழந்தைகளுக்காக எழுதும் புகழ்பெற்ற பல எழுத்தாளர்கள், பள்ளியில் படிக்கும்போதே எழுதத் தொடங்கியவர்கள்தான். நீங்களும் வருங்காலத்தில் சிறந்த எழுத்தாளர்களாக விளங்க வேண்டும் என்பதே எங்கள் ஆசை. எங்கே, உங்கள் கைத்திறனைக் காட்டுங்கள்!

–அழ. வள்ளியப்பா


கௌரவ ஆசிரியர்



அட்டைப் படம்:

என்னிடத்தில் இரண்டு காந்தி
இருக்கும் அழகைப் பாருங்கள்.
என்ன காந்தி? என்ன காந்தி?
இதற்கு விடையும் தெரிந்ததே!

COLOUR PHOTO – DILIP BANERJEE
HOWRAH - 711 103



மலர் வண்ணன்

தனிப்பிரதி ரூ. 2/- ஆண்டுச் சந்தா ரூ. 24/-

கோகுலம்

கிண்டி. சென்னை-600 032



ஆழி. வே. ராமசாமி



வேதம்



எஸ். ஆர். ஜி. சுந்தரம்



கூத்தபிரான்




பி. வி. கிரி



புத்தனேரி மாமா

பெரிய இடத்துப் பிள்ளை



ஒரு சின்னக் குழந்தையானுல் கூட, அது கலெக்டர் மாதிரி ஊருக்கே பெரிய மனிதராயிருப்பவரின் பிள்ளையாயிருந்தால், அதனிடம் எல்லாரும் அதிகம் அன்பு காட்டிக் கொஞ்சுவார்கள். அதற்குப் பயப்படக் கூடச் செய்வார்கள். அது ஏதாவது சண்டித்தனம் பண்ணினுல்கூட, மற்ற குழந்தைகளை அதட்டுகிற மாதிரி அதட்டாமல் அது கேட்பதைக் கொடுத்து விடுவார்கள்.

ஏன்?

இந்தக் குழந்தை போய், ரொம்பவும் செல்வாக்குள்ள அதன் அப்பாவிடம் ஒருத்தரைப் பற்றி ஏதாவது புகார் பண்ணி விட்டால், அவ்வளவுதான், அந்த ஆசாமிக்கு இந்த அப்பாக்காரரிடமிருந்து பெரிய கஷ்டம் வந்துசேரும். எவரும் தங்களையே திட்டினுல் கூடப் பொறுத்துக்கொள்வார்கள். போனுல் போகிறதென்று விட்டு விடுவார்கள்.; ஆனுல், தங்கள் குழந்தையை யாராவது ஏதாவது சொல்லி விட்டார்களானுல் கோபம் பொத்துக் கொண்டு வந்துவிடும். இம்மாதிரி ஒரு பெரிய மனிதர் கோபித்துக் கொண்டு கிளம்பினுல் ரொம்ப ஆபத்து அல்லவா?

அதனுல்தான், ''இது பெரிய இடத்துப் பிள்ளையப்பா! இதனிடம் வம்புக்குப் போகக் கூடாது'' என்பது.

இதற்கு நேர் எதிராக, ஒரு குழந்தையை மெச்சி விட்டால் அதன் தகப்பனுருக்கு அவரையே மெச்சுவதை விட சந்தோஷமாகி, உச்சி குளிர்ந்துவிடும். இப்படி ஒரு பெரிய மனிதரைப் பிரீதி செய்து விட்டால் சுலபமாக அவரிடமிருந்து பெரிய நன்மைகளைப் பெற்று விடலாம். பெரியவர்களை நேராகத் திருப்தி செய்வது கஷ்டம். குழந்தைகளையோ ரொம்பவும் எளிதில் திருப்திப் படுத்தி விடலாம். ஒரு சின்ன சொப்பையோ சாக்லேட்டையோ காட்டினுல் போதும். இல்லாவிட்டால் ஏதோ கொஞ்சம் கோணங்கி விளையாட்டுக் காட்டினுல் அதிலேயே ஒரு குழந்தைக்குக் குஷி பிறந்து விடும். அந்தக் குழந்தையின் சந்தோஷத்தில் அதன் அப்பாவுக்கும் ஏக சந்தோஷம் உண்டாகி விடும். இப்படித் தன் குழந்தையைச் சந்தோஷப்படுத்தினவருக்குத் தன்னுலான எல்லா நன்மையும் பண்ணி விடுவார். அதாவது, சுலபத்தில் திருப்திப் படுத்த முடியாத ஒரு பெரியவரால் நமக்கு ஒரு காரியம் ஆக வேண்டுமானுல், அவருடைய குழந்தையை சந்தோஷப்படுத்தி விட்டால் போதும். அவர் ரொம்பவும் திருப்தி அடைந்து விடுவார்.

இதனால் என்ன ஏற்படுகிறது? நமக்கு எல்லா விதமான நன்மைகளையும் செய்வதற்கு சக்தி படைத்த ஒரு பெரிய மனிதரின் பிள்ளையாக ஒரு குழந்தை இருந்து. அதை நாம் பிடித்துக்கொண்டு கலபத்திலே குஷிப்படுத்தி விட்டால் போதும். அந்த மகா பெரிய மனிதரிடமிருந்து நாமும் கொஞ்சம்கூடக் கஷ்டப் படாமல் பெரிய பெரிய லாபங்களைப் பெற்று விடலாம் என்று ஏற்படுகிறது.

இப்படி யிருக்கக் கூடிய மகா பெரிய இடத்துப் பிள்ளை யாரென்று பார்த்துக்கொண்டே போனால், ஊர்ப் பெரிய மனிதருக்கு மேலே ஜில்லாவின் (மாவட்டத்தின்) பெரிய மனிதர், அவருக்கும் மேலே மாகாண (மாநில)ப் பெரிய மனிதர் என்று போய்க்கொண்டே இருக்கும்.

முடிவாக நாம் ஏற்கும் பெரிய இடத்துப் பிள்ளை — யார் என்று பார்த்தால்—

பிள்ளையார்தான்!

ராஜாவுக்கெல்லாம் மேலே, மூன்று லோகங்களுக்கும் ராஜாவாக இருக்கப்பட்ட ஈசனின் குழந்தை அவர். அவருடைய மாதா பிதாக்களான (தாய், தந்தையரான) அம்பிகையும் பரமேச்வரனும்தான் இத்தனை உலகங்களையும் அவற்றில் உள்ள நம் போன்ற சகல பிராணிகளையும் உண்டாக்கி, ரட்சித்து (காப்பாற்றி) வருபவர்கள். அவர்களுடைய அருளைப் பெற்றுவிட்டால் அதிலிருந்து நாம் எந்த நன்மையையும் பெற்று விடலாம். அவர்களையே நேராகப் பூஜை பண்ணி அருளைப் பெறுவது அவ்வளவு சுலபமில்லை. சிவபூஜை, அம்பாள் பூஜை ஆகியவற்றுக்கு அநேக நியமங்கள் (கட்டுப்பாடுகள்) உண்டு. அதையெல்லாம் நாம் முறையாகப் பின்பற்றுவது சிரமமாக இருக்கும்.

இப்படிக் கஷ்டமாக இருப்பதை எளிதாக ஆக்கித் தருவதற்கு நமக்குப் பிள்ளையார் இருக்கவே இருக்கிறார். எங்கே பார்த்தாலும் படர்ந்து கிடக்கும் அருகம் புல்லைப் பிய்த்து அவர் மேலே போட்டு விட்டால் போதும். அதிலேயே அவர் திருப்தியாகி விடுவார். மனிதர்கள் யாரும் (தலையில்) வைத்துக் கொள்ளாததால், கடையில் விலைக்கு வராமல் செடியிலேயே யதேஷ்டமாக (ஏராளமாக) பூத்துக் கிடக்கிற எருக்



ஜகத்குரு ஸ்ரீ சந்திரசேகரேந்திர ஸரஸ்வதி சங்கராசாரிய சுவாமிகள்

கம் பூவில் நாலு பறித்து வந்து பிள்ளையார் பாதத்தில் போட்டுவிட்டால் அப்படியே பரம சந்தோஷம் அடைந்து விடுவார். இன்னும் கொஞ்சம் நமக்கு வசதி இருந்தால் ஒரு தேங்காய் வாங்கிக் கொண்டு வரலாம். அதை அவருக்கே நிவேதனமாகக் கொடுக்க வேண்டியது கூட இல்லை. ''சிதறு காய்'' என்று அவர் முன்னே போட்டு உடைத்து, அந்தத் துண்டங்களை நாலு ஏழைக் குழந்தைகள் எடுத்துத் தின்றுவிட்டால் அந்தக் குழந்தைகளின் சந்தோஷத்திலேயே ஈசனின் மூத்த குழந்தையும் பேரானந்தம் அடைந்துவிடும்.

இதை விடவும் சௌகரியம் இருந்தால் இந்தக் குழந்தைக்குச் சாக்லேட்டுக்குப் பதில் தின்பண்டம் - மோதகம் (கொழுக்கட்டை) நிவேதனம் செய்யலாம். இதையும் அவர் கண்ணில் காட்டிவிட்டு, மற்ற குழந்தைகளுக்குத் தந்து நாமும் சாப்பிட்டு அவரை சந்தோஷப்படுத்தி விடலாம். 'மோதகம்'' என்றால் ஆனந்தம் என்றுதான் அர்த்தம். பொங்கும் ஆனந்தமே உருவான ஆனைக்குட்டியாக இருப்பவர் அவர்.

குழந்தைகளுக்கு ஆனையைப் பார்ப்பதென்றால் சொல்லி முடியாத ஆசை. அதனால்தான் அவர்கள் ஆசை தீர அவர் ஆனைமுகராகத் தெருவுக்குத்தெரு கோயில்களிலும், அரச மரங்களுக்கு அடியிலேயும், குளத்தங்கரை, ஆற்றுப் படித் துறைகளிலேயும், எங்கே பார்த்தாலும் தரிசனம் கொடுத்துக் கொண்டிருக்கிறார்.

குழந்தைகளுக்குக் கோணங்கி பண்ணிக் காட்டினால் ஆனந்தம் பிடிபடாமல் 'குபுக்' 'குபுக்'கென்று சிரிக்கும் அல்லவா? இப்படிப் பிள்ளையாரைச் சிரிக்க வைப்பதற்காகத்தான் தலையில் குட்டிக் கொள்வதும், தோப்புக் கரணம் போடுவதும். இதற்கெல்லாம் வேறே பெரிய உள்ளர்த்தம் இருப்பதாகச் சொல்வார்கள். எப்படியோ, மூவுலகத்தின் மூத்த குழந்தையின் ப்ரீதியை நாம் சம்பாதித்து விட வேண்டும் என்பது தான் முக்கியம். நல்ல மனசு, அருள் உள்ளம், இரக்க குணமுள்ள அவர் எளிதிலே திருப்தி கொண்டு விடுவார். இப்படி எப்போதுமே ஆனந்தமாயிருக்கும் இவரை நாமும் கொஞ்சம் குஷிப்படுத்திவிட்டால் அதனால் அவருடைய மாதா பிதாக்களான பார்வதி பரமேச்வரர்களின் மனசையும் குளிரப் பண்ணி அவர்களிடமிருந்து சகல நலன்களையும் பெற்றுவிடலாம்.

அவருடைய அப்பாவும் அம்மாவும் தான் அருள் செய்ய வேண்டும் என்றில்லாமல் அவரே நமக்கு எதையும் கொடுத்துவிட வல்லவர்தான். அவருடைய இந்தப் பெருமை அவருடைய பெயரிலிருந்தே தெரிகிறது. எப்படி?

பொதுவாகத் தாய், தகப்பன், பாட்டன், பாட்டி, தமையன், தமக்கை ஆகிய பெரியவர்களைத்தான் மரியாதையாகத் தாயார், தகப்பனார், பாட்டனார் பாட்டியார், தமையனார், தமக்கையார் என்றெல்லாம் சொல்வதுவழக்கம். குழந்தையாக இருக்கப்பட்ட பிள்ளைக்கு மரியாதை சேர்த்துச் சொல்கிற பழக்கம் எங்கேயும் கிடையாது. இதற்கு மாறுதலாக இவர் ஒருவர் விஷயத்தில் மட்டும் ''பிள்ளை'' என்று சொல்லாமல் ''பிள்ளையார்'' என்றே மரியாதை கொடுத்துச் சொல்கிறோம். அவருடைய தாயார், தகப்பனாருக்கு உள்ள பெருமைகள் அவருக்கும் இருப்பதால்தான் இப்படி.

பெரிய இடத்துப் பிள்ளைகள் என்றால் சிலரிடம் தனக்கென்று யோக்யதாம்சங்கள் (நல்ல தகுதிகள்) இல்லாமலிருக்கலாம் ஆனால் பெரிய இடங்களுக்கெல்லாம் உச்சத்தில் இருக்கப்பட்ட ஈசன் குழந்தையோ, தேக பலம், புத்தி கூர்மை, காரிய சக்தி, அன்புள்ளம், எல்லாவற்றிலும் சிறப்புப் பொருந்தியவராயிருக்கிறார். அவரை வேண்டி இந்தக் குண நலன்களை நாமும் பெறுவோம்.

மறு பிறவி

ஆசிரியர்: ரமணி, செத்துப் போனவங்க மறு பிறவி எடுத்து மீண்டும் வருவாங்க என்கிறார்களே, இது உனக்குத் தெரியுமா?

ரமணி: இருக்கலாம் சார். எனக்குத் தெரியாது.

ஆசிரியர்: உனக்குத் தெரியாது. ஆனால் எனக்குத் தெரியும். உன் தாத்தா செத்துப் போனதாய்ச் சொல்லி, நேத்து லீவு போட்டியே, அதே தாத்தா நேத்துச் சாயங்காலம் உன்னைத் தேடி வந்தாரு. அதுதான் கேட்டேன்.





ஆனந்தமான அறிமுக விழா

"நான் பள்ளியில் படிக்கும்போது, என் நண்பன் அவனுடைய அக்காளிடம் ஒரு சிறிய பொய்யைச் சொன்னான். அந்தச் சிறிய பொய், ஒரு பெரிய சுமை யாகி விட்டது! அந்தச் சுமையை அவன் மட்டுமல்ல; அவனது நண்பர்களாகிய நாங்களும் ஆளுக்குக் கொஞ்ச தூரம் தூக்கிச் சுமக்க வேண்டிய பரிதாப நிலை ஏற்பட்டுவிட்டது."

என்று தன் இளமைக் காலத்தில் நடந்த நிகழ்ச்சி ஒன்றைக் காரைக்குடியில் ஜனவரி மாதம் நடந்த 'கோகுலம்' அறிமுக விழாவில் பேசும்போது கூறினார், செல்வி பதிப்பகம் சிவராமன். வந்திருந்தோரை யெல்லாம் வயிறு குலுங்கச் சிரிக்க வைத்தது அவர் சொன்ன கதை!

"அப்படியா! அவர்கள் கேட்டுச் சுவைத்த கதையை நாங்கள் படித்துச் சுவைக்கக் கூடாதா?" என்று நீங்கள் கேட்பது காதில் விழுகிறது.


இந்த இதழில் இடமில்லாததால், அடுத்த இதழில் சிவராமன் சொன்ன நகைச் சுவைக் கதையை முழுசாக வெளியிடுவோம்.

இராமசாமி தமிழ்க் கல்லூரியில் நடந்த இந்த விழாவுக்குத் தலைமை தாங்கிய இராம. பெரியகருப்பன் அவர்கள், "கோகுலம் மிகச் சிறந்த முறையில் வெளிவந்திருக்கிறது. பெற்றோர்கள் ஒவ்வொருவரும் மாதா மாதம் பிள்ளைகளுக்கு வாங்கிக்கொடுத்தால் நல்ல பயன் ஏற்படும்" என்றார்.

விழாவைத் தொடங்கி வைத்த கவிஞர் குன்றக்குடியான், விழாவில் பாராட்டிப் பேசிய எழுத்தாளர் அழகாபுரி அழகப்பன், பேராசிரியர்கள் தே. முருகசாமி, ந. சுப்பிரமணியன், கவிஞர்கள் ரா. பொன்ராசன், ஜோஸப் ஸ்டாலின், சு. வீரபாண்டியன் ஆகியோரும் 'கோகுலம்' சிறுவர்களின் அறிவு வளரவும், பண்பு பெருகவும் தொடர்ந்து உதவும் என்ற நம்பிக்கையைத் தெரிவித்தார்கள். விரைவில் கோகுலம் மாதம் இருமுறையாகி, பிறகு வார இதழாக வரவேண்டும் என்றும் வாழ்த்துக் கூறினார்கள்.

குழந்தை எழுத்தாளர் சங்கம் சென்ற ஆண்டு நடத்திய குழந்தைகளுக்கான நாடகப் போட்டியில் ஏவி. எம். தங்கப் பதக்கம் பரிசு பெற்ற பேராசிரியர் வ. தேனப்பனுக்கு, 'கோகுலம்' கௌரவ ஆசிரியர் பொன்னாடை போர்த்தி, வாழ்த்தினார்.

கோகுலம் ஏஜண்ட் வெங்கடாசலம் 10 பள்ளிக்கூடங்களுக்குத் தொடர்ந்து 4 மாதங்கள் கோகுலம் இதழ்களை இலவசமாக வழங்க முன்வந்தார்.



வீரச் சிறுவர்களின் வியப்புக் கதைகள்

கோதை ஸ்ரீனிவாஸ்

அம்மாவைக் காத்தாள்; திருடரைப் பிடித்தாள்!

இரவு நேரம். ரயில்வே ஸ்டேஷனிலிருந்து வீட்டுக்குத் திரும்பிக் கொண்டிருந்தார்கள், 12 வயதுச் சிறுமியும், அவளுடைய அம்மாவும். ஒரு சந்திலே அவர்கள் வந்து கொண்டிருந்த போது, திடீரென்று சில திருடர்கள் அவர்களைத் தாக்கினர். அம்மாவின் கழுத்தில் இருந்த திருமாங்கல்யச் சங்கிலியைப் பறிக்க அவர்கள் முயன்றனர். ஆனால், அந்த அம்மா அதற்கு இடம் கொடாமல் அவர்களுடன் போராடினாள்!

திருடர்களில் ஒருவன் கத்தியினால் அம்மாவின் நெஞ்சிலே குத்தினான். இதைக் கண்ட சிறுமி பதறினாள். அம்மாவைக் காப்பாற்ற அருகிலே ஓடினாள். மற்றொரு திருடன் சிறுமியின் வயிற்றிலே கத்தியால் குத்திவிட்டு, அம்மாவின் திருமாங்கல்யத்தைப் பறித்துக்கொண்டு ஓடிவிட்டான்.

சிறுமிக்குப் பலத்த காயம். ஆனாலும் அவள் அஞ்சவில்லை. தைரியமாக ஒரு திருடனின் சட்டைக் காலரைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டாள். திருடன் திமிறினான். அவள் விடவில்லை. கடைசியில் சட்டை கிழிந்தது. திருடன் ஓடிவிட்டான். ஆனாலும், அவனுடைய சட்டைக் காலர் அவள் கையில் சிக்கிக் கொண்டது.

ஒரு மணி நேரம் சென்றது. தாயும் மகளும் அபாயகரமான நிலையில் ஆஸ்பத்திரியில் சேர்க்கப் பட்டார்கள். திருடர்களைப் பிடிக்க முயன்ற போலீஸ்காரர்களுக்குச் சிறுமியின் கையில் சிக்கிய காலர் மிகவும் உதவியது. அதைக் கொண்டே துப்புத் துலக்கித் திருடர்களை எளிதில் கண்டு பிடித்துவிட்டார்கள்.! அம்மாவின் திருமாங்கல்யமும் கிடைத்தது.

மகளுக்கு 'கீதா சோப்ரா விருது' கிடைத்தது. மேலும், மத்தியப் பிரதேச போலீஸார் வழங்கிய ரொக்கப் பரிசும், ராஜ்கட் முனிசிபாலிட்டி அளித்த ரொக்கப் பரிசும் கிடைத்தன. அவற்றுடன் அவர்கள் மாநிலத்தைச் சேர்ந்த ஒரு தொழிலதிபர் அச்சிறுமியின் கல்விச் செலவு முழுவதையும் ஏற்றுக்கொள்வதாக முன்வந்தார்.

அந்த வீரச் சிறுமியின் பெயர் ஹஸீன்னி டாய். இந்த நிகழ்ச்சி நடந்தது மத்தியப் பிரதேசத்தில் உள்ள பங்கல்பாரா என்ற சிற்றூரில்.

கிணற்றிலே பாய்ந்தாள்; தோழியைத் தூக்கினாள்.

வள்ளிராணிக்கு வயது 11. நம் தமிழ் நாட்டுச் சிறுமி. தருமபுரி மாவட்டம் மேகலாச்சிநாம்பள்ளியைச் சேர்ந்தவள். ஆறும் வகுப்பிலே படிக்கும் தன் மூன்று சிநேகிதிகளுடன் அவள்

ஒரு நாள் பள்ளிக்கூடத்துக்கு அருகிலே உள்ள ஏற்றக் கிணற்றுக்குத் தண்ணீர் குடிக்கச் சென்றாள்.

படிகளின் வழியாகக் கீழே இறங்கிச் செல்லும்போது சாந்தி என்ற பெண் வழுக்கி 30 அடி ஆழமுள்ள அந்தக் கிணற்றுக்குள் விழுந்து விட்டாள்! அவளுக்கு நீந்தத் தெரியாது. தத்தளித்தாள். உயிருக்கு மன்றாடினாள்.

மற்ற இரண்டு தோழிகளும் பயத்தினால் என்ன செய்வது என்று தெரியாமல் விழித்துக் கொண்டிருக்க, வள்ளிராணி 'சட்'டென்று கிணற்றுக்குள் குதித்தாள். அவளுக்கு நீந்தத் தெரியும். சாந்தியின் சட்டையைக் கெட்டியாகப் பிடித்து, மெல்லப் படிகளை நோக்கி இழுத்து வந்தாள்.

இதற்குள் தோழியர் இருவரும் கூச்சலிடவே பள்ளிச் சிறுவர்கள் ஓடிவந்தனர். எல்லோருமாகச் சேர்ந்து வள்ளிராணிக்கு உதவி, சாந்தியைக் காப்பாற்றினர்.

வள்ளி ராணிக்குத் தைரியம் இருந்தது. உடனே என்ன செய்ய வேண்டும் என்று தெரிந்து செய்யும் விவேகமும் இருந்தது. எனவே, ஓர் உயிர் பிழைத்தது!

கோலால் நடந்தான்; கொன்றான் பாம்பை!

வீரத்துக்கு வயதும் தடையல்ல; ஊனமும் தடையல்ல என்பதை நிரூ

❊ ஊனம் தடையில்லை என்கிறான் அனில்





❊ பிரதமரிடம் வள்ளிராணி பரிசு பெறுகிறாள்

பித்தான், 10 வயது மராட்டியச் சிறுவன் அனில் ஸ்ரீகிருஷ்ணா.

ஒரு நாள் அனிலும் அவன் நண்பர்களும் ஒரு பாழடைந்த வீட்டின் அருகே விளையாடிக் கொண்டிருந்தனர். அப்போது திடீரென்று விஷப் பாம்பு ஒன்று சீறிக் கொண்டு வந்தது. அது சொனாலி என்ற சிறுமியை நெருங்கி விட்டது. அவள் பயந்து அலறினாள். அனிலைத் தவிர மற்ற அனைவரும் ஓடி விட்டனர்.

அனில், பாதுகாப்பாக ஒரு பக்கம் சொனாலியைப் பிடித்து நிறுத்திவிட்டுத் தன்னிடமிருந்த ஊன்றுகோலால் பாம்பின் தலையிலே ஓங்கி அடித்தான். அவன் அடித்த அடியில் பாம்பு உயிரை விட்டது!

உடல் ஊனமுற்றால் என்ன? அனிலின் மதி நுட்பமும், திறமும், துரிதச் செயலும் சொனாலியின் உயிரைக் காப்பாற்றின!

காயங்கள் பட்டான்; கரடியை வென்றான்!

காட்டுக்குள் சென்று தளிர்களைப் பொறுக்கிக் கொண்டு வீட்டை நோக்கி வந்தான் ரேவாராம் என்ற 12 வயதுப் பையன். அவனுடன் அவன் தம்பியும், ஒன்பது பெண்களும் வந்தார்கள்.

திடீரென்று எதிரிலே வந்தது ஒரு கரடி! கரடியைக் கண்டதும் எல்லோரும் 'தப்பித்தோம்; பிழைத்தோம்' என்று தலை தெறிக்க ஓடிவிட்டனர். ரேவாராம் மட்டுமே அங்கு நின்றான்.

கரடி அவனை நெருங்கியது. அஞ்சாமல் அவன் கரடியை எதிர்த்தான். இருவரும் ஒருவரை யொருவர் தாக்கினர். கட்டிப் புரண்டனர்: அவன் கரடியின் கழுத்து மயிரைப் பலமாகப் பிடித்து இப்படியும் அப்படியுமாக ஆட்டினான். கரடியால் வலி தாங்க முடியவில்லை. அவன் மீது கோபம் கொண்டு கால்களால் அடித்தது. நகங்களால் கிழித்தது. அவனுக்கு உடம்பெல்லாம் காயம்! இரத்தம் 'கொட கொட' என்று வழிந்தது! பத்து நிமிஷப் போராட்டத்தில் அவன் தலையிலும், தொடையிலும் பலத்த காயங்கள் ஏற்பட்டன. ஆனாலும் அவன் சளைக்கவில்லை. தொடர்ந்து தன் பலத்தை யெல்லாம் சேர்த்து அதனுடன் போராடினான். முட்டி மோதினான். இறுதியில், கரடி உயிருக்குப் பயந்து ஓட்டம் பிடித்தது. ரேவாராம் வெற்றி பெற்றான்!

3

இது என்ன தோரணமா?

人々の心をたちまち感激で燃え立たせる、恵み深い神の御足をあがめる者は、天国で、限りない喜びにひたるであろう。

இது என்ன தோரணம் கட்டித் தொங்க விட்டிருக்கிறதே என்று பார்க்கிறீர்களா?

இது திருக்குறளில் உள்ள மூன்றாவது குறள் தான்!

மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ்வார்.

என்பதுதான் இப்படி ஜப்பானிய மொழியில் இருக்கிறது.

ஜப்பானிய மொழியை மேலிருந்து கிழாகத்தான் எழுதுவார்கள். வலமிருந்து இடமாகத்தான் படிப்பார்கள். புத்தகத்தின் பின்புறம் உள்ள அட்டை தான் அவர்களுக்கு முகப்பு. புத்தகத்தின் கடைசிப் பக்கத்திலிருந்து ஒவ்வொரு பக்கமாகப் பின் நோக்கிப் புரட்டிப் படிப்பார்கள். திருக்குறளில் உள்ள 1330 குறட்பாக்களையும் ஜப்பானிய மொழியில் தந்திருக்கிறார் ஷுஸோ மட்சுனகா என்ற அறிஞர். அவர் மதுரையில் நடந்த ஐந்தாவது உலகத் தமிழ் மாநாட்டுக்கு வந்திருந்தார்.

அவனது புத்தி சாதுர்யத்தையும் வீரத்தையும் அனைவரும் புகழ்ந்தனர்.

துப்புத் துலக்கினான்; தீயணைக்க உதவினான்!

அஜ்மல் கானுக்கு வயதுஎட்டுத்தான். அந்த வயதுக்குள் அவன் செய்த வீர தீரச் செயல்கள் பல!

தாகுர் மியான் என்பவன் ஒரு பெரிய ரௌடி. பல திருட்டு, கொலை, கொள்ளை வழக்குகளில் சம்பந்தப் பட்டவன். தன் உயிருக்கு ஆபத்து ஏற்படக் கூடிய நிலை இருந்தும் அஜ்மல் கான் அஞ்சாமல், அவனைப் பற்றித் துப்பறிந்து, போலீஸாரிடம் கூறி, அவனைப் பிடிப்பதற்கு மிகவும் உதவினான்.

ஒரு நாள் அஜ்மல் கான், ரயில் தண்டவாளத்தின் குறுக்கே ஒரு ரிக்ஷாக்காரர் அடிபட்டுக் கிடப்பதைக் கண்டான். அவரை அப்படி அடித்து விட்டுச் சென்றது வேறு எதுவுமில்லை; ஓர் என்ஜின்தான்! அஜ்மல் கான் அந்த ரிக்ஷாக்காரரின் அருகில் சென்றான். அதே சமயம் சிறிது தூரத்தில் ஒரு ரயில் மிக வேகமாக வந்து கொண்டிருப்பதைக் கண்டான். கொஞ்சம் தாமதித்தாலும் போதும்; அந்த ரயில் ரிக்ஷாக்காரரின் மேல் ஏறிவிடும்! அஜ்மல் கான் குபீரென்று பாய்ந்தான்; அவரை இழுத்து அப்பால் போட்டான். அவர் உயிர் தப்பினார்.

இன்னொரு நாள், அஜ்மல் கான் பால் பண்ணைக் கிடங்கு வழியாகச் சென்று கொண்டிருந்தான். அப்போது 'தீ! தீ!' என்ற கூக்குரல் கேட்டது. அந்தக் கிடங்கில் தீப்பிடித்து எரிவதையும், அங்கு வேலை செய்யும் பலர் கூக்குரலிடுவதையும் அறிந்தான். ஒரு விநாடி கூடத் தாமதிக்கவில்லை. உடனே, நெருப்பணைக்கும் படையினருக்கு அஜ்மல் கான் தகவல் கொடுத்தான். தீ பரவாமல் தடுக்கப்பட்டது. பல உயிர்கள் தப்பின; பொருள் சேதமும் அதிகமில்லை!

ஆண்டு தோறும் குடியரசு தினத்தில், வீரச் சிறுவர் சிறுமியருக்கு விருது வழங்கப்படுகிறது. கடந்த 26 ஆண்டுகளில் 231 பேர் விருது பெற்றிருக்கிறார்கள்.

இந்த ஆண்டு 14 சிறுவரும் இரண்டு சிறுமியரும் நம் பாரதப் பிரதமர் இந்திரா காந்தியிடம் வீர விருது பெற்றனர். அவர்களில் சிலரைப் பற்றிப் படித்தீர்கள். மற்ற ஒவ்வொருவரின் வீரச் செயலுமே ஒரு தனிக் கதை. பாரத நாட்டின் வீர பரம்பரையை வளர்க்கும் இவர்கள் வாழ்க!

இளமையில் இவர்கள்

பாரதி சிங்கக்குட்டி!

மகாகவி பாரதியாருக்குத் திருமணம் ஆனபோது அவருக்கு வயது 14தான்! அவரது மனைவி செல்லம்மாளுக்கு வயது ஏழு!

திருமணம் மிகவும் சிறப்பாக நான்கு நாட்கள் நடந்தது. அந்த நான்கு நாட்களிலுமே மணமக்களை வைத்து ஊர்வலம் நடத்தினார்கள். திருமணத்தில் நாட்டியக் கச்சேரி, மேளக் கச்சேரி எல்லாம் தடபுடலாக நடந்தன. ராஜாக்களிடமிருந்தும், ஜமீன்தார்களிடமிருந்தும் பட்டாடைகள், மோதிரங்கள், முத்து மாலைகள் என்று பலவிதமான பரிசுகள் வந்து குவிந்தன.

அந்தக் காலத்தில் பெரியவர்கள் இருக்கும்போது மணமகனும் மகளும் ஒருவருக்கொருவர் பேசிக் கொள்ள மாட்டார்கள். ஆனால் பாரதியார், செல்லம்மாவைப் பார்த்துப் பாட ஆரம்பித்து விடுவார். அதைக் கண்டு எல்லாரும் சிரிப்பார்கள்.

'எல்லாரையும் போல சாதாரணமான ஒரு கணவர் நமக்குக் கிடைக்காமல் இப்படி அபூர்வமான ஒருவர் கிடைத்திருக்கிறாரே!' என்று செல்லம்மா வருந்துவார்.

திருமணத்தின் கடைசி நாளில் பாரதியாரையும் செல்லம்மாவையும் ஊஞ்சலில் வைத்து ஆட்டினார்கள். அப்போது பாரதியார் ஒரு பாட்டுப் பாடினார். அந்தப் பாட்டில், அந்தத் திருமணம் விமரிசையாக நடந்ததையும் மாமனார் கஞ்சத்தனமின்றித் தாராளமாகச் செலவு செய்ததையும், வித்துவான்களின் திறமையையும் பாராட்டி மிக அழகாகப் பாடினார். இசையோடு பாடினார். அதைக் கேட்ட எல்லாரும் ''ஆஹா! எப்படிப்பட்ட மாப்பிள்ளைப் பையன் கிடைத்திருக்கிறான்! மணிப் பயல்! சிங்கக் குட்டி!'' என்று பாராட்டினார்கள்.



ராமகிருஷ்ணரின் மகிழ்ச்சி



இராமகிருஷ்ண பரமஹம்சருக்கு அவரது பெற்றோர்கள் வைத்த பெயர் கதாதரர். சிறுவராயிருக்கும்போது, அவர் அடிக்கடி தெருக் கூத்துக்களைப் பார்ப்பார். அவற்றில் எப்படி நடிக்கிறார்கள் என்பதைக் கூர்ந்து கவனிப்பார். அவர்களைப் போலவே நண்பர்களைக் கூட்டி வைத்துக் கொண்டு நடிப்பார்; பாடுவார்.

பதினான்காவது வயதில் அவருக்குப் பூணூல் போட ஏற்பாடு செய்தார்கள். பூணூல் போடும் சமயம் அவர் ஒருவரிடம் பிச்சை ஏற்று உண்ண வேண்டும். ''நீ யாரிடத்தில் பிச்சை கேட்கப் போகிறாய்?'' என்று அவரைக் கேட்டார்கள். அவர், தமது குலத்தைச் சேர்ந்த ஒரு பிராமண மாதிடம்தான் பிச்சை ஏற்பார் என்றுஎல்லாரும் நினைத்தார்கள். அப்படித்தான் எல்லோரும் செய்வது வழக்கம். ஆனால் அவரோ





"நான் தனம் அம்மாளிடம்தான் பிச்சை ஏற்பேன்" என்றார்.

தனம் என்பவர் பிராமணர் குலத்தைச் சேர்ந்தவளல்ல. அவளது கணவர் கொல்லத் தொழில் செய்து வந்தார். ஆனாலும், அவள் கடவுள் பக்தி மிகுந்தவள். உயர்ந்த ஒழுக்கம் உடையவள்; கதாதரரிடம் மிகுந்த அன்பு கொண்டவள்.

கதாதரர் சொன்னதைக் கேட்டு எல்லாரும் திடுக்கிட்டார்கள். "இவள் நம் குலத்தைச் சேர்ந்தவளல்ல. இவளிடம் போய்ப் பிச்சை கேட்கலாமா?" என்று பல வகையிலும் எடுத்துச் சொன்னார்கள். அவர் பிடிவாதமாகவே இருந்தார். கடைசியில், அவர் நினைத்தபடியே தனம் அம்மாளிடமே பிச்சை ஏற்று உண்டார். அப்போது அவர் அடைந்த மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை!

தியாகராஜர் சுவரில் எழுதினார்!

மிகப் பெரிய இசை ஞானியாகத் திகழ்ந்தவர் தியாகப் பிரும்மம் என்னும் தியாகராஜர். அவருடைய தந்தையார் பெயர் ராமப்பிரும்மம்.


ஒரு நாள் அவருடைய தந்தையார் தமது வீட்டுச் சுவரில் ஏதோ எழுதப்பட்டிருக்கிறதே என்று பார்த்தார். அது ஒரு பாடல்! "நமது பையன் கையெழுத்துப் போலல்லவா இருக்கிறது?... ஆம், அவனேதான் எழுதியிருக்கிறான்" என்று கூறி அதைப் படித்துப் பார்த்தார். அது மிகுந்த கருத்துள்ள பாடலாக இருந்தது. இசையுடன் பாடுவதற்கு ஏற்றதாகவும் இருந்தது.

உடனே அவர் தமது மனைவியை அழைத்தார். "சீதா, இதோ பார் உன் பிள்ளை சுவரிலே பாடல் எழுதியிருக்கிறான்! நானும் இதுவரை எத்தனையோ பாடல்களைக் கேட்டிருக்கிறேன். ஆனால், இந்தப் பாடலைக் கேட்டதே இல்லையே! ஒருவேளை... இதை நம் தியாகுவே இட்டுக் கட்டியிருப்பானோ!" என்றார்.

"சந்தேகமென்ன, அவனேதான் கட்டியிருப்பான். அவனுக்குத்தான் பாடல் இயற்றும் சக்தியை இந்த வயதிலே ஆண்டவன் கொடுத்திருக்கிறாரே!" என்று மனம் பூரித்தார் அந்த அம்மையார்.

தினமும் காலையில் ராமப் பிரும்மம் பூஜை செய்வார். அப்பாவின் பூஜைக்கு வேண்டிய பூக்களை தியாகராஜர்தான் பறித்து வந்து கொடுப்பார்.

ஒரு நாள் பூப்பறிக்கச் சென்ற மகன் வெகு நேரம் வரை திரும்பி வரவில்லை. மகனைத் தேடித் தந்தை சென்றார். மகனோ, அந்த ஊரில் பெரிய சங்கீத வித்வானாக விளங்கிய சொண்டி வேங்கடரமணய்யா என்பவரின் வீட்டு வாசலில் நின்று, அவர் சில மாணவர்களுக்கு இசைப் பயிற்சி அளிப்பதை மெய் மறந்து கேட்டுக் கொண்டிருந்தார். உடனே தந்தை மகனுடைய ஆசையைத் தெரிந்துகொண்டு அந்த




வித்வானிடம் மகனை அழைத்துச் சென்றார். மகனுக்குச் சங்கீதம் கற்றுக் கொடுக்கும்படி கேட்டுக் கொண்டார்.

தியாகராஜர் ஓராண்டுக்குள் சங்கீத நுட்பங்களை யெல்லாம் நன்கு தெரிந்து கொண்டார். நாளடைவில் தெய்வ அருள் பெற்ற பெருங் கவிஞராகவும் இசை மேதையாகவும் திகழ்ந்தார்.


அவர் சிறுவராயிருக்கும்போது வீட்டுச் சுவரில் பாடல்கள் எழுதினார். இப்போது, திருவையாற்றிலுள்ள அவரது சமாதியைச் சுற்றியுள்ள சுவர்களில் அவரது பாடல்களைச் சலவைக் கற்களில் பொறித்துப் பதித்து வைத்திருக்கிறார்கள்!





வீண் பெருமை = வேதனை

—அழ. வள்ளியப்பா—



காட்சி 1

இடம்: சோமுவின் வீடு.
பாத்திரங்கள்: சோமு, அவன் அப்பா.

அப்பா: ஏண்டா சோமு, எங்கே ஊர் சுத்திட்டு வர்ரே? பரீட்சை நடக்கிறபோதுகூட உன்னாலே வீட்டிலே உட்கார்ந்து படிக்க முடியல்லே. கழுதைமாதிரி வீணா சுத்திக்கிட்டே இருக்கியே! அடுத்த வீட்டு முரளியைப் பார்த்தியா? எல்லாப் பாடங்களிலும் அவன் நிறைய நிறைய மார்க் வாங்கி யிருக்கிறான். வகுப்பிலே முதலாவதாக இருக்கிறான். ஆனால், நீயோ 27வதுராங்க். போன பரீட்சையிலே முரளி கணக்கிலே 100க்கு 70 மார்க் எடுத்திருக்கிறான்!

சோமு: அப்பா, நாளை மறுநாள் கணக்குப் பரீட்சை. அதிலே நான் அவனை விட அதிக மார்க் வாங்கிக் காட்டுறேன், பாருங்கப்பா.

அப்பா: நிஜமாகவா! எங்கே பார்க்கலாம். முரளியைவிட அதிக மார்க் வாங்கிட்டா நிச்சயம் உனக்குக் கைக் கடிகாரம் வாங்கித் தருவேன்.

காட்சி 2

இடம்: முரளியின் வீடு
பாத்திரங்கள்: முரளி, சோமு

முரளி (சோமு வருவதைப் பார்த்ததும்) சோமுவா! வா,வா. என்ன விஷயம்?

சோமு: சும்மா உன்னைப் பார்த்திட்டுப் போகலாம்னுதான் வந்தேன்.

முரளி: நல்ல சமயத்தில்தான் வந்திருக்கிறாய். உட்காரு. உனக்கு ஸ்வீட் கொண்டு வர்ரேன்.

சோமு: என்னப்பா விசேஷம்?

முரளி: என் அக்காளுக்கு ஆண் குழந்தை பிறந்திருக்குது.

சோமு: ஓ! அப்படின்னா நீ மாமா வாகிட்டே!

முரளி: இதோ அம்மாவிடத்திலே சொல்லி ஸ்வீட் வாங்கி வாரேன்.

(முரளி போன சமயம் பார்த்து அவனுடைய கணக்குப் புத்தகத்தை எடுத்துச் சட்டைக்குள் திணித்துக் கொள்கிறான். பிறகு, அங்குள்ள அலாரம் கடிகாரத்தைப் பார்க்கிறான். 4 மணிக்கு அலாரம் வைக்கப்பட்டிருக்கிறது. அதை 6 மணியாக மாற்றி வைத்துவிடுகிறான் சோமு. இதை அறியாத முரளி ஸ்வீட்டுடன் வருகிறான்.)

சோமு: ஏன் முரளி, அக்கா, குழந்தையெல்லாம் சுகமாயிருக்காங்களா?

முரளி: உம், சுகமாயிருக்காங்க.

சோமு: அக்கா மதுரையிலேதானே இருக்காங்க?

முரளி: ஆமாம், அங்கே ராஜாஜி ஆஸ்பத்திரியிலேதான் குழந்தை பிறந்தது.

சோமு (ஸ்வீட் இருந்த தட்டைக் காலி செய்துவிட்டு): முரளி, ரொம்ப தாங்க்ஸ். போய் வரட்டுமா? நாளை கணக்குப் பரீட்சை இல்லையா? போய்ப் படிக்கணும்.

காட்சி 3

(இடம்: சோமுவின் வீட்டு வாசல். பாத்திரங்கள்: சோமு, அவன் அப்பா முரளி.)

அப்பா: என்னடா சோமு, கணக்குப் பரீட்சை நல்லா எழுதியிருக்கிறியா?

எப்படிப் போயிருக்கும்?

"ஏண்டா, உங்க அப்பா வேலை பார்க்கிற எட்டு மாடிக் கட்டடம் தீப்பிடித்து எரிஞ்சு போச்சுதாமே! நெருப்பு எப்படிடா எட்டு மாடிக்குப் போயிருக்கும்?"

"ப்பூ! இதென்னடா கேள்வி? அங்கேதான் 'லிப்ட்' இருந்ததே!"

-சி. மணிமாறன்



சோமு (மௌனம். தலையைச் சொறிகிறான்).

அப்பா: எங்கே, கேள்வித் தாளைக் கொடு. நான் சொன்னபடி விடையைப் பக்கத்திலே எழுதியிருக்கிறியா?

சோமு: ம்... எழுதியிருக்கிறேன். தலைவலியாயிருந்தது. அதனாலே பரீட்சை சுமாராத்தான் எழுதினேன்.

அப்பா (கேள்வித் தாளைப் பார்த்து-விட்டு): என்னடா இது! நீ எழுதி வச்சிருக்கிற விடையெல்லாம் தப்புத் தப்பா இருக்கு! 20 மார்க்குக் கூட வராது போலிருக்கே! இந்த லட்சணத்திலே ரவியை விட அதிக மார்க் வாங்கறதாச் சவால் விட்டியே!

சோமு: அப்பா, முரளிக்கு இதை விடக் குறைச்சல்மார்க்தான் கிடைக்கும். நீங்க வேணும்னுப் பாருங்களேன்.

(அப்போது முரளி வருகிறான்)

அப்பா: அதோ முரளி வருகிறானே! ஏ,முரளி,இங்கே வாப்பா! கணக்குப் பரீட்சை எப்படி எழுதியிருக்கே?

முரளி: நல்லாத்தான் எழுதியிருக்கிறேன். விடைகளை எங்கள் கணக்கு வாத்தியார் பார்த்தார். 95 மார்க் வரும்னு சொன்னார்.

சோமு: என்ன! 95 மார்க்கா! அது எப்படி வரும்? நீதான் கணக்குப் புத்தகத்தைத் தொலைச்சிட்டியே! இன்னிக்குக் காலையிலே நீதான் 4 மணிக்கு எழுந்திருக்கல்லியே! ஆறு மணிக்குத்தானே எழுந்திருச்சிருப்பாய்?

அப்பா: டேய் சோமு, முரளி கணக்குப் புத்தகத்தைத் தொலைச்சிட்டானா? ஆறு மணிக்குத்தான் எழுந்திருச்சானா? இதெல்லாம் உனக்கு எப்படிடா தெரியும்?

சோமு(உதட்டைக் கடித்துக்கொண்டு,: தலையைச் சொறிந்து கொண்டே): இல்லையப்பா, சும்மா விளையாட்டாக் கேட்டேன்.

முரளி (சிரித்துக் கொண்டே): சோமு, நேத்து சாயங்காலம் நீ என் வீட்டிலேயிருந்து புறப்படுகிற போதே பார்த்துட்டேன். உன் வயிறு சதுரமாயிருக்குதேன்னு யோசிச்சேன். நீ போன பிறகுதான், நீ எனக்குத் தெரியாமே, நான் உனக்குப் பலகாரம் கொண்டுவர உள்ளே போனபோது, என் கணக்குப் புத்தகத்தை எடுத்துச் சட்டைக்குள்ளே வச்சிக்கிட்டுப் போனது தெரிஞ்சது.

சோமு: (முகம் கலவரத்தில் மாறுகிறது) அப்படின்னு நீ ஏன் உடனே வந்து கணக்குப் புத்தகத்தைக் கேட்கல்லே?

முரளி: நான் தினமும் எல்லாப் பாடங்களையும் ஒழுங்காகப் படிக்கிறவன். நான் பரீட்சைக்கு முதல் நாள்தான் படிக்கணும்கிறது இல்லியே!

அப்பா: (பல்லைக் கடித்தபடி): உன் புத்தகத்தை இவன் உனக்குத் தெரியாமே எடுத்து வந்திருக்கிறான். சே, சே. கேட்கவே வெட்கமா யிருக்குது. ...சரி, அந்த ஆறு மணி விவகாரம் என்ன?

முரளி: நான் 4 மணிக்கு அலாரம் வச்சிருந்தேன். அதை சோமு எனக்குத் தெரியாமே 6 மணிக்கு மாத்தி வச்சுட்டான்.

அப்பா: அப்படின்னு, நீ 6 மணி அலாரம் அடிச்சுத்தான் எழுந்திருச்சியா?

முரளி: இல்லே. 4 மணிக்கே எழுந்திருச்சிட்டேன். இரவு படுக்கப் போகும்போது, எப்போதுமே கடிகாரத்தைச் சரிபார்த்து வச்சிட்டுத்தான் படுப்பேன். அது மாதிரி நேத்துப் பார்த்தேன். 4 மணிக்குத் தானே அலாரம் வச்சோம்? யாரோ மாத்தி வச்சுட்டாங்க போலேயிருக்கு அப்படின்னு நினைச்சு, திரும்பவும் 4 மணிக்கே வச்சுட்டேன். இப்பத்தான் தெரியுது, யார் மாத்தி வச்சதுன்னு.

அப்பா: டேய் சோமு, உனக்கு நான் அப்பான்னு சொல்லிக்கவே வெட்கமாயிருக்குது. முரளி தினமும் ஒழுங்காய்ப் பள்ளிக்கூடம் போகிறான். கவனமாப் படிக்கிறான். தினமும் பள்ளியிலே சொல்லிக் கொடுக்கிற பாடங்களை அன்றாடம் வீட்டிலே படிச்சு மனசிலே பதிச்சுக்கிறான். பரீட்சைக்கு முதல் நாள்கூடப் படிக்காத உனக்கு எப்படி மார்க் வரும்? அவனை விட அதிக மார்க் எடுக்கணுங்கிறதிலே போட்டி போடாமே, உன்னை விட அவன் குறைச்ச மார்க் எடுக்கறதுக்குச் சூழ்ச்சி பண்றியே!... சரி, சரி, முரளியிடத்திலே மன்னிப்புக் கேட்டுக்கோ.

சோமு (சிறிது தயக்கத்துடன்): முரளி, நான் செய்ததெல்லாம் தப்பு. என்னை மன்னிச்சிடு.

முரளி: சோமு, நீயும் நல்லாப் படிச்சு நல்ல மார்க் வாங்கினா, உன் அப்பா அம்மாவுக்கு மட்டுமில்லே, உனக்கும் எவ்வளவோ ஆனந்தமா யிருக்கும்.

காட்சி 4

இடம்: தெரு
பாத்திரங்கள்: சோமு, லதா.

சோமு (லதா காய்கறிகளுடன் வருவதைப் பார்த்து): என்ன லதா, காய் கறி வாங்கி வருகிறாயா?

லதா: ஆமா.

சோமு: முந்தாநாள் உன் அண்ணன் காய் கறி வாங்கி வந்ததைப் பார்த்தேன். இன்னிக்கு நீ வாங்கி வருகிறாய். போயும் போயும் காய்கறி வாங்கி வருகிறதுதான் படிக்கிற பிள்ளைகளுடைய வேலையா?

லதா: ஏன், இதிலே என்ன தப்பு? எங்க அப்பா அம்மாவுக்கு உதவியாக நாங்க எங்களாலே முடிஞ்சதைச் செய்கிறோம்.



ஹெல்மெட் எதற்கு?

''அப்பா, அப்பா, எனக்கு ஒரு ஹெல்மெட் வாங்கித் தாங்கப்பா.''

''உனக்கு எதுக்குடா ஹெல்மெட்?''

''அடிக்கடி வாத்தியார் தலையிலே குட்டுறாரப்பா!''

-பட்டுக்கோட்டை ரவி

சோமு: கறிகாய் வாங்கிறது, ரேஷன் வாங்கிறது, மண்ணெண்ணெய் சீனி வாங்கிறதெல்லாம் எங்க வீட்டிலே வேலைக்காரன்தான் செய்வான். கடிகாரம் வாங்கறது, டிரான்ஸிஸ்டர் வாங்கிறது, டி.வி. வாங்கிறது—இப்படிப்பட்ட வேலைகளைத்தான் நான் செய்வேன்.

லதா: அடடே, இவைகளை யெல்லாம் நீ அடிக்கடி வாங்குவியா?

சோமு: நாளைக்குக்கூட நான் ஒரு டிரான்ஸிஸ்டர் வாங்கப் போறேன். என் அக்காளுக்குப் பிறந்த நாள் பரி

சாக என் அப்பா அனுப்பப் போகி ருர். என்னைத்தான் நல்லதாப் பார்த்து வாங்கச்சொல்லியிருக்கிருர். நான் வர்ரேன்.

காட்சி 5

இடம்: லதா வீட்டு வாசல்.
பாத்திரங்கள்: லதா, சோமு, நான்கு சிறுவர்கள்.

சோமு (கையில் உள்ள டிரான்ஸிஸ்டரைக் காட்டி): லதா, லதா, இதோ பார்த்தியா? இப்பத்தான் கடையிலே வாங்கி வர்ரேன். 300 ரூபாய் விலை!

லதா: 300 ரூபாயா?

சோமு: ஆமா, 30 பைசாவுக்குக் கறிகாய் வாங்கவா நான் போவேன்?

(அப்போது இரு சிறுவர்கள் எதிரே உள்ள பிள்ளையார் கோயில் வாசலில் சண்டை போடுகிருர்கள்.)

ஒரு சிறுவன்: டேய், என்னை என்ன நினைச்சாய்?

மற்றவன்: டேய், தோலை உரிச்சிடுவேன்.

முதல் சிறுவன்: உன் காலை ஒடிச்சிடுவேன்.

(இருவரும் ஒருவரை யொருவர் தாக்கி, கட்டிப் புரள்கிருர்கள். அப்போது வேறு இரு சிறுவர்கள் ஓடிவந்து விலக்கிவிடப் பார்க்கிருர்கள்.)

சோமு (அருகே செல்கிருன். சண்டை போடும் இருவரில் ஒருவனைப் பார்த்து): டேய் கப்புவா! விடாதேடா. நல்லா அடி. உம்...குத்து... உதை.

(சுப்பு அடிக்கிருன். சோமு குதிக்கிருன். டிரான்ஸிஸ்டரைக் கீழே வைத்துவிட்டு. சிறிது நேரத்தில் மற்ருெரு பையன் அடி தாங்காமல் ஓடுகிருன். சுப்பு விரட்டுகிருன். சோமுவும் பின்தொடர்ந்து ஓடுகிருன். டிரான்ஸிஸ்டர் வைத்த இடத்திலேயே இருக்கிறது.)

காட்சி 6


இடம்: சோமுவின் வீடு
பாத்திரங்கள்: சோமுவின் அப்பா அம்மா, லதா.

அப்பா: டேய், சோமு, முந்தாநாள் வாங்கி வந்தேனே டிரான்ஸிஸ்டர், அது எங்கேடா?

சோமு: டிரான்ஸிஸ்டரா! நான் பார்க்கல்லியே அப்பா.

அப்பா: என்னடா இது! காலையிலே நீதான் அதை எடுத்துக் கையிலே வச்சிருந்தியாம். உன் அம்மா சொல்ருள்.

அம்மா: ஆமாங்க. அதை வாசலிலேயே வச்சிக்கிட்டிருப்பான்னு நினைச்சேன். எங்கேயோ கொண்டு-போயிட்டான்.



சோமு: இல்லேப்பா. நான் உடனே திருப்பிக் கொண்டாந்து, அது இருந்த ஷெல்ஃபிலே வச்சுட்டேன். அப்புறம்தான் நான் வெளியே போனேன்.

(லதா வருகிருள், கையிலே டிரான்சிஸ்டருடன்.)

அப்பா: ஆ! டிரான்சிஸ்டர்! இது எப்படியம்மா உன் கைக்கு வந்தது?

லதா: எங்க அப்பா அம்மா எங்களைக் காய்கறி வாங்க அனுப்பறது கேவலமாம். இவனே நீங்க கடிகாரம், டிரான்சிஸ்டர், டி. வி. — இப்படி விலே உயர்ந்த சாமான்களை வாங்கத்தான் அனுப்புவீங்களாம். இன்னிக்கு நீங்க டிரான்சிஸ்டர் வாங்கி வரச் சொல்லி இவனை அனுப்பினீங்களாம். இதை 300 ரூபாய்க்கு வாங்கி வந்ததாய் என்னிடம் சொல்லி ஜம்பம் அடிச்சான்.

அப்பா: ஆமா, தினமும் கத்தரிக்காய், வாழைக்காய் வாங்குகிற மாதிரி டி. வி.யும், டிரான்சிஸ்டரும்தான் வாங்குருேம்!

லதா: இவன் ஜம்பம் அடிக்கிறப்போ, இரண்டு பசங்க எங்க வீட்டுக்கு எதிரில் இருக்கிற பிள்ளையார் கோயில் வாசலிலே சண்டை போட்டுக்கிட்டு இருந்தாங்க. அவங்க பக்கத்திலே இவன் ஓடினன். அவங்களிலே ஒருவனை இவனுக்குத் தெரியும்போலேயிருக்கு. சுப்புன்னு பேரு. அவனை நல்லாத் தூண்டி விட்டான். இன்னெருவன் அடிபடறதைப் பார்த்துப் பார்த்து ஆனந்தப்பட்டான். அந்த ஆனந்தத்திலே இந்த டிரான்சிஸ்டரைக் கீழே வச்சிட்டு சுப்புவுக்கு ஊக்கம் கொடுத்தான். கையைக் காலை ஆட்டி உற்சாகமூட்டினன்.

அப்பா: ஏண்டா சோமு, அப்படியா?

சோமு: (மௌனம்)

லதா: சுப்புவோட அடி பொறுக்காமே இன்னெரு பையன் ஓடிட்டான். அவனைத் துரத்திக்கிட்டு சுப்பு ஓடினன். இவனும் அவங்க பின்னலே ஓடிட்டான். திரும்பி வரவேயில்லே. டிரான்சிஸ்டரை மறந்தே போனன். நல்லவேளை, இதை நான் பார்த்துட்டேன். உடனே எடுத்து வந்து வீட்டிலே பத்திரமா வச்சிருந்தேன். இதைத் தேடி இவன் வருவான், வருவான்னு எதிர்பார்த்தேன். வரல்லே. அதனலே நானே கொண்டு வந்திட்டேன். இதோ உங்க டிரான்சிஸ்டர்.

(சோமுவின் அப்பாவிடம் கொடுக்கிருள்.)

அப்பா: அப்படியா சமாசாரம், எல்லாரிடத்திலும் வீண்பெருமை பேசறது, வீண் சண்டைக்குப் போறது, படிக்காமே ஊர் சுத்தறது — இப்படி வாழ்க்கையைப் பாழாக்கிக்கிருனே!

அம்மா: இந்த லதா எவ்வளவு நல்ல பொண்ணு! நீ தெருவிலே விட்டுட்டு வந்த டிரான்சிஸ்டரைப் பத்திரமா எடுத்து வச்சு, வீடு தேடிக்கொண்டு வந்து கொடுக்கிரு.

அப்பா: சோமு, உனக்கு வெட்கமாயில்லே? நீ இப்படிப் பண்றது உனக்கு மட்டுமா? உன் அப்பா அம்மாவுக்கும் அவமானத்தைத் தேடித் தருதே! சேச்சே... உன்னை இனிமேல்....

சோமு (கண்களில் நீர் வழிய): அப்பா, இனிமேல் இந்த மாதிரியெல்லாம் செய்ய மாட்டேன் அப்பா. வீம்பு பேச மாட்டேன்; வீண் வம்புக்குப் போக மாட்டேன்; பிறரைக் கேலி செய்து துன்புறுத்த மாட்டேன். ஒழுங்காய்ப் படிச்சு முன்னுக்கு வருவேன் அப்பா.

அப்பா: சரி, சரி. இப்போ லதாவிடத்திலே மன்னிப்புக் கேள்.

சோமு: லதா, உண்மையிலேயே நான் திருந்திட்டேன் லதா. என்னை மன்னிச்சிடு லதா.

லதா: சோமு, மன்னிப்பு எதுக்கு? கண்ணைத் துடை. நீ நல்லவனு மாறிவிட்டால் எல்லோருக்குமே நல்லது தானே? சரி, நான் வரட்டுமா?

அம்மா: லதா, கொஞ்சம் இரு. இதோ இனிப்புப் பலகாரம் கொண்டு வாரேன். 300 ரூபாய் டிரான்ஸிஸ்டரைப் பத்திரமாய்க் கொண்டு வந்து சேர்த்திியே.

(அம்மா தட்டு நிறைய இனிப்புக் கொண்டுவந்து கொடுக்கிருள்.)

லதா: சோமு, நீயும் எடுத்துக்கோ.

சோமு: (தயங்குகிருன்.)

லதா: சோமு, நீ எடுத்துக்கிட்டாத்தான் நான் எடுத்துக்குவேன். நீதான் திருந்திட்டியே!

அம்மா: இனிமேல், எங்க சோமு உன் மாதிரி, முரளி மாதிரி நல்ல பிள்ளையாக நடந்துக்குவான்.


லதா: அப்படின்னு, உங்க பிள்ளை திருந்தினதுக்கு நீங்களும் ஸ்வீட் சாப்பிட வேண்டாமா? வாங்க, எல்லாரும் சாப்பிடுவோம்.

அப்பா, அம்மா: சரி, சாப்பிடுவோம்.

(நால்வரும் சாப்பிடுகிருர்கள்.)

(திரை)

நாடோடிப்







குள்ளக் குள்ளனே!

குள்ளக் குள்ளனே!
குண்டு வயிறனே!
வெல்லப் பிள்ளையாரே,
விநாயக மூர்த்தியே!

சொல்லிக்கிறெ சாமியிடம்:

நான் வந்து நேரமாச்சு
நந்திக்குத் தீபம் ஆச்சு
பிரகாரம் முறைச்சு
போய் வாரேன் சாமி.

அழகர் யானை

யானை யானை அழகர் யானை
அழகரும் சொக்கரும் ஏறும் யானை

கட்டிக் கரும்பை முறிக்கும் யானை
காவேரி நீரைக் கலக்கும் யானை

குட்டி யானைக்குக் கொம்பு முளைச்சுது
பட்டணமெல்லாம் பறந்தோடிப்
போச்சு!

பறவைக் கப்பல்

ஏ....ஏ....ஏ... பாட்டியா
ஏரோப்பிளேன் பார்த்தியா?
பாட்டன் பூட்டன் நாளையிலே
பறவைக் கப்பல் பார்த்தியா?

அத்தானுக்கு வரவேற்பு

அத்தான், அத்தான், வாங்க!
ஆசனப் பலகையிலே இருங்க.

குட்டக் குளத்துக்குப் போங்க,
குளிச்சு முழுகி வாங்க!

காசு இருந்தால் தாங்க
தோசை சுட்டுத் தாரேன்.

தின்னுப்பிட்டுப் போகையிலே
பொண்ணு கட்டித் தாரேன்.

மாங்காய்த் தலை முருகன்

மாங்காய்த் தலை முருகன்
மஞ்சள் சட்டை மாட்டி

மொட்டை வண்டி ஏறி
சந்தைக் கடை போனான்.


விதம் விதமாய் மிட்டாய்
அடுக்கடுக்காய்க் கண்டான்

விரைந்தோடிப் போயி
லட்டு விலை கேட்டான்.

''லட்டு கேட்ட பையா
துட்டு எங்கே?'' என்றான்.

மாங்காய்த் தலை முருகன்
''துட்டு இல்லை'' என்றான்.





பாடல்கள்

லட்டு மிட்டாய்க்காரன்
லட்டும் இல்லை என்றான்.

சங்குச் சக்கரச் சாமி

சங்குச் சக்கரச் சாமி வந்து
சிங்குச் சிங்கென ஆடுமாம் — அது
சிங்குச் சிங்கென ஆடுமாம்.

கொட்டுக் கொட்டச் சொல்லுமாம்— அது
கூத்தும் ஆடப் பண்ணுமாம்.

உலகம் மூணும் அளக்குமாம் — அது
ஓங்கி வானம் பிளக்குமாம்.

கலகலன்னு சிரிக்குமாம்.
காணக் காண இனிக்குமாம்.

காடும் வீடும்

கொள்ளுப் போட்டா எள்ளு விளையும்
எங்க காட்டிலே!

கோழி வந்து குட்டி போடும்
எங்க வீட்டிலே!

கடலை போட்டா கம்பு விளையும்
எங்க காட்டிலே!

கடுவம் பூனை குஞ்சு பொரிக்கும்
எங்க வீட்டிலே!

அவரை போட்டா துவரை விளையும்
எங்க காட்டிலே!

ஆனை போடும் பூனைக் குட்டி
எங்க வீட்டிலே!

மகன் என்ன செய்கிறான்?

ஏண்டி குட்டி
என்னடி செய்யறே?

பாம்புக் குட்டிக்குப்
பல்லு விளக்கிறேன்.

ஏண்டி குட்டி,
என்னடி செய்யறே?

மைனாக் குஞ்சுக்கு
மைப் போடுறேன்.

காலை வலிக்குதே!

காலை வலிக்குதே
கட்டிலைத் தூக்கிப் போட்டுக்கோ

மேலே வலிக்குதே
வெந்நீர்த் தண்ணியை
ஊத்திக்கோ

ஊசி விழுந்திருச்சு
உத்து உத்துப் பார்த்துக்கோ

பாசி விழுந்திருச்சு
பாத்துப் பாத்து எடுத்துக்கோ

வடிச்ச கஞ்சி கொட்டிப்போச்சு
வாரி வாரிக் குடிச்சுக்கோ

கட்டுச்சோறு நொந்துபோச்சு
புட்டுப் புட்டுத் தின்னுக்கோ.









துஷ்டரைக் கண்டால்...?

துஷ்டரைக் கண்டு தூர விலகினால், துஷ்டர்கள் தொகை பெருகி விடாதா?

- சிங்காரத்தின் கேள்வி

தமிழ் வகுப்பு நடந்து கொண்டிருந்தது. தமிழாசிரியர் தங்கவேலர், ''மாணவர்களே, துஷ்டரைக் கண்டால் நாம் என்ன செய்ய வேண்டும்?'' என்று கேட்டார்.

''தூர விலக வேண்டும்'' என்று பதில் சொன்னான் பத்மநாபன்.

''துஷ்டரைக் கண்டால் தூர விலகு என்பது பழமொழி. ஆனால், யார் யாருக்கு எவ்வளவு தூரம் விலகிச் செல்ல வேண்டும் என்பதை விளக்குகிறது ஒரு பாட்டு.''

''அப்படிக்கூட ஒரு பாட்டு இருக்கிறதா?'' என்று வியப்புடன் கேட்டான் வேதகிரி.

''ஆம், 'நீதி வெண்பா' என்று ஒரு நூல் இருக்கிறது. அதிலே நூறு பாடல்கள் இருக்கின்றன. அவற்றிலே ஒரு பாட்டில், கொம்புள்ள மிருகத்தைக் கண்டால் 5 முழம் ஒதுங்க வேண்டுமாம். கொம்புள்ள மிருகங்கள் என்ன, என்ன என்றுதான் உங்களுக்குத் தெரியுமே!''

''தெரியும் சார். மாடு, ஆடு, மான்'' என்றான் மாணிக்கம்.

''குதிரையைக் கண்டால் பத்து முழம். மதயானையைக் கண்டால் ஆயிரம் முழமும் ஒதுங்கிச் செல்ல வேண்டுமாம். இவைகளுக்கெல்லாம் முழக் கணக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், வம்பு நிறைந்த துஷ்டர்களைக் கண்டால், கண்களுக்குத் தெரியாத தூரத்துக்கு நாம் சென்றுவிட வேண்டுமாம். அப்படித்தான் அந்தப் பாட்டிலே கூறப்பட்டிருக்கிறது. இப்போது அந்தப் பாட்டை நமசிவாயம் படிப்பான், கேளுங்கள்.''

நமசிவாயம் எழுந்தான். பாட்டைப் படித்தான்.

கொம்புளதற்கு ஐந்து, குதிரைக்குப்
பத்துமுழம்
வெம்பு கரிக்கு ஆயிரந்தான்
வேண்டுமே — வம்புசெறி
தீங்கினர்தம் கண்ணில்
தெரியாத தூரத்து
நீங்குவதே நல்ல நெறி

''இந்தப் பாடலில் ஏதேனும் சந்தேகம் இருந்தால் கேட்கலாம்'' என்றார் தமிழாசிரியர் தங்கவேலர்.

''சார், 'வெம்பு கரி' என்றால் என்ன சார்?'' என்று கேட்டான் எழுமலை.

''வெம்பு என்றால் கோபம். கோபம் கொண்ட யானை — அதாவது இங்கே மதயானை என்று பொருள் கொள்ள வேண்டும்.''

சிங்காரம் மெல்ல எழுந்தான்.

''சார், எனக்கு ஒரு சந்தேகம்...'' என்று இழுத்தான்.

''கேள், சந்தேகம் இருந்தால் உடனுக்குடன் தெளிவு படுத்திக் கொள்ள வேண்டும். சும்மா இருக்கக் கூடாது. ம்ம், உன் சந்தேகம் என்ன? எந்தச் சொல்லுக்குப் பொருள் புரியவில்லை?''

''எல்லாச் சொற்களையுமே மிகவும் தெளிவாக நாங்கள் புரிந்துகொள்ளும்படி செய்துவிட்டீர்களே!... ஆனால், எனக்கு ஏற்பட்டுள்ள சந்தேகம்....''

''ஏன் தயங்குகிறாய் சிங்காரம்? தயங்காமல் கேள்.''

''ஏன் சார், துஷ்டர்களைக் கண்டு நாம் தூரத் தூர ஓடினால், துஷ்டர்களின் தொகை பெருகிவிடாதா? நாட்டிலே அநியாயம் அதிகரிக்காதா?''

''சிங்காரம், நீ நினைப்பது சரியே. எனக்கும் உன்னைப் போலவே இந்தப் பாட்டைப் படிக்கும்போதெல்லாம் சந்தேகம் தோன்றும். நம் மகாகவி பாரதியாரும் இந்தப் பாட்டைப் படிக்காமலா இருந்திருப்பார்? ஆனாலும், அவர் இதற்கு நேர் மாறாகப் பாடியிருக்கிறாரே! எந்தப் பாட்டிலே அவர் அப்படிப் பாடியிருக்கிறார் என்று உனக்குத் தெரியுமா, சிங்காரம்?''

''தெரியும் சார். பாப்பாப் பாட்டிலே பாடியிருக்கிறார்.''

''சரியாகச் சொன்னாய் சிங்காரம். அந்தப் பாட்டு வரிகளையும் பாடிக் காட்டு; எல்லாரும் கேட்கட்டும்.'

சிங்காரம் தொண்டையைக் கனைத்துக்கொண்டு பாடினான்:

பாதகம் செய்பவரைக் கண்டால் — நாம்
பயம்கொள்ள லாகாது பாப்பா.
மோதி மிதித்துவிடு பாப்பா — அவர்
முகத்தில் உமிழ்ந்துவிடு பாப்பா.

இனிமையான குரலில், எடுப்பாகச் சிங்காரம் பாடி முடித்ததும், ஆசிரியரும் மாணவர்களும் கைதட்டிப் பாராட்டினார்கள்.

''பாரதியார் பாதகம் செய்பவர்களைக் கண்டால், என்ன செய்ய வேண்டும் என்று சொல்கிறார்? ஓடி ஒளிந்து கொள்ளச் சொல்லவில்லை. அந்தப் பாதகர்களின் அருகிலே பயமில்லாமல் செல்ல வேண்டும். அவர்களை மோதி மிதிக்க வேண்டும்; அவர்களின் முகத்திலே காறித் துப்ப வேண்டும் என்றெல்லாம் பாடியிருக்கிறார். பாரதியார் பாடியிருப்பது போல், நம் நாட்டுக் குழந்தைகள் செய்யத் தொடங்கிவிட்டால், யாராவது பாதகம் செய்வார்களா? இல்லை, செய்யத்தான் நினைப்பார்களா? அப்படிப்பட்டவர்கள் பயந்து நடுநடுங்குவார்கள்! அவர்களின் தொகை நாளுக்கு நாள் குறையும்! நாடு நன்மை அடையும்!'' என்று உணர்ச்சியோடு கூறிய தங்கவேலர்,

''பாரதியின் புதிய ஆத்திசூடியைப் படித்திருப்பீர்கள். அதன் முதல் வரியே, 'அச்சம் தவிர்' என்பதுதானே! இப்படிப் பாரதியார் புதிய புதிய கருத்துக்களை, நாட்டு மக்களுக்குத் தேவையான நல்ல கருத்துக்களைப் பாடியதால்தான் நாம் அவரைப் 'புதுமைக் கவி' என்கிறோம். 'புரட்சிக் கவி' என்கிறோம். 'தேசியக் கவி' என்கிறோம்.''

தமிழாசிரியர் தங்கவேலரின் பேச்சை ஆமோதிப்பது போல். 'டாண், டாண்' என்று பகல் சாப்பாட்டு மணி அடித்தது!

சு	வ	டி
வ	ய	ல்
டி	லீ	லி

இரு விதத்தில் படிக்கலாம் - பரிசு பெற்றோர்:

சென்ற இதழில் 'இரு விதத்தில் படிக்கலாம்' என்று ஒரு கட்டத்திற்குள் மூன்று சொற்களை வெளியிட்டு, 'இதே போல் உங்களாலும் எழுத முடியுமா? அதிகமான கட்டங்கள் யார் அனுப்புகிறார்கள் என்று பார்ப்போம்' என அறிவித்திருந்தோம்.

6 பேர் 100க்கும் மேலான கட்டங்களை அனுப்பியிருக்கிறார்கள்! மொத்தம் 143 பேர் இதில் கலந்து கொண்டு எங்களைத் திணற அடித்து விட்டார்கள்!

அவற்றில் பொருத்தமாகவும், அதிகமாகவும் கட்டங்கள் அனுப்பிய இருவருக்குப் பரிசு வழங்குவதென முடிவு செய்துள்ளோம்.

முதல் பரிசு:

சரியாக இருந்தவை — 103
து. சந்திரா
தரம் ஆறு, ஈ பிரிவு
சிவராம் நடுநிலைப் பள்ளி
மம்சாபுரம் - 626110
ஸ்ரீவில்லிபுத்தூர் வழி
(இராமநாதபுரம் மாவட்டம்)

இரண்டாம் பரிசு:

சரியாக இருந்தவை — 69
மு. கா. தமிழ்ச் செல்வன்
243, கோவிந்த செட்டித் தெரு,
காவேரிப்பட்டணம் — 635112
தருமபுரி மாவட்டம்

முதற் பரிசு பெற்ற சந்திராவுக்குத் தொடர்ந்து ஓராண்டுக்கும், இரண்டாவது பரிசு பெற்ற தமிழ்ச் செல்வனுக்குத் தொடர்ந்து ஆறு மாதங்களுக்கும் 'கோகுலம்' இதழ் அன்புப் பரிசாக அனுப்பிவைக்கப்பெறும். -ஆசிரியர்

நாங்கள் செய்த நல்ல செயல்கள்



பிள்ளையைச் சேர்த்தேன் பெற்றோரிடம்!

இரிஷிவந்தியத்தில் அன்று தேர்த் திருவிழா. அதிகக் கூட்டம். நான் ஓர் ஓரமாக நின்று கொண்டிருந்தேன். சிறுவர், சிறுமியர் பலரும் கையில் விளையாட்டுப் பொருள்கள் அல்லது தின்பண்டங்களுடன் குறுக்கும் நெடுக்குமாகப் போய்க் கொண்டிருந்தார்கள்.

ஆனால், ஒரே ஒரு சிறுவன் மட்டும் தனியாக நின்று அழுது கொண்டிருந்தான். அவனுக்குவயது நான்கு இருக்கும். நான் அவனையே உற்றுப் பார்த்தேன். பெற்றோரைப் பிரிந்து அழுகிறான் என்பதை உணர்ந்தேன். உடனே அவவ அருகிலே சென்றேன். அன்புடன் அவனைத் தூக்கிக் கொண்டேன்.

''தம்பி, உன் பெயர் என்ன?''என்று கேட்டேன்.

''வேலாயுதம்'' என்று அழுகை மாறு மலே கூறினான்.

''உன் அப்பா, அம்மா எங்கே?'' என்று கேட்டேன்.

அவன் கோயில் மண்டபத்தைச் சுட்டிக் காட்டினான். மண்டபத்தை நோக்கி நடந்தேன். மூன்று முறை மண்டபத்தைச் சுற்றி வந்துவிட்டேன். ஆனாலும் சுற்றி வந்ததுதான் மிச்சம்! அவன் பெற்றோரைக் கண்டு பிடிக்க முடியவில்லை.

ஒலிபெருக்கிக்காரரிடம் சொல்லிப் பையனை ஒப்படைத்து விடலாமா என்று நினைத்தேன். அப்போது, ''அதோ, அப்பா! அம்மா!''என்று கையைக் காட்டினான், வேலாயுதம்.

உடனே விரைந்து சென்று அவன் காட்டியவர்களை அழைத்தேன். அவர்கள் என் அருகே ஓடோடி வந்தார்கள். ''நல்ல காலம். எங்கள் குழந்தை கிடைத்ததே!'' என்று என் கையிலிருந்த குழந்தையை வாங்கிக் கொஞ்சினாள், அவன் தாய்.

குழந்தையைப் பத்திரமாகச் சேர்த்ததற்கு எனக்கு நன்றி கூறினார், அவன் தந்தை.

கொளத்தூர் ஆ. ஜெயா,
அரசினர் மேல்நிலைப் பள்ளி,
இரிஷிவந்தியம்

*

இரண்டு வழிகளில் உதவும் என் புத்தகங்கள்!



நான் பள்ளியில் 6வது படிக்கும் மாணவன். எங்கள் வீட்டில் வேலை செய்யும் அம்மாளின் மகன் என்னை விட ஒரு வயது சிறியவன்.

நான் புத்தகங்களை நன்றாக வைத்துக்கொள்ளும் வழக்கம் உடையவன். ஒவ்வொரு புத்தகத்துக்கும் செய்தித்தாள் அட்டை, அதன் மீது மற்றொரு அட்டை போட்டு வைத்துக் கொள்வேன். அதனால் வருடக் கடைசியில் கூட என் புத்தகங்கள் புத்தம் புதியவையாகக் காட்சி யளிக்கும்.

நான் ஒவ்வோராண்டும் பரீட்சை முடிந்தவுடன் எங்கள் வீட்டில் வேலை செய்யும் அம்மாளின் மகனுக்குப் புத்தகங்களைக் கொடுத்துவிடுவேன். அதனால் அந்த அம்மாள் இதுவரை புத்தகங்களை விலை கொடுத்து வாங்கியதில்லை. நான் தரும் புத்தகங்களையே அந்தப் பையன் பயன்படுத்துவான். வருட முடிவில் அப்புத்தகங்களைப் பாதி விலைக்கு விற்று, நோட்டுப் புத்தகங்கள் வாங்குவான். இப்படி என்னுடைய புத்தகங்கள் அவனுக்கு இரு வழிகளில் பயன்படுகின்றன.

கே. டி. பிரபாகரன்,
அழகப்பா மெட்ரிகுலேஷன் பள்ளி, புரசைவாக்கம், சென்னை



இறுதித் தேர்வுக்கு எனது உதவி

நான் அப்போது சிறு கிராமம் என்னும் ஊரில் படித்துக் கொண்டிருந்தேன். என் வகுப்பில் பிரபாவதி என்றொரு பெண் இருந்தாள். அவள் மிகவும் ஏழை.

அவளுடைய உறவினர்கள் எல்லோரும் வசதியானவர்கள். அவர்கள் வீட்டுப் பெண்களும் எங்களோடு படித்தார்கள். ஆனால், பிரபா அவர்களை விட என்னிடமே நெருங்கிப் பழகினாள். அவளது பாசம் என்னைக் கவர்ந்தது.

என் தந்தைக்கு உத்தியோக மாற்றம் ஏற்பட்டதால், நாங்கள் பள்ளி ஆண்டின் நடுவிலே அந்த ஊரை விட்டு வரும்படி நேர்ந்து விட்டது. நானும் பிரபாவும் கடிதம் மூலமாகத் தொடர்பு கொண்டோம்.

ஒரு நாள் பிரபா எனக்கு எழுதியிருந்த கடிதத்தில் ''நான் பத்தாம் வகுப்பு அரசாங்கத் தேர்வு எழுத இயலாத நிலையில் இருக்கிறேன். தேர்வுக் கட்டணம் கட்ட என் பெற்றோரால் முடியவில்லை. ஏழ்மையால் என் படிப்பு தடைப்படும் நிலைக்கு வந்துவிட்டது.'' என்று குறிப்பிட்டிருந்தாள்.

நன்றாகப் படிக்கக் கூடிய பெண்ணுக்கு இப்படியொரு துரதிர்ஷ்டமா? நான் மிகவும் வருந்தினேன். உடனே என் அப்பாவிடம் விவரத்தைக் கூறி,



பதினைந்து ரூபாய் வாங்கி அவளுக்கு அனுப்பி வைத்தேன்.

பணக்கார உறவினர்கள் இருந்தும் அவர்களிடம் போய்க் கேட்காமல், சில மாதங்களே பழகிய என்னிடம் அவள் உதவி பெற்றது எனக்குப் பெருமையாக இருந்தது. பிரபா இறுதித் தேர்வை நன்றாக எழுதினாள். என் நல்ல செயலின் விளைவு என் உள்ளத்தைப் பூரிக்கச் செய்தது.

ஜே. கி. பூங்குழலி,
அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளி,
திருக்கோவிலூர்

புத்தகம்

- உலகில் சாகா வரம் பெற்ற பொருள்கள் புத்தகங்களே. -கதே
- நூல்களே எனக்கு நண்பன். அவை எல்லா நாடுகளிலும் உண்டு. -பெட்ராக்
- படிப்பில் பற்றில்லாத அரசனாயிருப்பதை விட ஏராளமான நூல்களை உடைய ஏழையாயிருப்பதையே விரும்புவேன். -மக்காலே
- சிந்தியாமல் படிப்பது ஜீரணியாது உண்பதை ஒக்கும். -பா
- வாழ்க்கை வரலாற்றைப் படியுங்கள். அதுவே வாழ்க்கைக்கு வழி காட்டும் -டிஸ்ரேலி
- சில புத்தகங்களைச் சுவைத்துப் பார்க்க வேண்டும். சிலவற்றை அப்படியே விழுங்கிவிட வேண்டும். சிலவற்றை மட்டும் நன்கு சுவைத்து ஜீரணம் செய்ய வேண்டும். -பேக்கன்
- சுவாமி விவேகானந்தரின் நூல்கள் அனைத்தையும் மிகவும் அலசிப் படித்திருக்கிறேன். அதன் காரணமாகத் தாம் நாட்டின் மீதுள்ள எனது அன்பு ஆயிரம் மடங்கு பெருகியிருக்கிறது. -காந்தியடிகள்
- கெட்ட புத்தகம் திருடனை விட மோசம். -இத்தாலி

- ஏ. கே. செட்டியார் தொகுத்த 'புத்தகம்' என்ற நூலிலிருந்து.





சார், தபால்!

● 'கோகுலம்' எடுத்த எடுப்பிலேயே களை கட்ட ஆரம்பித்து விட்டது. சர்க்கரைப் பொங்கல் கூட கோகுலத்தின் சுவையில் கசந்தே போய்விட்டது.

- ரோஹிணி, திருத்துறைப்பூண்டி

● 'தகுதிகளால்மட்டுமே உயர்வேன்' என்ற கருத்தூமுத்து எங்கள் நெஞ்சிலே நிறைந்துள்ளான். 'வெற்றி வேல், வீரவேல்' படக் கதை வினுவின் கைவண்ணத்துடன் அமர்க்களமாக ஆரம்பமாகி யுள்ளது. மொத்தத்தில் 'கோகுலம்' ஒரு பல்சுவைக் களஞ்சியம்.

- இரா. விஷ்ணுப்ரியா, இரா. பாலாஜி
இரா. சீனிவாசன், இரா. புவனேஸ்வரி
வேலூர்

● வண்ணக் கலவையும், வழவழப்புக் காகிதமும் இல்லாமலேயே முழுமையான ஒரு சிறுவர் பத்திரிகையை உருவாக்க முடியும் என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டு 'கோகுலம்'.

- விண்மணி, போடிநாயக்கனூர்

● இத்தகைய நற்பணியை மீண்டும் தொடர்ந்தமைக்கு இறைவனுக்கு நன்றி செலுத்துகிறேன். மேலும் எனது பெற்றோர்களும், அண்ணனும், தங்கையும், தம்பியும் விரும்பிப் படிக்கிறார்கள். அடுத்த இதழ் எப்போது வரும் எனத் துடிக்கிறேன்.

- எஸ். தமிழ்ச்செல்வம், புதுவலசை

● 'கைக் குடையும் கால்செருப்பும்' படித்து எங்களிடம் இருந்த செருக்கை அகற்றிக் கொண்டோம்.

- சிறுவர் திருக்குறள் அறிவாலயச்
சிறுவர்கள், வேலூர்

● வாழ்க்கைக்குத் துணை நிற்கும் தோழனாக அமைந்திருக்கிறது. கோகுலம். ஜோர்! ஜோர்!

—பாற்கடல் சிறுவர் சங்கத்தைச் சேர்ந்த
22 குழந்தைகள், மூவரசம்பேடு,
சென்னை-91

● 'யானையும் பானையும்' பாடலைப் படிக்க என் பையன் ஜயராமன் (2ஆம் வகுப்பில் படிப்பவன்) ஆவல் கொண்டு எழுத்துக் கூட்டினான். ஆனால் பள்ளியில் கற்ற 'னை'யும் தங்கள் 'னை'யும் அவனைத் தடுமாறவைத்தன.

- எஸ். சீனிவாசன், திருவான்மியூர்

● 'கூடைப் பந்து ஆடுவோம்', 'இமயமுதல் குமரிவரை', 'சேகரின் பொழுது போக்கு', 'கேள்வி நேரம்' இவை எல்லாம் பொது அறிவு வளர மிகவும் உபயோகமாக இருக்கின்றன.

—ஏ. பாபு, கோவை-41

● கதைகளைக் குறைத்துக் கொண்டு இன்னும் அதிகமான பொது அறிவுச் செய்திகளை வெளியிடுங்கள்.

—எம். முகம்மது இப்ராஹீம், குளச்சல்

● 'கலிவரின் பயணம்' நல்ல தமாஷ் படம் பார்த்தது போல் சந்தோஷமாய் இருந்தது.

- ஆர். எம். இராஜபாரதி,
இடையன்பெருவலை

● என் அப்பா எனக்கு வாங்கித் தந்த கோகுலத்தைப் பார்த்துவிட்டு, "சிறுவர் பத்திரிகைக்கு 2 ரூபாய் அதிகம்" என்றார் அவரது நண்பர். "இந்தக் காலத்தில் ஒரு மசால் தோசையும் காப்பியும் சாப்பிட்டாலே 2 ரூபாய்க்கு மேல் ஆகிறது. ஒரு கோன் ஐஸ் ஒன்றரை ரூபாய். பையனுக்கு மாதத்திற்கு 2 ரூபாய் செலவிடக் கூடாதா?" என்றார் என் அன்புள்ள அப்பா.

—எஸ். சேதுராமன், திருச்சி-2

● 'குப்புசாமி, அப்புசாமி' பலே பலே ஜோர். குப்புசாமி அப்புசாமியை ஒவ்வொரு இதழிலும் சந்திக்கும்படி செய்வீர்களா?

—எம். சித்ரா, கண்டவராயன்பட்டி

● குழலோன் துணையிருக்க, சிறுவர் சிறுமியர் ஆதரவு இருக்க, காஞ்சி ஆசார்யாள் ஆசி இருக்க, கோகுலம் தன் பணியில் வெற்றி நடை போடத் தடை ஏது?

—என். சாரதா, திருவாடானை

● சினிமா பற்றி இல்லாமல் நடத்துவீர்கள் என்று நம்புகிறேன்.

—டி.எஸ். வெங்கட்ராமன், வத்தலக்குண்டு

● 'தேரைக் கொடுத்தான் பாரி சிங்காரம் கேட்டான் கேள்வி' படித்தேன். சிங்காரத்தின் சந்தேகத்தை நன்றாகத் தீர்த்துவைத்தார் தலைவர். ஆனால் கட்டுரை எழுதியவர் பெயரைக் காணோமே!

—சி. குழந்தைவேல், அருப்புக்கோட்டை

● பாடல்களைப் பெரிய எழுத்துக்களில் வெளியிட்டால் நன்றாக இருக்குமே!

—கு. முத்துவைரவன், காரைக்குடி

● கோகுலம் சிறுவர் சங்கத்தை ஆரம்பித்து அதில் ஒரு நாள் கதை சொல்லும் நிகழ்ச்சியை நடத்தப் போகிறோம்.

—என். நாராயணசாமி, கோவில்பட்டு

ராபின்சன் குரூசோ

உலகப் புகழ் பெற்ற சிறுவர்கதை - 2





எச். கிருஷ்ணமூர்த்தி

இங்கிலாந்து நாட்டில் யார்க் என்று ஒரு நகரம். அதில் ஒரு பணக்கார வியாபாரி. அவனுக்கு மூன்று பிள்ளைகள். கடைசிப் பிள்ளையின் பெயர் ராபின்சன் குருசோ. இளமையிலிருந்தே குருசோ தைரியசாலி. கடல் பயணக் கதைகளையும், சாகசச் செயல்களையும் படித்துப் படித்துக் கற்பனை உலகில் மிதந்து கொண்டிருந்தான்.

குருசோவின் அப்பாவுக்கு ஒரு நண்பர். அவர் கப்பல் கேப்டன். அந்தக் கப்பல் ஒரு வாரத்தில் தென் அமெரிக்காவுக்குப் புறப்படத் தயாராக இருந்தது. குருசோவும் அந்தக் கப்பலில் போக ஆசைப்பட்டான். அப்பாவிடம் அனுமதி கோரினான். ''கடலில் அடிக்கடி புயல் வீசும். ஆபத்துக்கள் அதிகம். ஆகையால் நீ போக வேண்டாம். வீட்டிலேயே இரு. நீ சம்பாதித்து ஒன்றும் ஆகவேண்டாம்'' என்றார் அப்பா. குருசோவுக்கு அப்போது வயது பத்தொன்பது. அவனால் ஆசையை அடக்க முடியவில்லை. அப்பாவுக்குத் தெரியாமல் வீட்டை விட்டு வெளியேறினான். கப்பலில் சேர்ந்துகொண்டான்.

1951 ஆம் ஆண்டு. செப்டம்பர் மாதம் முதல் தேதி குருசோவின் கப்பல் புறப்பட்டது. பயணம் இனிமையாக இருந்தது. குருசோ பல புதிய நாடுகளைக் கண்டான். விநோதமான பல பறவைகளையும், விலங்குகளையும் பார்த்தான். அந்த நாட்டு மக்கள் ஆங்கிலேயர்களைப் போல இருக்கவில்லை. சிலர் கறுப்பு. சிலர் பழுப்பு. சிலர் மிகக் குறைந்த ஆடையே உடுத்தியிருந்தனர். சிலர் மனித மாமிசத்தையும் சாப்பிட்டனர்!

* * *

கப்பல் பிரேசில்நாட்டைக் கடந்தது. அப்போது ஒரு பயங்கரச் சூறாவளி உருவானது. கடல் கொந்தளித்தது. பெரிய அலைகள் எழுந்து கப்பலைத் தாக்கின. கப்பல் மூழ்கிவிடுமோ என கேப்டன் பயந்தார். புயலிலிருந்து தப்புவதற்காகக் கப்பல் வழக்கமான பாதையை விட்டு விலகிச் சென்றது. கடலால் விழுங்கப்படும் ஆபத்திலிருந்து குருசோ அப்போது காப்பாற்றப்பட்டான். ஆனாலும் காட்டுமிராண்டிகளால் முழுங்கப்படும் ஆபத்தில் பிறகு சிக்கிக் கொண்டான்.

எதிரே கரை தெரிந்தது. அலைகள் மோதி மோதிக் கப்பலைக் கரைக்குத் தள்ளின. ''கப்பல் உடையப் போகிறது! படகை இறக்குங்கள்'' என்று கேப்டன் உத்தரவிட்டான். மாலுமிகள் படகை இறக்கினர். குருசோவும் சேர்ந்து கொண்டான். புயல் அதிகரித்தது. காற்று சீறியது. அலைகள் மலையளவு உயர்ந்தன. ஒரு பெரிய அலை எழுந்து படகைக் கவிழ்த்தது. அனைவரும் கடலில் தூக்கி எறியப்பட்டனர்.

அப்பாவின் பேச்சைக் கேளாததற்காக குருசோ மிகவும் வருந்தினான்.

குருசோ நீந்தினான். இன்னொரு அலை எழுந்து அவனைத் தூக்கிக் கரையில் போட்டது. அவன் நிறையக் கடல் நீரைக் குடித்திருந்தான். உயிரே போய்விடும்போல் இருந்தது. அருகிலிருந்த ஒரு பாறையை இறுகப் பிடித்துக் கொண்டான். கொஞ்ச நேரம் கழித்து எழுந்தான். நண்பர்களைத் தேடினான். அவர்கள் இருந்த அடையாளமே தெரியவில்லை. எல்லோரும் மூழ்கிப் போயிருந்தனர். குருசோ தன்னந் தனியனாக விடப்பட்டான். அவனைச் சோர்வும் தூக்கமும் ஆட்கொண்டன. தூங்குவதற்கு இடம் தேடினான். அருகில் பாதுகாப்பாக ஒரு மரம் இருந்தது. அதன் மீது ஏறி உறங்கினான்.

பொழுது புலர்ந்தது. கடற் கரைக்குச் சென்றான். புயல் ஓய்ந்திருந்தது. கடல் அமைதியாக இருந்தது. கரையின் அருகே கப்பல் தரை தட்டி உடைந்து கிடந்தது. குருசோவுக்குப் பசி. நீரில் குதித்துக் கப்பலுக்கு நீந்தினான். கப்பலுக்குள் புகுந்து தேடிப் பார்த்தான். உணவுப் பொருட்களும் ஆயுதங்களும், பலவிதக் கருவிகளும் பத்திரமாக இருந்தன. முதலில் பசி ஆறினான். அவனுக்குத் தேவையான பொருள்களையெல்லாம் கரைக்கு எடுத்துச் செல்வதெனத் தீர்மானித்தான்.

கரைக்கு வந்து மரக் கட்டைகளைத் திரட்டினான். ஒரு கட்டுமரமாக இணைத்தான். அதை ஓட்டிக் கொண்டு கப்பலுக்குப் போனான். உணவு, துணி மணிகள், கருவிகள், துப்பாக்கி, வெடி மருந்து, ஆயுதங்கள் முதலியவற்றைத் தனித் தனியாகக் கட்டிக் கரைக்குக் கொண்டு வந்தான். கப்பலில் இருந்த ஒரு நாயும், இரு பூனைகளும் அவனிடம் ஓடிவந்தன. அவற்றையும் துணைக்கு அழைத்துக் கொண்டான்.

கடற்கரை அருகில் ஒரு குன்று இருந்தது. அதன் மேல் ஏறி நாற்புறமும் நோக்கினான். அது ஒரு தீவு. வீடோ, வயல்களோ இல்லை. மனிதர்கள் வசிக்கும் அறிகுறிகளும் தென்படவில்லை. பறவைகள் ஏராளமாக இருந்தன. குன்றுக்குப் பக்கத்தில் சிறிய சமதரை. அந்த இடத்தில் கூடாரம் போட்டான்.





அருகில் ஓர் ஓடை இருந்தது. கூடாரத்தைச் சுற்றிக் கம்புகளை நட்டான். பலத்த வேலி அமைத்தான். குன்றில் ஒரு குகை இருந்தது. அதில் ஆயுதங்களைக் குவித்தான். கப்பலிலிருந்து திரட்டிய பொருள்களைக் கூடாரத்திலும் குகையிலும் அடுக்கி வைத்தான்.

தன்னந் தனியாக இருக்கிறோமே என்று நினைத்தான். அது அவனை மிகவும் வருத்தியது. 1659-ஆம் ஆண்டு செப்டம்பர் 30ம் நாள் இந்தத் தீவை அடைந்தேன்'' என்று ஒரு பலகையில் செதுக்கினான். கிழமை, மாதம் தெரிவதற்காக இன்னொரு பலகையில் சிறு சிறு கோடுகளை வரைந்து வந்தான்.

குரூசோவுக்குப் பல தேவைகள். மேசை, நாற்காலி, பானை, சட்டை, குடை — இப்படிப் பல பொருள்கள் தேவைப்பட்டன. அவற்றை உண்டாக்குவதற்கு ஏற்ற சரியான பொருள்களோ, கருவிகளோ அவனிடம் இல்லை. ஆயினும் முயற்சியைக் கைவிடவில்லை. கடுமையாகவும், பொறுமையாகவும் உழைத்தான். நாட்கள், மாதங்கள், ஆண்டுகள் உருண்டன. ஒவ்வொரு பொருளைச் செய்து முடிக்கும்போதும் அவன் புது மகிழ்ச்சி அடைந்தான்.

குரூசோவின் உணவு இருப்புக் குறைந்து கொண்டே போயிற்று. துப்பாக்கியை எடுத்துக் கொண்டு வேட்டை ஆடினான். நாயும் உடன் சென்றது. ஒரு பறவையையோ, மிருகத்தையோ சுட்டால், நாய் ஓடிப்போய் அதைக் கவ்விக் கொண்டு வந்தது. இறைச்சியை உண்டான். கொழுப்பில் விளக்கு எரித்தான். தோல்களைக் காய வைத்துச் சட்டையும், குடையும் செய்தான்.



கப்பலிலிருந்து ஒரு பை நிறையக் கோதுமையைக் கொண்டு வந்திருந்தான். அது கெட்டுப் போயிருந்தது. வேலிக்கு வெளியே கொட்டினான். மழை காலத்திற்குப் பின் அவை முளை விட்டு வளர்ந்தன. நல்ல அறுவடை கிடைத்தது. அந்தத் தானியங்களைச் சேகரித்து அடுத்து அடுத்து வரும் பருவங்களில் விதைத்தான். அறுவடை செய்தான்.

காட்டு ஆடுகளைப் பிடித்துப் பழக்கினான். அவை ஒரு மந்தையாகப் பெருகின. கடற் கரையில் ஆமைகளும் மீன்களும் நிறையக் கிடைத்தன. காட்டில் ஆரஞ்சும் திராட்சையும் விளைந்திருந்தன. குரூசோவின் உணவுப் பிரச்னை தீர்ந்தது.

தீவைச் சுற்றி நடந்து வரும்போது கடலுக்கு அப்பால் ஒரு நிலப் பகுதியைக் கண்டான். அந்த இடத்துக்குப் போனால் அங்கிருந்து இங்கிலாந்துக்குச் செல்ல உதவி கிடைக்கும் என்று நம்பினான். அதற்காக ஒரு மரத்தை வெட்டி ஒரு பெரிய படகைத் தயாரித்தான். தீவைச் சுற்றி அதை ஓட்டிப் பார்த்தான்.

குரூசோவின் தோற்றம் வேடிக்கையாக இருந்தது. ஆட்டுத் தோல் சட்டை

உரோமக் குல்லாய், தாடி, மீசை, வெயிலில் காய்ந்த பழுப்பு நிறம். இடுப்பில் வாள், ஒரு தோளில் துப்பாக்கி, இன்னொரு தோளில் கிளி, அருகில் நாய்- மொத்தத்தில் அவன் பயங்கரமாகக் காட்சி யளித்தான்!

* * *

படகுத் துறைக்குப் போகும் வழியில் குருசோவுக்கு ஓர் ஆச்சரியம் காத்திருந்தது. மணலில் ஒரு மனிதனின் காலடிச் சுவடு நன்றாகப் பதிந்திருந்தது. குருசோ இடிந்து போனான். பிறகு காதுகளைக் கூர்மையாக்கிக் கொண்டு ஒலிகளைக் கேட்டான். நாற்புறமும் நன்றாக நோக்கினான். ஆனால், காதுகளுக்கோ, கண்களுக்கோ ஒன்றும் புலப்படவில்லை. தன்னுடைய அடிச்சுவடுதானோ என்று எண்ணினான். ஆனால், அது சற்று மாறுபட்டிருந்தது. காட்டு மிராண்டிகள் எந்த நேரத்திலும் தன்னைத் தாக்கக் கூடும் எனப் பயந்தான். இல்லத்திற்கு விரைந்து துப்பாக்கிகளைச் சரி செய்தான். இல்லத்தைச் சுற்றிப் பாதுகாப்புகளை அதிகப்படுத்தினான்.

அந்தப் பயத்திலேயே இரண்டு ஆண்டுகள் கழிந்தன.


ஒரு நாள் குருசோ ஒரு குன்றின் மீது நின்று கடலைப் பார்த்தான். வெகு தொலைவில் ஒரு படகைக் கண்டான். அது தீவின் எதிர்த் திசையை நோக்கிப் போய்க் கொண்டிருந்தது. ''அடுத்த தீவு மனிதர்கள் இங்கு வந்து திரும்புகிறார்கள் போல் இருக்கிறது'' என்று சொல்லிக் கொண்டான்.

குருசோ எண்ணியது சரிதான். அண்டை நிலத்தில் இருந்த காட்டு மிராண்டிகள் அடிக்கடி சண்டை போட்டனர். தோற்றுப் போனவர்களைக் கைது செய்து குருசோ வாழ்ந்த தீவின் ஒரு மூலைக்கு அழைத்துச் சென்றனர். கைதிகளை அங்கே கொன்று சாப்பிடுவது அந்த மக்களின் வழக்கம். ஆனால் பாவம், குருசோவுக்கு இதெல்லாம் ஒன்றும் தெரியாது.

குன்றிலிருந்து இறங்கித் தென்மேற்குத் திசையில் நடந்தான். அந்தப் பகுதிக்கு இதுவரையில் அவன் போனதில்லை. அங்கே கண்ட காட்சி அவனைக் குழப்பியது. மண்டை ஓடுகளும், மனித எலும்புகளும் அந்தக் கரை முழுதும் சிதறிக் கிடந்தன. ஓரிடத்தில் நெருப்பும், நெருப்பைச் சுற்றி வட்டமான ஒரு குழியும் இருந்தன. அந்தக் குழியில் உட்கார்ந்து கொண்டுதான் அவர்கள் சகோதர மனிதனின் மாமிசத்தைச் சாப்பிட்டிருக்க வேண்டும். குருசோவுக்குத் தலை சுற்றியது. வயிற்றைக் குமட்டியது. வீடு திரும்பினான்.

குருசோ ஆலோசித்துப் பார்த்தான். அங்கே அவனுக்கு ஆபத்து ஒன்றும் இல்லை என்பதைப் புரிந்து கொண்டான்.

அந்த மட்ட ரகமான மக்கள் இரையைத் தேடி அங்கே அலையவில்லை. எங்கேயோ கிடைத்த இரையைச் சாப்பிடுவதற்காக மட்டுமே இங்கே கூடினர்.



மிஜாரு, கிஜாரு, இஜாரு!

மகாத்மா காந்திக்கு மிகவும் பிடித்தமான பொம்மை எது என்பது உங்களுக்குத் தெரியும். அந்தப் பொம்மையில் உள்ள மூன்று குரங்குகளும் எதைக் குறிக்கின்றன என்பதும் உங்களுக்குத் தெரியும்.

தீயதைப் பார்க்காதே!
தீயதைப் பேசாதே!
தீயதைக் கேட்காதே!

ஜப்பானில் நிக்கோ என்று ஒரு நகரம் இருக்கிறது. அங்கேயுள்ள புத்தர் கோயிலில் 300 ஆண்டுகளுக்கு முன்பு இருந்த குரங்குகளின் படத்தை ஓர் ஓவியர் வரைந்தார். அதைப் பார்த்துத் தான் இந்தப் பொம்மையைச் செய்திருக்கிறார்கள்.

இதாரி ஜின்கோ என்பது அந்த ஓவியரின் பெயர். 'இதாரி' என்றால் ஜப்பானிய மொழியில் 'இடது கை' என்று அர்த்தம். அந்த ஓவியர் இடது கையாலேயே அந்த ஓவியத்தை வரைந்தாராம்!

அந்த மூன்று குரங்குகளையும் ஜப்பானில் எப்படி அழைப்பார்கள், தெரியுமா?

மிஜாரு, கிஜாரு, இஜாரு.

''அப்படியா! சரி, உடனே பஜாருக்குப் போய் இந்தப் பொம்மையை வாங்கி வருகிறேன்'' என்று புறப்பட்டு விட்டீர்களா, என்ன?

பதினெட்டு ஆண்டுகளைத் தனிமையில் குரூசோ அங்கே கழித்திருந்தான். இது வரையில் அவனுக்கு எந்தப் பிராணியாலும் துன்பம் வரவில்லை. கவனமாக இருந்தால், இனிமேலும் துன்பம் வராதெனத் தீர்மானித்தான்.

மேலும் இரண்டு ஆண்டுகள் ஓடின. ஒரு நாள் காலை. குரூசோ கடலை நோக்கினான். ஐந்து படகுகள் தோன்றின. குன்றின் மீது ஏறிப் பார்த்தான். கரையில் தீ எரிந்து கொண்டிருந்தது. அதைச் சுற்றி முப்பது காட்டுமிராண்டிகள் வட்டமாக நடனம் ஆடிக் கொண்டிருந்தனர். சமையல் கொதித்தது. படகிலிருந்து இரண்டு கைதிகளைத் தரதரவென்று இழுத்து வந்தனர். ஒரு கைதியின் தலையில் ஓர் அடி விழுந்தது. அவன் இறந்தான். ஐந்தாறு காட்டுமிராண்டிகள் அந்தச் சடலத்தின் மீது பாய்ந்து அதைத் துண்டு துண்டுகளாக வெட்டினர்.

அடுத்த கைதி இளைஞன். அவனைத் தயாராக நிற்க வைத்திருந்தனர். காட்டுமிராண்டிகளின் கவனம் வேறு பக்கம் திரும்பி இருந்தது. சமயம் பார்த்து அவன் நழுவினான். வாயு வேகத்தில் ஓடினான். குரூசோ இருந்த திக்கில் விரைந்தான். அவனைத் துரத்திக்கொண்டு மூன்று காட்டுமிராண்டிகள் ஓடினர். வழியில் நீர்ப் பகுதி குறுக்கிட்டது. கைதி நொடிப் பொழுதில் அதை நீந்திக் கடந்தான். மீண்டும் ஓடினான். துரத்தியவர்களில் ஒருவனுக்கு நீந்தத் தெரியாது. அவன் திரும்பிச் சென்றான். மற்ற இருவரும் அவனைத் தொடர்ந்தனர். இடைவெளி அதிகம் இருந்தது.

குரூசோவுக்கு ஒரு வேலைக்காரனும் துணைவனும் தேவைப்பட்டான். கடவுளே அந்தக் கைதியை அங்கு அனுப்பியிருப்பதாகக் குரூசோ கருதினான்.

ஓடுபவனுக்கும், துரத்துபவனுக்கும் இடையே குறுக்கிட்டான் குரூசோ. ஒருவனைத் துப்பாக்கியால் அடித்துக் கொன்றான்; மற்றவனைச் சுட்டுக்கொன்றான்.

துப்பாக்கி ஒலியைக் கேட்டதும் கைதி நின்றான். தன்னையும் கொல்வானோ என்ற எண்ணத்தில் அசையாமல் நின்றான். அருகில் வரும்படி அன்போடு அழைத்தான் குரூசோ. அந்த இளம் காட்டுமிராண்டி தயங்கிக் கொண்டே வந்து. குரூசோவின் கால்களில் விழுந்தான். தான் அவனுக்கு அடிமை என்பதை உணர்த்தினான். வாய் திறந்து பேசினான். குரூசோவுக்கு மொழி புரியவில்லை. இருபத்தைந்து ஆண்டுகளுக்குப் பிறகு முதன் முறையாக வேறொரு மனிதக் குரலை இப்போதுதான் கேட்டான். அந்தக் குரல் காதுகளில் இனிமையாக ஒலித்தது.


குரூசோ அந்த இளைஞனை அன்போடு அழைத்துச் சென்றான். உணவு அளித்தான். இளைப்பாறச் சொன்னான். இளைஞன் களைத்துப்போயிருந்ததால் உடனே உறங்கி விட்டான்.

கண்ணுறங்கும் காட்டுமிராண்டியை குரூசோ கவனித்தான். வயது இருபத்தாறு இருக்கும். நல்ல உயரம். அதற்கேற்ற உடற்கட்டு. முகத்தில் உறுதி. நீண்ட முடி. அகன்ற நெற்றி. பழுப்பு நிறம். சிறிய மூக்கு, சிரிக்கும் கண்கள். மொத்தத்தில் இனிய தோற்றம். இளைஞன் எழுந்தான். குரூசோவின் கால்களில் மீண்டும் விழுந்தான். ஆயுள் முழுதும் அவனுக்கு ஊழியம் செய்வதாகச் சைகை மூலம் சொன்னான். அவனை அன்போடு நடத்துவதாக குரூசோவும் மௌன மொழியிலேயே பதில் சொன்னான்.

குரூசோ அவனோடு பேசத் தொடங்கினான். அவனையும் தன்னோடு பேசுவதற்குக் கற்றுக் கொடுத்தான். அவனுக்கு 'வெள்ளிக் கிழமை' என்று பெயர் வைத்தான்.

ஏனென்றால் ஒரு வெள்ளிக் கிழமையில்தான் குரூசோ அவனுடைய உயிரைக் காத்தான். தன்னை 'ஐயா' என்று அழைக்கச் சொன்னான். 'ஆமாம்', 'இல்லை' என்ற சொற்களையும் மற்றும் வீட்டில் இருந்த பொருள்களின் பெயர்களையும் புரிய வைத்தான். ரொட்டியைப் பாலில் தோய்த்துச் சாப்பிடச் சொல்லிக் கொடுத்தான்.

காட்டுமிராண்டிகள் தீவிலிருந்து வெளியேறினார்கள். அவர்கள் முகாமிட்ட இடத்திற்கு குரூசோவும் வெள்ளியும் போனார்கள். அங்கிருந்த பயங்கரத்தைக் கண்டதும் குரூசோவின் இதயம் கொஞ்ச நேரத்துக்கு அப்படியே நின்று விட்டது.



வெள்ளிக்கு ஒன்றுமே உறைக்கவில்லை. பூமியில் ரத்தக் கறை. மண்டை ஓடுகளும், மனித எலும்புகளும், அரைகுறையாகச் சாப்பிட்டிருந்த மாமிசத் துண்டுகளும், கை கால்களும் அந்த இடத்தைஅடைத்துக் கொண்டிருந்தன.

நான்கு கைதிகள் இருந்தார்கள் என்றும், வெள்ளி தப்பித்துவிடவே மற்ற மூவரையும் அவர்கள் சாப்பிட்டு விட்டார்கள் என்றும் வெள்ளி கைகளால் அடையாளம் காட்டிச் சொன்னான். அந்த எலும்புகளையெல்லாம் ஒன்று திரட்டி வெள்ளியைக் கொண்டு எரிக்கச் செய்தான். வெள்ளிக்கும் மனித மாமிசத்தில் கொஞ்சம் ஆசை இருந்தது. அதை வெளிப்படையாகவே தெரிவித்தான். ஆனால், குருசோ அவனைக் கொன்று விடுவேன் என்று மிரட்டிய பிறகு வெள்ளி அந்த ஆசையை விட்டு விட்டான். மேலும், வெள்ளியின் மனத்தைக் குருசோ அடியோடு மாற்ற விரும்பினான். அதற்காக விதவிதமாக ஆட்டிறைச்சியையும் தின்பண்டங்களையும் சமைப்பதற்கு அவனுக்குக் கற்றுக் கொடுத்தான். வெள்ளி ஆடைகளை அணிந்தான். புதிய மனிதன் ஆனான்.

வெள்ளியைக் குருசோவுக்கு மிகவும் பிடித்து விட்டது. அவனைத் தன் மகனைப் போல நடத்தினான். வெள்ளியும் தன் எஜமானனிடம் அன்போடு இருந்தான். வெள்ளி புத்திசாலி. விரைவிலேயே ஆங்கிலத்தில் பேசினான். கப்பல் உடைந்து அந்தத் தீவுக்கு வந்த கதையை குருசோ வெள்ளிக்குச் சொன்னான்.

''ஐயா, நீங்கள் சொன்னது போலவே எங்கள் நாட்டுக்கு அருகிலும் ஒரு கப்பல் கவிழ்ந்தது. அதில் பதினேழு பேர் உயிர் பிழைத்தார்கள். அவர்கள் தாடி வைத்த வெள்ளைக்காரர்கள். அவர்கள் இப்



போது எங்கள் நாட்டில் நலமாக வாழ்கிறார்கள்'' என்றான் வெள்ளி.

''உங்கள் நாட்டவர் அவர்களை ஏன் ஒன்றும் செய்யவில்லை?'' என்று கேட்டான் குரூசோ.

''சண்டையில் தோற்றவர்களைத் தான் சிறைப்பிடித்துச்சாப்பிடுவார்கள். சிநேகிதர்களிடம் அன்பாக இருப்பார்கள்'' என்றான் வெள்ளி. அந்த வெள்ளைக்காரர்களையும் அழைத்து வந்து ஒரு பெரிய கப்பல் கட்டினால் எல்லோரும் திரும்பலாமே என குரூசோ நினைத்தான்.

''ஐயா! ஐயா!'' என்று வெள்ளி பதற்றத்தோடு அழைத்தான். குரூசோ வெளியே வந்து பார்த்தான். மூன்று படகுகள் நிறையக் காட்டு மிராண்டிகள் இறங்கியிருந்தனர். சுமார் இருபது பேர் இருந்தனர். கைகால்கள் கட்டப்பட்டு மூவர் தரையில் கிடந்தனர். மூவரில் ஒருவன் வெள்ளைக்காரன். அவர்களைச் சமைத்துச் சாப்பிடுவதற்காகக் காட்டு மிராண்டிகள் அங்கு குழுமியுள்ளனர் என்பது தெளிவாகியது.

குரூசோவும் வெள்ளியும் தக்க ஆயுதங்களை எடுத்துக் கொண்டுவந்தனர். இரண்டு கைதிகளைக் கொன்றிருந்தனர். வெள்ளைக்காரனுக்கு மட்டும் உயிர் இருந்தது. காட்டுமிராண்டிகள் தீயைச் சுற்றி நெருக்கமாக உட்கார்ந்திருந்தனர். அவர்கள் மீது குரூசோவும் வெள்ளியும் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். பலர் இறந்தனர். சிலருக்குக் காயம். சிலர் படகை நோக்கிப் பாய்ந்தனர். குரூசோ வெள்ளைக்காரனை விடுவித்தான். விரைந்து சென்ற படகுகளைத் தொடர்ந்து சென்று தாக்கினான். அவர்கள் ஒரு படகை விட்டு விட்டு மீதி இருந்த படகுகளில் தப்பித்துச் சென்றனர்.

விட்டுச் சென்ற படகில் இன்னொரு வயதான கைதி இருந்தான். அவன் தான் வெள்ளியின் அப்பா! அப்பாவைக் கண்டதும் வெள்ளியின் மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. வெள்ளைக்காரன் ஸ்பெயின் தேசத்தவன். வெள்ளி சொன்ன பதினேழு பேர்களில் அவனும் ஒருவன். மற்ற பதினாறு ஆட்களும் அங்கு நலமாக இருப்பதாகவும் தாய் நாடு திரும்புவதற்குத் துடித்துக்கொண்டிருப்பதாகவும் அந்த வெள்ளைக்காரன் சொன்னான்.

வெள்ளைக்காரனைப் பார்த்து, ''என்னை ஒழுங்காக இங்கிலாந்துக்கு அழைத்துப் போவதாக வாக்குறுதி அளித்தால், நானும் உங்களுக்கு உதவுவேன். என் படகில் சென்று மற்ற நண்பர்களை அழைத்து வா. எல்லோருமாக ஒரு பெரிய கப்பலைக் கட்டித் தாய் நாடு திரும்பலாம்'' என்றான் குரூசோ. ஸ்பானியன் சம்மதித்தான். அவனும், வெள்ளியின் அப்பாவும் படகில் புறப்பட்டனர்.

குரூசோவின் தீவுக்கு முன்னால் ஒரு கப்பல் நங்கூரம் போட்டிருந்தது. அது இங்கிலீஷ் கப்பல். அதிலிருந்து ஒரு படகு குரூசோவை நோக்கி வந்து கொண்டிருந்தது. குரூசோ வியப்பில் ஆழ்ந்தான். அந்தத் தீவு இங்கிலீஷ்காரர்களின் வியாபாரப் பாதையில் இருக்கவில்லை. அவர்கள் பாதை தவறி வருவதற்கும் அப்போது புயல் வீசவில்லை. எல்லாம் புதிராகத் தோன்றின. படகு தீவை அடைந்தது. மாலுமிகள் இறங்கினர். அவர்கள் இங்கிலாந்து நாட்டவர் என்பது உறுதியாயிற்று.

''ஐயன்மீர்! என் தோற்றத்தைக் கண்டு ஆச்சரியப் படாதீர்கள். உங்களுக்காகவே இருபத்தி எட்டு ஆண்டுகளாக நான் காத்திருக்கிறேன்'' என்று குரூசோ கதறினான்.

குரூசோவுக்குத் தொண்டை அடைத்துக் கொண்டது. கண்களில் நீர் பெருகியது. தலை சுற்றியது. படகில் வந்த கேப்டனும், அவனுடைய ஆட்களும் குரூசோவைத் தாங்கிப் பிடித்துக் கொண்டனர்.

குரூசோ அவர்களைத் தன் இல்லத்திற்கு அழைத்துச் சென்று உபசரித்தான். தான் செய்த ஒவ்வொரு பொருளையும் அவர்களுக்குக்காட்டினான். குரூசோவின் கதை உண்மை என்றாலும் அவர்களால் நம்ப முடியவில்லை.

''இங்கிலாந்து மன்னருக்காகச் செல்வங்களைத் திரட்டிக் கொண்டு திரும்புகிறோம். நல்ல நீரைத் தேடி இங்கு வந்திருக்கிறோம்.'' என்றுகேப்டன்கூறினான்.

கேப்டன் குரூசோவை அன்போடு இங்கிலாந்துக்கு அழைத்தார். ''நான் உங்களை மறக்கவில்லை. உங்களுக்கு விரைவில் ஒரு கப்பல் அனுப்புகிறேன்'' என்று குரூசோ ஸ்பானியனுக்கு ஒரு கடிதம் எழுதி வைத்துவிட்டுப் புறப்பட்டான். தன்னுடைய விசித்திரமான ஆடைகளை அணிந்து கொண்டு கப்பலில் ஏறினான். அவனை இணை பிரியாத வெள்ளியும் உடன் சென்றான். 1687ஆம் ஆண்டு ஜூன் மாதம் பதினொன்றாம் நாள் அவர்கள் இங்கிலாந்தை அடைந்தனர்.

DANIEL DEFOE எழுதிய ROBINSON CRUSOE என்ற ஆங்கிலக் கதையே மேலே சுருக்கமாகக் கூறப்பட்டுள்ளது.

காக்கைக் குஞ்சு

பெ. கு. வரதராசன்



காலை நேரம். 'கா, கா' என்று கத்தியபடி இறக்கைகளை அடித்துக் கொண்டு சிவந்த வாயைப் பிளந்து-கொண்டு தன் குஞ்சு அருகிலே வருவதைத் தாய்க் காக்கை கண்டது.

''கண்ணே! உன் வேதனையை நான் அறிவேன். சற்றே பொறு. அதோ அந்த வீட்டில் தினந்தோறும் காலையில் கூரை மீது சோறு போடுவார்கள். எல்லாக் காக்கைகளும் சென்று அதைத் தின்னும். அப்போது 'காகா' என்று கத்தும். உடனே நாமும் போவோம்'' என்று சொல்லியது.

''அம்மா பசி பொறுக்க முடியவில்லை. ஆகவே கத்தினேன். நீ சொன்னபடி பொறுத்திருக்கிறேன்'' என்றது காக்கைக் குஞ்சு.

சற்று நேரத்துக்கெல்லாம் 'காகா' என்ற ஓசை கேட்டது. காக்கை தன் குஞ்சை அழைத்துக் கொண்டு அந்தக் கூரை மேல் போய் அமர்ந்தது. இறைந்து கிடந்த சோற்றை அவசரம் அவசரமாகப் பொறுக்கித் தன் குஞ்சு வாயில் கொண்டு வந்து நிரப்பியது.

குஞ்சு வயிறார உண்டது. பிறகு தாயும் குஞ்சும் பறந்து போய் அருகே இருந்த ஒரு வேப்ப மரத்தில் அமர்ந்தன.

சற்று நேரத்துக்கெல்லாம் கீழே தெருவில் ஒரு குழந்தை ஒரு ரொட்டித் துண்டை எடுத்துக் கொண்டு சென்றது.

தாய்க் காக்கை, ''குழந்தாய்! நீ சற்றே இங்கே இரு. இதோ வருகிறேன்'' என்று கூறிவிட்டு ஒரே பாய்ச்சலாகக் கீழே பறந்தது. அந்தக் குழந்தையின் கையில் இருந்த ரொட்டித் துண்டை 'லபக்' என்று தட்டிக் கொண்டு மிக்க மகிழ்ச்சியோடு திரும்பி வந்து தன் குஞ்சின் அருகே அமர்ந்தது.

''அதென்னம்மா?'' என்று குஞ்சு கேட்டது.

''இதோ பாருடா கண்ணு! உனக்காக ரொட்டித் துண்டு கொண்டு வந்திருக்கிறேன். மிக ருசியாக இருக்கும். தின்று பாரேன்'' எனக் கூறி ஊட்டியது.

குஞ்சு கூறியது: ''அம்மா, இதை இப்படியே இந்தக் கிளையில் வைத்து விட்டு ''கா கா'' என்று கத்தேன். எல்லாக் காக்கைகளும் வரட்டும், எல்லோரும் சேர்ந்து தின்போம்.''

''அட பைத்தியமே! ரொட்டித் துண்டு ஒன்றுதானே கிடைத்தது. இது உனக்கே போதாதே! அதோடு இதை நான் அந்தக் குழந்தையிடமிருந்து திருடிக்கொண்டல்லவா வந்தேன்? இது நல்ல வழியில் நமக்கு வரவில்லையே! இந்தப் பாவத்தில் மற்றவரையும் பங்கு கொள்ளச் செய்யலாமா? அது பெரும் பாவம்!'' என்றது தாய்க் காக்கை.

நாய்ப்பிசாசு

தங்கமணி

இரவு பதினொரு மணி.

'ழொன்ன்ன்!...'

கால்களுக்குப் பக்கத்திலிருந்து திடீரென்று குரைப்புச் சத்தம் கேட்டதும்—

திகிலென்றது!

தமிழோங்கிபுரம் சினிமாக் கொட்டகைக்கு எதிரில் ஒரு புன்னை மரம். அந்தப் புன்னை மரத்துக்குப் பக்கத்திலே ஒரு கடை. அந்தத் தேனீர்க் கடைக்கு அருகில் நின்று என்னவோ பேசிக் கொண்டிருந்த முத்து, சோமு, நாகன் மூவரும், ஏதோ ஒரு நாய் குரைத்ததைக் கேட்டவுடன்—

அஞ்சி நடுங்கி, ஆளுக்கொரு பக்கமாய்ப் பாய்ந்தோடினார்கள்.

இதைக் கண்டதும்—

தேனீர்க்கடை வாசலில், கந்தலும் கைத்தடியுமாக நின்று கொண்டிருந்த கிழவன் சிரித்தான். சிறிது தூரத்தில் அங்கும் இங்குமாகப் பயந்து நின்று கொண்டிருந்த சோமு, நாகன், முத்து மூவரையும் பார்த்துப் பார்த்துப் பரிகாசமாகச் சிரித்தான். சிரித்தவாறே சொன்னான்: ''ஹூம். ஒரு சொரி நாய் குரைத்ததைக் கேட்டு இப்படிப் பயந்தோடுகிறீர்களே!''

சினிமாப் படம் முடிந்து, மக்கள் வெளியேறிக் கலைந்து போய்ச் சற்று நேரமாயிற்று.



சாலையில் எங்கோ ஒன்றிரண்டு பேர் போய்க் கொண்டும் வந்து கொண்டும் இருந்தார்கள்.

முத்து, சோமு, நாகன் மூவரும் பிச்சைக்காரக் கிழவனை நெருங்கினார்கள். நாகன், கிழவனைப் பார்த்துக் கேட்டான்: ''தாத்தா, நீ எந்த ஊர்?''

''நான் தூரதேசத்திலிருந்து அனாதையாக இந்த ஊருக்கு வந்து ரொம்பக் காலமாயிற்று'' என்றான் கிழவன்.

''ரொம்பக் காலமாயிற்று என்றால், உனக்கு அந்த விஷயம் தெரிந்திருக்க வேண்டுமே?'' என்றான் முத்து.

''எந்த விஷயம்?'' என்று புரியாமல் கேட்டான் கிழவன்.



''சுமார் மூன்று மாதங்களாக இந்தத் தமிழோங்கிபுரத்தைச் சுற்றியுள்ள ஊர்களையும் சேரிகளையும் இரவும் பகலும் கதிகலக்கிக் கொண்டிருக்கிறதே பயங்கர வெறி நாய். அதைப் பற்றி நீ கேள்விப்படவே இல்லையா?'' என்றான் சோமு.

''ஓ! அந்த நாய்ப் பிசாசைப் பற்றிச் சொல்கிறாயா? எனக்கும் அந்த ரத்த வெறி பிடித்த நாயை நினைத்தால் பயமாகத்தான் இருக்கிறது!'' என்று நடுங்கியபடியே சொன்னான் பிச்சைக்காரக் கிழவன்.

''ஊர் ஊராகச் சேரி சேரியாகப் புகுந்து இரண்டு குழந்தைகளைக்கொன்று போட்டு விட்டதே! நாலைந்து பெரியவர்களைக் கடித்துக் கொதறியிருக்கிறதே! எத்தனை எத்தனையோ ஆடு மாடுகளைப் பிய்த்துப் பிடுங்கியிருக்கிறதே! மூன்று நாட்களுக்கு முன்னே கூட, எங்கள் பாரதியூரில் ஒரு கழுதைக் குட்டியை அந்தப் பயங்கர நாய்ப் பிசாசு கடித்துக் கிழித்துக் குளோஸ் பண்ணி விட்டதே! அந்தக் கொடிய மிருகத்தின் கோரத் தாக்குதலை நினைத்தாலே கதி கலங்குகிறதே! நாங்கள் நாய் குரைத்ததைக் கேட்டு நடுங்கினால், நீ கேலியாய்ச் சிரித்துப் பேசுகிறாயே!'' எனக் கேட்டான் நாகன்.

''என்னவோ... தெரியாமல் பேசிவிட்டேன்... மன்னித்துக்கொள்ளுங்கள் தம்பிகளே!'' எனப் பணிவாகச் சொல்லிய கிழவன், மேலும் பேசினான்: ''நான்கைந்து நாட்களுக்கு முன்னே, ஏழெட்டுக் காட்டிலாகா அதிகாரிகள் துப்பாக்கியும் கையுமாக இந்தப் பக்கம் வந்தார்கள். காடு முழுவதும் அலைந்து தேடிக் கொண்டிருக்கிற அவர்களுடைய துப்பாக்கிக் குண்டுகளுக்கு அந்த நாய்ப் பிசாசு இன்னும் பலியாகவில்லை போலிருக்கிறது!''

''அந்தக் கொலைகார நாய் இன்னும் எந்தக் குண்டுக்கும் பலியாகவில்லையே! அது இன்னும் எத்தனை எத்தனை...'' மேலும் சொல்ல முடியாமல் நெஞ்சு நிறைந்த அச்சத்தினால் கலங்கி நின்றான் முத்து.

அந்த நேரத்தில்—

மின்சார சங்கு ஊளையிடும் சத்தம் வெகு தூரத்திலிருந்துகேட்டது: அமைதியான அந்த இரவில் மிகத் தெளிவாகக் கேட்டது.

''கம்பனூர் தொழிற்சாலையிலே சங்கு ஊதுகிறதே... நடுநிசி! மணி பன்னிரண்டு ஆகிறது. ஆமாம், நீங்கள் எந்த ஊருக்குப் போக வேண்டும்?''

எனக் கேட்டவாறே கொட்டாவி விட்டான் கிழவன்.

''ஆறு கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள பாரதியூருக்குப் போக வேண்டும்...'' — பாரதியூருக்குப் போகும் காட்டுப்புறத்தை யொட்டிய இருண்ட நெடுஞ்சாலையைப் பார்த்துப் பெருமூச்செறிந்தான் சோமு.

''ஜாக்கிரதையாகப் போய்ச் சேருங்கள்'' என்றவாறே அங்கிருந்து போனான் பிச்சைக்காரக் கிழவன்.

''அந்தப் பாழும் நாய்ப் பிசாசின் திகிலிலே என்ன படம் பார்த்தேன் என்பது கூட மறந்து போயிற்று!'' என்றான் நாகன்.

''எல்லாம் கடவுள் செயல்! வாருங்கள் போகலாம்....'' என்றான் சோமு. அப்புறம் மூவரும் இருண்ட சாலையை நோக்கி மருண்டவாறே நடந்தார்கள்.

நடக்க நடக்க...

ஜன நடமாட்டமில்லாத, இருள் கப்பிய சாலையில் போகப் போக...

பூமியிலிருந்து தண்ணீர் சுரக்கச் சுரக்கக் கிணறு நிரம்புகிற மாதிரி, நெஞ்சமெல்லாம் பயம் நிறைந்து தளும்பியது. பாதையின் இரு பக்கங்களிலும் ஓங்கி வளர்ந்து அடர்ந்து சூழ்ந்த மரங்களிலிருந்து ஓயாமல் கத்தும் மரப் பூச்சிகளின் ஒலிகள் மேலும் பயமுறுத்தின.

அவர்கள் மூவரும் அந்தப் பயங்கர இருளில் கூர்ந்து கவனித்தபடியே நடந்தார்கள். உள்ளம் கலங்குகிறது. ஆனாலும் என்னவோ ஒரு வரட்டுத் தைரியத்துடன் ஏதேதோ உரக்கப் பேசியவாறே நடந்தனர்.

''ஏண்டா சோமு... கடந்த அரை மணி நேரத்தில் இரண்டு கிலோ மீட்டர் தூரமாவது நடந்திருப்போமா...'' எனக் கேட்டுவிட்டுக் கையிலிருந்த பொட்டலத்திலிருந்து ஒரு பிஸ்கட்டை எடுத்துத் தின்றான் முத்து.

அதைக் கவனித்ததும்—

''முத்து... சினிமாக் கொட்டகையில் வாங்கிய பிஸ்கட் பொட்டலத்தை நீ இன்னமும் தின்று தீர்க்கவில்லையா?'' எனக் கேட்டான் நாகன்.

''பொட்டலத்தில் பாதியைக் கொட்டகையிலேயே தின்றுவிட்டேன். மீதியை என் தங்கச்சிக்காக...'' முத்து சொல்லிக்கொண்டிருக்கையிலேயே...

சாலையின் அந்தப் பக்கத்திலிருந்து இந்தப் பக்கமாகச் சரேலெனப் பாய்ந்தோடியது ஒரு பாம்பு! அதைத் தொடர்ந்து துரத்திக் கொண்டு குபீரெனத் தாவியோடியது, ஒரு காட்டுக் கீரி!

இதைப் பார்த்ததும்—

மூவரின் விழிகளும் முட்டைகளாயின! மூச்சுத் திணறியது. கிடுக்கியில் அகப்பட்ட எலியைப் போல உயிர் துடித்தது!

சில விநாடிகளுக்குப் பிறகு—

எப்படியோ சமாளித்துக் கொண்டார்கள்.

''டேய்... இப்படி அன்னநடை நடந்தால் ஊர் போய்ச் சேர முடியாது.



பால அல்லது பாய்ஸ் நாடக சபாக்கள்

முப்பது நாற்பது ஆண்டுகளுக்கு முன்பு பல நாடக சபாக்களில் பெரும்பாலும் சிறுவர்களே நடித்து வந்தனர். ஆனால் அந்த நாடகங்கள் சிறுவர்களுக்கென்றே நடத்தப்பட்ட நாடகங்களா? இல்லை.

சம்பூர்ண ராமாயணம், பாதுகா பட்டாபிஷேகம், தசாவதாரம், வள்ளி திருமணம், பவளக்கொடி, கோவலன் சத்தியவான்சாவித்திரி, மயில்ராவணன் —இப்படிப் பெரியவர்களுக்கான நாடகங்களிலே அவர்கள் நடித்து வந்தார்கள்.

சிறுவர்களே அந்த சபாக்களில் அதிகமாக இருந்ததால், அவற்றின் பெயர்களில் 'பால' அல்லது 'பாய்ஸ்' என்ற சொல் இருக்கும். இதோ பாருங்கள்:

பால மனோகர சபா
தேசிகானந்த பாய்ஸ் கம்பெனி
மதுரை ஒரிஜினல் பாய்ஸ் கம்பெனி
மதுரை பால சண்முகானந்த சபா
ஸ்ரீ பால விநோத சங்கீத சபா
பால கந்தர்வ கான சபா
ஸ்ரீ மங்கள பால கான சபா
ஸ்ரீ ராம பால கான சபா
முத்துக்கிருஷ்ண பாய்ஸ் கம்பெனி
திருச்சி பால பாரத சபா
மதுரை தேவி பால விநோத சங்கீத சபா
புளியமாநகர் கிருஷ்ண ரெட்டியார் பாய்ஸ் கம்பெனி
ஸ்ரீ பால மோகன ரஞ்சித சங்கீத சபா

-திருச்சி பாரதன்

அந்த நாய்ப் பிசாசினால் கடிபட்டுத் தொலைவதற்கு முன்னே, அந்தத் திகிலே நம்மைத் தீர்த்துக் கட்டிவிடும்போலிருக்கிறது!... வாருங்கள், ஒரே ஓட்டமாக ஓடிவிடலாம்!'' என்று நடுங்கியவாறே சொன்னான், நாகன்.

முத்து: ''ம்... கிளம்புங்கள்...''

சோமு: ''ஒன்...ட்டூ... த்ரீ!''

உடனே, மூவரும் எடுத்தார்கள், ஓட்டம்!

புனலோட்டம் புயலோட்டம் மாதிரி
மானோட்டம், முயலோட்டம் போல
ஒரே ஓட்டமாக ஓடினார்கள்!

சற்று நேரத்திற்குள்—

காற்றோட்டம், கருத்தோட்டமென படுவேகமாய்ப் பாய்ந்தோடிய மூவரும் பாரதியூரை அணுகினார்கள்.

பாரதியூர் முத்துமாரி அம்மன் கோவில் கோபுரத்தின் உச்சியில் இருளில் மினுக்கும் விளக்கொளியைப் பார்த்தவாறே, ''ஹம்ம்...ம்மா!...'' எனப் பெருமூச்செறிந்தபடியே நின்றான் சோமு.

அப்போது பெரிய தலைப்பாகையுடன் தடித்த கம்பளிப் போர்வையை உடல் முழுக்கப் போர்த்தியபடி, சாலையோரமாக ஒரு கிழவன் வந்தான். ஒரு கன்றுக்குட்டியுடன் எருமையை ஓட்டிக் கொண்டு வந்த அவன் கேட்டான்: ''அட தம்பிகளா! இந்த நள்ளிரவு நேரத்தில் எங்கேயிருந்து ஓடி வருகிறீர்கள்?''

முக முசெனச் சீறும் சுவாசக் காற்றைச் சற்று நிதானப்படுத்திக் கொண்டு முத்து சொன்னான், ''தமிழோங்கிபுரம் சினிமாக் கொட்டகையிலிருந்து அந்த நாய்ப் பிசாசுக்குப் பயந்து ஓடி வருகிறோம்...''

''ஓ!... அந்த வேட்டைக்காரனின் நாயைச் சொல்கிறீர்களா?'' என்றான், மாட்டுக்காரன்.

''எந்த வேட்டைக்காரனோட நாய்?'' எனப் புரியாமல் கேட்டான் நாகன்.

''தெலுங்கு நாட்டைச் சேர்ந்த ஒரு வேட்டைக்காரன், தனது வேட்டைக் குத்துணையாக ஒரு அல்சேஷியன் நாயை வளர்த்துப் பழக்கி வைத்திருந்தானாம். ஒரு நாள் காட்டில் வேட்டையாடுகையில்... நாலைந்து ஓநாய்கள் அந்த வேட்டை நாயைக் கடித்துக் குதறி விட்டனவாம்! அதிலிருந்து ஓநாய்களின் விஷமேறிய வேட்டை நாய் ரத்த வெறி கொண்டு ஊர் ஊராகத் திரிந்து, குழந்தைகளையும், குட்டிகளையும் கடித்துப் பிடுங்கிக் கொண்டிருக்கிறதாம்!'' தான் கேள்விப்பட்டிருந்த தகவலைக் கூறிவிட்டு, எருமையை ஓட்டிச் சென்றான் மாட்டுக்காரன்.

அப்புறம்—

''வாங்கடா, போகலாம்'' — கையிலுள்ள பிஸ்கெட் பொட்டலத்தைச் சரியாக மடித்துச் சுருட்டிக் கொண்டே நடந்தான், முத்து. சோமுவும் நாகனும் அவனைத் தொடர்ந்து நடந்தனர்.

சில வினாடிகளில்—

சாலையை விட்டு ஒதுங்கிப் பாரதியூருக்குப் போகும் ஒற்றையடிப் பாதையில் மூவரும் வேகமாய்ப் போய்க் கொண்டிருக்கையில்—

''வீடு நெருங்க நெருங்க, அந்த நாய்ப் பிசாசின் பயத்தோடு இன்னொரு பயமும் நெஞ்சைத் துருவுகிறது!'' என்றான் சோமு.

''அது என்ன பயம்?'' என்று கேட்டான், நாகன்.

''வீட்டுக்குப் போனதும், 'நாய்ப் பிசாசு' திரிகிற பயங்கர இரவில் சினிமா



வாழ்த்து அட்டை- நீங்களே தயாரிக்கலாம்!

உங்களில் சிலர், அதிக விலை கொடுத்துக் கடையிலே வாழ்த்து அட்டைகளை வாங்கிநண்பர்களுக்கு அனுப்புகிறீர்கள்! நீங்களே ஏன் எளிய முறையில் அழகாக வாழ்த்து அட்டை இதழ்களைத் தயாரிக்கக் கூடாது?

16–12 செ.மீ. மீட்டருள்ள இலேசான அட்டை அல்லது கனத்த தாளை எடுத்து அகலமான பகுதியை இரண்டாக மடித்தால் கிட்டத்தட்ட போஸ்ட் கார்டு அளவு வரும். அதில் முன் பக்கம் மேலே இருப்பது போல் படம் வரைந்து விருப்பம் போல் வர்ணம் கொடுத்து பொங்கல் வாழ்த்து. புத்தாண்டு வாழ்த்து. பிறந்த நாள் வாழ்த்துஎன்று காலத்துக்கு ஏற்றபடி எழுதி அனுப்பலாம். இந்தப் படத்தை யாரும் வரையலாம், மிக எளிதாக. நீங்களே சொந்தமாகத் தயாரித்து அனுப்பும்போது, அதில் ஏற்படும் இன்பமே ஒரு தனி இன்பம். உங்கள் நண்பர்களுக்கும் மிகுந்த மகிழ்ச்சியாய் இருக்கும்.

என்னடா, சினிமா?' எனக் கேட்டு, அப்பா அடிப்பாரே!'' என்றான் சோமு.

''அட, அதை விட்டுத் தள்ளுடா!... அந்தக் கொடிய நாய்ப் பிசாசின் கடியிலிருந்து உயிர் தப்பி வந்....'' முத்து பேசி முடிப்பதற்குள்—

''ஐயோ!...''என்று விறிட்டு அலறினான். தாவிப் பாய்ந்து விழுந்து எழுந்தோடி, அருகிலிருக்கும் நொணா மரத்தில் சரசரவெனக் கவ்வி ஏறினான், நாகன்.

ஏன், எதற்கு எனப் புரியவில்லை. சோமுவும் முத்துவும் சுற்றும் முற்றுமாகப் பார்த்தார்கள்.

கூப்பிடு தூரத்தில்—

நிலா வெளிச்சத்தில் மெர்க்குரி விளக்குப்போல் ஜகஜகக்கிற விழிகளை உருட்டிக்கொண்டு ஆக்ரோஷமாகப் பாய்ந்..

''நாய்ப் பிசாசு! நாய்ப் பிசாசு!...'' எனக் கதறினான், நொணா மரத்துக் கிளையில் தொற்றிக் கொண்டிருக்கும் நாகன்.

அடுத்த நொடி—

''அம்ம்...ம்மா!...'' என்று உயிர் குலுங்கக் கூவினான் முத்து. கூவிக்கொண்டே கையில் உள்ள பிஸ்கெட் பொட்டலத்தை வீசி எறிந்துவிட்டு ஓடினான். படுவேகமாகப் பாய்ந்தோடிப் பக்கத்திலிருந்த மரத்தைத் தாவிப் பிடித்துப் பரபரவென ஏறிக் கொண்டான்.

சோமு...?

அவன் ஓடினான். மின்னல் வேகத்தில் தாவியோடினான். கூப்பிடு தூரத்தில் பொட்டல்வெளியில் இருந்த பிரும்மாண்டமான ஐயனார் சிலையை நெருங்கினான். அதன் மீது லாகவமாக ஏறி, ஐயனார் சாமியின் தோளில் உட்கார்ந்து கொண்டான்!

அதற்கப்புறம்—

நாய்ப் பிசாசு, பயங்கரமாக உறுமிக் கொண்டே ஓடோடி வந்தது. நொணா மரத்தையும் மாமரத்தையும் சுற்றிச் சுற்றி வந்ததாறே குரைத்தது!

மறு நொடி—

என்னவோ வாசனை!...

பிசாசு நாய் அந்த வாசனையை மோப்பம் பிடித்துக் கொண்டே போனது. முத்து எறிந்துவிட்டு ஓடிய பிஸ்கெட் பொட்டலத்தைக் கண்டதும்,

பொட்டலத்தைக் கிளறி, பிஸ்கெட்களைக் கடித்துக் கடித்து விழுங்கியது.

அடுத்த நொடி—

காற்று உஸ்ஸெனச் சீறியது. சீறிய காற்றில் பிஸ்கெட்டுகளை மடித்து வைத்திருந்த பொட்டலக் காகிதம், உருண்டோடியது.

காகிதம் ஓடுவதைப் பார்த்த நாய்ப் பிசாசுக்கு என்ன தோன்றியதோ, அது அந்தக் காகிதத்தைத் துரத்திக்-கொண்டு ஓடியது. உருண்டோடிய காகிதம், காற்றின் வேகத்தோடு வேகமாகப் பறந்து போய், ஒரு பள்ளத்தில் விழுந்தது. அதைத் துரத்திச் சென்ற நாய்ப் பிசாசும் காகிதத்தோடு காகிதமாகப் பள்ளத்தில் விழுந்தது.

அது என்ன பள்ளம்?

கிணற்றுக்காகத் தோண்டினார்கள். தண்ணீர் ஊற்றெடுக்கவில்லை.

அப்படியே விட்டு விட்டார்கள்.

அதனுடைய ஆழம்?

இருபத்திரண்டு அடிகள்!

தாத்தாவின் புகைப்படம்

சோமு வீட்டிலே ஒரு பெரிய புகைப் படம் இருக்கிறது. அது அவனுடைய தாத்தாவின் புகைப்படம்.

சோமு தாத்தாவின் படத்திற்கு நேர் எதிராக நின்று கொண்டு பார்ப்பான். படத்தில் இருக்கும் தாத்தாவும் அவனைப் பார்ப்பது போல் இருக்கும். சோமு கொஞ்சம் வலது பக்கமாக நின்று கொண்டு புகைப் படத்தைப் பார்ப்பான். அப்போதும் தாத்தா அவனையே பார்ப்பார். இடது பக்கமாக நின்றுகொண்டு பார்ப்பான். அப்போதும் தாத்தா அவனையே பார்ப்பார்.

''ஆஹா! நான் எங்கு நின்று பார்த்தாலும் என் தாத்தா என்னையே பார்க்கிறாரே!'' என்று மகிழ்ச்சி அடைவான் சோமு.



படத்தில் இருக்கும் தாத்தா சோமுவை மட்டும்தானா அப்படிப்பார்க்கிறார்? நான் போய் நின்றால்கூட — நேர் எதிரிலே நின்றாலும் சரி, வலது பக்கம் நின்றாலும் சரி, இடது பக்கம் நின்றாலும் சரி, என்னையும் அப்படித்தான் பார்ப்பார்.

இதற்கு என்ன காரணம்?

வேறொன்றுமல்ல. புகைப்படம் எடுக்கும்போது அந்தப் பக்கம் இந்தப் பக்கம் பார்க்காமல், காமிராவில் உள்ள லென்ஸையே பார்த்துக் கொண்டிருப்பார் சோமுவின் தாத்தா. ஆமாம், புகைப் படம் எடுக்கும்போது லென்ஸையே பார்த்துக் கொண்டிருந்தவர்கள் படம் எல்லாமே இப்படித்தான் இருக்கும். நாம் எங்கே நின்று பார்த்தாலும் நம்மைப் பார்ப்பது போலவே இருக்கும்! அதற்காகப் படத்தின் பின் பக்கம் போய் நின்று கொண்டு பார்க்காதீர்கள்!

கேள்வி நேரம்

கேள்வி நேரம்

யாகேஷ்: சாந்தி, உன்னி லிண்டா, உங்களுக்கு நான் போடும் முதல் கேள்வி- ஆறுகளே இல்லாத நாடு எது?

சாந்தி: ஏனண்ணு, ஆறுகளே இல்லாமல்கூட ஒரு நாடு இருக்குமா?

யாகேஷ்: இருக்கே. உன்னி, உனக்குத் தெரியுமா?

உன்னி: ஆப்பிரிக்கா.

யாகேஷ்: ஆப்பிரிக்காவா? அங்கேதான் பெரிய பெரிய ஆறுகளெல்லாம் இருக்கின்றன. உலகிலேயே மிக நீளமான நதி அங்குதானே இருக்கிறது?

லிண்டா: அதன் பெயர் எனக்குத் தெரியும். நைல் நதிதானே?

யாகேஷ்: ரொம்பச் சரி.

சாந்தி: ஆறுகள் இல்லாத நாடு ஆஸ்திரேலியாதான்.

யாகேஷ்: ஆறு என்ற சொல் 'ஆ' என்ற எழுத்திலே தொடங்குது. அதனுலே உன்னியும் நீயும் 'ஆ'(A)விலே தொடங்குகிற நாடாய்ப் பார்த்துச் சொல்கிறீர்களா? லிண்டா, உனக்குச் சரியான விடை தெரியுமா?

லிண்டா: இல்லே அண்ணு; நீங்களே சொல்லிடுங்க.

யாகேஷ்: ஆறுகளே இல்லாத நாடு அரேபியாதான்! அங்கே எங்கு பார்த்தாலும் பாறைகளும், மணலுமாகவே இருக்கும். மூன்று புறமும் கடல் சூழ்ந்திருக்கும். ஆனுல், ஆறுகளே இல்லை... இப்போது அடுத்த கேள்வி. தாஜ் மகாலைக் கட்டியவர் யார்?

உன்னி: கொத்தனுர்கள்.

(சாந்தியும் லிண்டாவும் சிரிக்கிறுர்கள்)

யாகேஷ்: சிரிக்காதீர்கள். உன்னி சொன்னதும் ஒரு வகையில் சரிதான். 'கட்டியவர் யார்?' என்று கேட்கக் கூடாது. 'கட்டுவித்தவர் யார்?' என்றுதான் கேட்க வேண்டும். சரி, தாஜ் மகாலைக் கட்டுவித்தவர் யார்?

லிண்டா: ஷாஜஹான்.

யாகேஷ்: ஆம், ஷாஜஹான்தான். ஷாஜஹானுபாத் என்று கேள்விப்பட்டிருக்கிறீர்களா?

சாந்தி, யாகேஷ், உன்னி, லிண்டா புகைப்படம்: எம். வி. ரமணி



உன்னி: பகாளாபாத் என்று கேள்விப் பட்டிருக்கிறேன். ஷாஜகனுபாத்... ஏதாவது சாப்பிடுகிற சமாசாரமோ?

யாகேஷ்: யாருக்கும் தெரியாதா? நானே சொல்லி விடுகிறேன். பழைய தில்லி நகரத்துக்கு ஷாஜகானுபாத் என்ற ஒரு பெயரும் உண்டு. அதை உருவாக்கியவர், தாஜ்மகாலைக் கட்டிய அதே ஷாஜகான்தான். கோழி முட்டையிலிருந்து குஞ்சு வெளிவர எத்தனை நாட்களாகும்?

சாந்தி: 21 நாட்கள்.

யாகேஷ்: சரியான விடை. கோழி அடை காக்காமலே முட்டையிலிருந்து, குஞ்சு வெளி வர ஒரு கருவி இருக்கிறது. அதை யாராவது பார்த்திருக்கிறீர்களா?

லிண்டா: நான் பார்த்திருக்கிறேன்.

உன்னி: நானும்தான் ஒரு கோழிப் பண்ணையில் பார்த்திருக்கிறேன். அதற்கு ஏதோ பெயர் சொன்னார்களே... உம், உம்... நினைவுக்கு வந்து விட்டது. Incubator.

யாகேஷ்: அடே, நல்லா ஞாபகம் வைத்திருக்கிறாயே! 'அடை காக்கும் பெட்டி' என்று அதைத் தமிழில் சொல்லுவார்கள். அதில் முட்டைகளை வைத்தால் எத்தனை நாட்களிலே குஞ்சு வெளி வரும் தெரியுமா?

சாந்தி: 21 மணி நேரத்தில்.

உன்னி: இல்லை. அதுவும் 21 நாட்களில்தான் வெளிவரும்.

யாகேஷ்: உன்னி, நீ சொன்னது தான் சரி. கோழி அடைகாத்தாலும் 21 நாட்கள்தான். அடை காக்கும் பெட்டியில் வைத்தாலும் 21 நாட்கள்தான்! அடுத்து ஒரு கேள்வி. உலகிலேயே மிகப் பெரிய சமுத்திரம் எது?

லிண்டா: பசிபிக் மகா சமுத்திரம்.

யாகேஷ்: அடே, லிண்டா, சரியாய்ச் சொல்லிட்டியே! இப்போதுதான் பள்ளிக்கூடத்திலே இந்தப் பாடம் நடக்குதோ?

லிண்டா: இல்லே இல்லே. இதை நான் ரெண்டு வருஷத்துக்கு முன்னாலே படிச்சிருக்கேன்.

யாகேஷ்: உன் ஞாபக சக்தி வாழ்க! இப்போது, நான் உங்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு தாளும் பென்சிலும் தருவேன்.

ஒரு பூசணிக்காய்
ஒரு சாத்துக்குடி
இரண்டு வெண்டைக்காய்கள்
ஒரு புடலங்காய்
ஆறு கொத்தவரங்காய்கள்

இவற்றை வைத்து ஒரு படம் வரையணும். ஒரு பூனை முதுகுப்பக்கத்தைக் காட்டிக் கொண்டு உட்கார்ந்திருப்பது போல அந்தப் படம் இருக்கணும். எங்கே, வரைஞ்சு பாருங்கள்.

சாந்தி: எனக்குப் படமே போட வராது.

உன்னி: நான் போட்டுப் பார்க்கிறேன்.

லிண்டா: இதோ ஒரு நொடியிலே போட்டுக் காட்டுகிறேன்...



இதோ என் படம். எப்படியண்ணா இருக்கு?

யாகேஷ்: அடடே, லிண்டா எவ்வளவு ஜோரா வரைஞ்சிருக்கிறாள்! வருங்



பைபிள் ஒரே நூலா?

பைபிளை ஒரு தனிப் புத்தகம் என்று கூற முடியாது. 66 புத்தகங்களின் தொகுப்புத்தான் பைபிள்!

இதுவரை சுமார் 500 மொழிகளில் பைபிள் மொழிபெயர்க்கப் பட்டிருக்கிறது. இந்திய மொழிகளில் முதன் முதலாக மொழி பெயர்க்கப்பட்டது எந்த மொழியில் என்று தெரியுமா?

நம் தமிழ் மொழியில்தான்!

காலத்தில் பெரிய ஓவியராய் வரப் போகிருன். இப்போது நான் ஒரு விடுகதை போடுவேன். இதற்கு விடை என்ன? அது எந்த நாட்டு விடுகதை என்றும் சொல்லணும்.
'உள்ளே இருந்தால் ஓடித் திரிவான். வெளியே வந்தால் விரைவில் மடி வான்'

உன்னி: அது மீன்தானே?

யாகேஷ்: ஆமாம். மீன்தான். அது எந்த நாட்டு விடுகதை?

உன்னி: அமெரிக்க நாட்டு விடுகதை.

யாகேஷ்: இல்லே. இலங்கை, இங்கிலாந்து, இந்தோனேஷியா — இந்த மூன்று நாடுகளிலே ஒன்று.

சாந்தி: இங்கிலாந்து.

யாகேஷ்: சாந்தி சொன்னதுதான் சரி. இவ்வளவு நேரமாக நான் கேட்ட கேள்விகளுக்கெல்லாம் உங்களைச் சரியான விடை சொல்லச் சொன்னேன். ஆனல் இப்போது நான் நாலு கேள்விகள் கேட்பேன். நாலுக்கும் சரியான விடை சொல்லப்படாது. தப்பு தப்பா விடை சொல்லணும். எங்கே சாந்தி, நீயே நாலு கேள்விக்கும் விடை சொல்லு. காக்கையின் நிறம் என்ன?

சாந்தி: சிகப்பு.

யாகேஷ்: தமிழ் நாட்டின் தலைநகரம் எது?

சாந்தி: முடுக்குப்பட்டி.

யாகேஷ்: நேரு மாமா எந்த ஊரிலே பிறந்தார்?

சாந்தி: அண்ணு நகரிலே.

யாகேஷ்: சரி, இப்போ இதுவரை நான் எத்தனை கேள்விகள் கேட்டிருக்கிறேன்?

சாந்தி: மூணு.

யாகேஷ்: ஐயையோ! தோத்துப் போயிட்டியே!

சாந்தி: என்ன, தோத்துப் போனேனு!

யாகேஷ்: ஆமாம், நான் நாலு கேள்வி கேட்பேன். நாலுக்கும் தப்பு தப்பா விடை சொல்லணும் என்றேன். முதல் மூணுக்கும் தப்பா விடை சொன்னுய். ஆனல் நாலாவது கேள்வி என்ன? 'இப்போ இதுவரை நான் எத்தனை கேள்விகள் கேட்டிருக்கிறேன்' என்பதுதானே? அதற்கும் நீ தப்பு விடைதானே சொல்லணும்? சரியான விடையைச் சொல்லிட்டியே... அதனுலே,....

உன்னி: ஆமாம்; சாந்தி தோத்துப் போயிட்டா.

லின்டா: சாந்தி தோத்துப் போகலே. ஏமாந்து போயிட்டா!

(எல்லாரும் சிரிக்கிருர்கள்.)



டாக்டருக்கு டெலிபோன்

டாக்டருக்கு டெலிபோன் வந்தது. ''டாக்டர், டாக்டர், என் குழந்தை பெட்டிச் சாவியை முழுங்கிட்டது. சீக்கிரம் வாங்க டாக்டர்!''

''இதோ ஐந்து நிமிஷத்திலே வந்துடறேன்!''


சில விநாடிகளில் டெலிபோன் மணி அடித்தது. டாக்டர் போனைக் கையில் எடுத்தார். திரும்பவும் அதே குரல்:

''டாக்டர், நீங்க வரவேண்டாம். பெட்டியின் டூப்ளிகேட் சாவியைத் தேடி எடுத்துட்டேன்!''

யாருக்குச் சிரமம்?

''ஏண்டா நீ சேட்டு வீட்டிலே வேலே பார்க்கிறியே, அந்த வீட்டு அம்மாள் ஹிந்தியிலே பேசுறது உனக்குப் புரியாதே! நீ ரொம்ப ஸிரமப்படுவியே!''

''நான் ஏண்டா ஸிரமப்படணும்? அந்த அம்மாதான் ரொம்ப ஸிரமப் படுறுங்க.''



அடிமைப்புத்தி

வகுப்பு அறை சந்தைக்கடையாகக் கிடந்தது. எங்கு பார்த்தாலும் ஒரே இரைச்சல்!

ஆசிரியர் தமது நாற்காலியில் உட்கார்ந்தவாறே பரிதாபமாக வகுப்பைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

சத்தம் மேலும் மேலும் அதிகரிக்கவே, ஆசிரியர் வேகமாக எழுந்து உரக்கக் கூறினார்:

''அமைதி, அமைதி.''

அவர் குரலை எந்தப் பையனும் லட்சியம் செய்யவில்லை. எல்லோரும் அவுரவர் பாட்டுக்கு அரட்டை அடித்துக் கொண்டிருந்தனர்.

ஆசிரியர் ஒரு பையனை எழுந்து படிக்கச் சொன்னார். அவன் அரை மனத்தோடு சத்தமாகப் படிக்க ஆரம்பித்தான்.

வகுப்பறையில் சலசலப்புக் குறைந்தது. ஆசிரியர் கேட்டார்:

''கேள்வி பதில் எழுதாதவர்கள் எல்லோரும் நில்லுங்கள்.''

கம்பீரமாக எல்லாப் பையன்களும் எழுந்து நின்றனர்.

''ஏன் எழுதவில்லை?''

''எழுதவில்லை சார்!'' — ஒருவன் சொன்னான்.

''அதுதான் தெரிகிறதே, ஏன் எழுதவில்லை என்றுதான் கேட்கிறேன்.''

''வேறு வேலை இருந்தது சார்!''

பையன்கள் மனத்தில் கொஞ்சம் கூட பயமில்லை என்பது நன்றாகத் தெரிந்து போயிற்று.

''இப்படியெல்லாம் பதில் சொல்லக் கூடாது. நீங்கள் நன்றாகப் படித்து, நல்ல மதிப்பெண் பெற வேண்டும் என்பதற்காகத்தான் சொல்கிறேன். எனக்காகவா நீங்கள் செய்கிறீர்கள்? நன்றாகப் படித்தால் உங்களுக்குத்தான் நல்ல எதிர்காலம் அமையும்.''

''சார்...'' என்றவாறே ஒற்றைவிரலைக் காட்டிக் கொண்டு நின்றான் ஒரு பையன்.

ஆசிரியர் அவனை அனுப்பிவிட்டுச் சொன்னார்:

''உங்கள் கடமைகளை நீங்களே செய்ய வேண்டும். ஆசிரியர் சொல்லித்தான் செய்ய வேண்டும் என்று இருக்கக் கூடாது. ஆனால் நீங்களோ, நான் சொல்லிக்கூடச் செய்ய மாட்டேன் என்கிறீர்கள்.''

ஆசிரியர் அன்பான வார்த்தைகளை, அழகாகக் கூறிக் கொண்டிருந்தார்.

ஆசிரியர் வாயை மூடியதும் மறுபடியும் வகுப்பில் ஆரவாரம் எழ ஆரம்பித்தது.

அமைதியே உருவான அந்த நல்ல ஆசிரியர் என்ன செய்வது என்று புரியாமல் நின்றபோது, பள்ளி மணி அடித்தது.

மாணவர்கள் அவருடைய கட்டளைக்குக் காத்திருக்காமல் வகுப்பை விட்டு வெளியே ஓட ஆரம்பித்தார்கள்.

பள்ளி மணி அடித்தது.

வகுப்பறையில் வழக்கம் போல் ஒரே கூச்சல்.

''ஏண்டா, சாமிநாதா! கேள்வி பதில் எழுதிட்டியா?''

''அடப் போடா.. வாத்தியார் கேட்டால் நாளைக்குக் காட்டறேன்னு சொல்லிடலாம்.''

''ஏண்டா, புது வாத்தியார் எப்படி?''

''எந்த வாத்தியார் வந்தால் என்னடா? அந்தப் பழைய வாத்தியார் மாதிரிதான் இருப்பாங்க. அவங்க பாட்டுக்குச் சொல்லிட்டேதான் இருப்பாங்க. நாமபாட்டுக்கு 'இல்லே சார்'னு சொல்லிட்டே போக வேண்டியதுதானே!''

''இல்லேடா. புது வாத்தியார் நேத்துக் கண்டிப்பா எழுதிட்டு வரணும்னு சொல்லியிருக்கார்.''

''அட போடா!''

அந்தப் பள்ளிக்குப் புதிதாக வந்து சேர்ந்திருந்த புது ஆசிரியர், இரண்டாவது நாளாக வகுப்புக்குள் நுழைந்தார். சலசலப்புக் கொஞ்சம் அடங்கி மறுபடியும் எழுந்தது.

புது ஆசிரியர் உள்ளே வரும்போதே கையில் பிரம்புடன் வந்தார்.

வகுப்பில் சத்தம் 'சட்'டென அடங்கியது. எல்லோருடைய பார்வையும் பிரம்பிலேயே மொய்த்தன.

''கேள்வி-பதில் எழுதாதவன் எல்லாம் எழுந்திருங்க.''

தயக்கத்தோடு எல்லாரும் எழுந்து நின்றனர்.

முதல் வரிசையில் இருந்த ஒரு மாணவனுக்கு அருகில் சென்று பலமாகப் பிரம்பை ஓங்கினார், புது ஆசிரியர்.

அவன் நடுநடுங்கினான். ''சார், சார்! நாளை கட்டாயம் எழுதிட்டு வரேன் சார்'' என்று கெஞ்சினான்.

ஒவ்வொரு மாணவனின் அருகிலும் அவர் பிரம்புடன் சென்று மிரட்டினார்.

''நாளைக்கு வரும்போது ஒவ்வொருவரும் இரண்டு தடவை எழுதிட்டு வரணும். இல்லேன்னா தோலை உரிச்சுத் தோரணம் கட்டிடுவேன்.''

மலர்வண்ணன்

வகுப்பில் மயான அமைதி நிலவியது.

வழக்கமாக ஒரு விரலை நீட்டும் பையன்கள் எல்லாவற்றையும் மறந்து விட்டு இறுக்கமாக அமர்ந்திருந்தனர்.

புது ஆசிரியர் ஒரு பையனைப் படிக்கச் சொன்னார்.

கொஞ்சம் தாமதமானால் எங்கே அடி விழுமோ என்ற பயத்தில் அவன் அவசரம் அவசரமாகப் படிக்க ஆரம்பித்தான்.

அவன் தவறாகப் படித்தபோது கன்னத்தில் ஓங்கி அறையக் கையைத் தூக்கினார். ''இல்லே சார், சரியாப் படிக்கிறேன் சார்'' என்று கூறிக் கவனமாகப் படித்து முடித்தான் அவன்.

புது ஆசிரியர் ஒரு மாணவனை அழைத்தார்.

''நீ இனிமேல் தினமும் எனது சைக்கிளை நன்றாகத் துடைக்கணும்.''

இன்னொரு மாணவனை அழைத்துச் சொன்னார்:

''இன்றைக்குச் சாயங்காலம் நீ கடைக்குப் போய் இந்த லிஸ்டிலுள்ள காய்கறிகளெல்லாம் வாங்கி வா.''

பையன் பயபக்தியோடு வாங்கிக் கொண்டான்.

''டேய், நீங்க நாலு பேரும் சாயங்காலம் என்னோட கடை வீதிக்கு வாங்க. சில வீட்டுச் சாமான்களைச் சுமந்திட்டு வரணும்.''

''டேய், நீ டிரை க்ளீனிங்ஸ்லே இருக்கிற துணி மணிகளை வாங்கிட்டு வரணும். இந்தா பில்.''

எல்லோரும் தலையாட்டிச் சம்மதித்தனர்.

''சரி, படிக்கலாமா?''


பாடம் தொடங்கியது.

பிரம்பு மேஜையின் மேல் தூங்கிக் கொண்டிருந்தது. வகுப்பு அமைதியாக இருந்தது.

மறு நாள்—

புது ஆசிரியர் வகுப்புக்குள் நுழைந்தபோது, வகுப்பில் மாணவர்கள் இருக்கிறார்களா இல்லையா என்ற சந்தேகமே ஏற்பட்டது.

வகுப்பு அவ்வளவு அமைதியாக இருந்தது.



பையன்கள் எல்லோரும் கேள்வி பதில்களை எழுதி முடித்துக் கொண்டு, நோட்டோடு தயாராக இருந்தனர்.

உள்ளே நுழைந்த புது ஆசிரியர் வாய் விட்டுச் சிரித்தார்.

மாணவர்கள் முகத்தில் பயம் இருந்தது. ஆசிரியர் சொன்னார்:

''மாணவர்களே, உங்களுடைய நிலையைக் கண்டு நான் வெட்கப்படுகிறேன். உங்களுடைய கடமைகளை நீங்களாகச் செய்ய வேண்டும். ஆசிரியர் அடிப்பாரே என்று செய்வது அடிமைப் புத்தி. உங்களுடைய பழைய ஆசிரியர் என்னை விட அதிகம் படித்தவர், அன்பானவர்; நன்றாகப் பாடம் சொல்லித் தரக் கூடியவர்; பரிசுகள் பல பெற்றவர். உங்கள் மேலே உள்ள அன்பால் அவர் உங்களைக் கண்டிக்காமல் சொல்லித் தந்தார். ஆனால், நீங்கள் அவரோட பெருமைகளைப் புரிஞ்சுக்காமல் அவரை அவமானப்படுத்தினீங்க. அவர் வேறு ஸ்கூலுக்கே போய் விட்டார்.

''இப்போ, நான்வந்து அடிஉதைன்னு ஆரம்பிச்சதும், பயந்து நடுங்குகிறீர்கள். நீங்கள் மாணவர்கள். என்னோட சைக்கிளை எதற்குத் துடைக்கணும்? என் வீட்டுக்கு ஏதுக்குக் காய்கறி வாங்கணும்? அவசியம் இல்லே. அது அநாகரிகமும் கூட. ஆனா, அடி விழும்கிற பயத்தினாலே விழுந்தடிச்சுச் செய்யறீங்க. ஆசிரியர் அன்பானவர்னு தெரிஞ்சப்போ உங்க வேலையையே செய்ய மறுத்த நீங்கள், அடி விழும்னு தெரிஞ்சதும் தேவையில்லாத வேலைகளைக் கூடச் செய்யத் தயாராயிட்டீங்க. ஏன் இந்த அடிமைப் புத்தி?

''நம்ம கடமைகளை மத்தவங்க சொல்றாங்களோ இல்லையோ நாமே செய்யணும். பயந்து செய்யறது மனுஷத்தனமே இல்லே.

''சொல்லாமலே செய்யறது உயர்ந்த குணம். சொல்லியபடி செய்யறது நல்ல குணம். ஆனால், சொல்லியும் செய்யாமல் இருக்கிறது தாழ்ந்த குணம்.

''இது உங்களுக்குமட்டுமில்லே. இந்த நாட்டுக்கே சொல்ல வேண்டியது.

''எத்தனையோ ஆசாமிகள், அதிகாரிகள் கவனிக்கலேன்னு தெரிஞ்சா வேலை செய்யாமல் இருக்காங்க. அதிகாரிகள் கண்டிப்பானவர்கள்னு தெரிஞ்சாக்க, ராத்திரி எட்டு மணி, ஒன்பது மணி வரையில் ஆபீஸ்லே வேலை செய்யறாங்க.

''இது நல்லதுதானா?

''உங்களுடைய கடமைகளை நீங்களே செஞ்சிட்டா அன்பான ஆசிரியர் கிடைப்பார். இல்லென்னா என்னைமாதிரி அடக்குமுறை ஆசிரியர் கிடைப்பார். இப்பச் சொல்லுங்க. உங்களுக்கு யார் வேண்டும்?''

—ஆசிரியர் நிதானமாகக் கூறி முடித்து விட்டு மாணவர்களைக் கூர்ந்து கவனித்தார்.

ஒரு மாணவன் எழுந்து சொல்ல ஆரம்பித்தான்.

''சார், எங்களை மன்னிச்சுடுங்க சார். அடிமைப் புத்தியைப் பற்றி நாங்க நல்லாப் புரிஞ்சுக்கிட்டோம். எங்க பழைய ஆசிரியரோட பெருமைகளை நாங்க புரிஞ்சிருந்தாலும், அடிமைப் புத்தி காரணமாக அவரை இழந்திட்டோம். இனிமேல் நாங்களே எங்க கடமைகளைச் செய்வோம். மத்தவங்க சொல்லித்தான் செய்யணும்கிற பேச்சையே விட்டுட்டோம். இது சத்தியம் சார்.''

''ஆமாம் சார். இது சத்தியம்.'' வகுப்பே கூவியது.

புதிய ஆசிரியர் கம்பீரமாக நிமிர்ந்தார்.

''சார், எங்க பழைய ஆசிரியரைப் பார்த்து எங்களோட செயலுக்காக மன்னிப்புக் கேட்கணும். அப்போதுதான் எங்கள் மனசு ஆறும்.''

''நல்ல காரியம்தான். அவசியம் செய்யுங்கள்.''

அன்று மாலையே அடிமைப் புத்தியை விட்டுவிட்ட அந்த மாணவர் கூட்டம் பழைய ஆசிரியர் வீட்டைத் தேடிப் புறப்பட்டபோது, புதிய ஆசிரியரும், தலைமை ஆசிரியரும் ஒருவரையொருவர் பார்த்துப் புன்முறுவல் பூத்தார்கள்.



''ஏண்டா பையா, நீ கோபாலனுக்கு உறவோ?''

''ஆமாம். ஆனால் எட்டத்து உறவு.''

''எட்டத்து உறவா? அப்படின்னா?''

''அவரு எங்க அப்பாவுக்கு முதல் பிள்ளை. நான் எட்டாவது பிள்ளை.''

இது கூடத் தெரியாதா?

ஆழ்.வே.ராமசாமி

விடுமுறையில் மாங்குடி கிராமத்துக்குக் கண்ணப்பனுடைய பெரியம்மாவின் பையன்கள் வந்திருந்தார்கள். அவர்கள் கண்ணப்பனை மிகவும் இளப்பமாக நினைத்து விட்டார்கள். பாஸ்கரனும் முரளியும் அவனை என்ன பாடு படுத்துகிறார்கள்! வந்து நான்கு நாட்கள்தான் ஆகின்றன. அதற்குள்... அடேயப்பா!

எல்லோரையும் வைத்துக் கொண்டு பாஸ்கரனும் முரளியும் சேர்ந்து கண்ணப்பனைக் கேலி செய்து கொண்டே இருந்தார்கள்.

''டேய், கண்ணப்பா! உனக்கு கிரிக்கெட் விளையாடத் தெரியுமா?'' என்று கேட்டான் பாஸ்கரன்.

கண்ணப்பன் உதட்டைப் பிதுக்கினான். ''ம்ஹூம். தெரியாது!''

''அடப் பாவமே! அது கிடக்கட்டும். பாஸ்கெட் பால் ஆடத் தெரியுமா?'' என்று கேட்டான் முரளி.

''ம்ஹூம்!''

''செஸ்....?''

''ம்ஹூம்!''

''அட, சே!''

''அது போகட்டும். நீ சினிமா பார்த்திருக்கிறியா?'' என்று கேட்டான் பாஸ்கரன்.

கண்ணப்பனின் முகம் சிறிது பிரகாசம் அடைந்தது. ''ஓ! பார்த்திருக்கிறேனே!'' என்றான் உற்சாகத்துடன்.

கண்ணப்பனின் அந்தப் பதில் பாஸ்கரனுக்கு ஏமாற்றத்தைத் தந்திருக்க வேண்டும். 'பார்த்ததில்லை' என்று சொல்லியிருந்தால் அவனுக்கு மகிழ்ச்சியாக இருந்திருக்கும்போல் தோன்றியது.

அதனால் அவன் மறுபடியும் ஒரு கேள்வியைக் கேட்டு மடக்கினான். ''நீ சினிமாஸ்கோப் படம் பார்த்திருக்கிறியா?''


''அப்படீன்னா?''

பாஸ்கரன் 'கொல்'லென்று சிரித்தான். முரளி சிரிப்பை அடக்க முடியாமல் எம்பி எம்பிக் குதித்தான்.

''போடா பட்டிக்காடு! வெளியே சொன்னால் வெட்கம். உனக்கு என்ன தான் தெரியும்? இந்த மாங்குடி கிராமத்திலே எருமை மாடு குளிப்பாட்டத் தான் தெரியும்!'' என்று பரிகாசம் பண்ணினான் பாஸ்கரன்.

அவன் பரிகாசம் பண்ணிவிட்டுப் போகட்டும். இந்தப் பெரியம்மாவுமா சேர்ந்து கொண்டு சிரிக்க வேண்டும்?

ஒருவரும் இல்லாத சமயத்தில், கண்ணப்பன் தன் அம்மாவிடம், ''பட்டணத்திலே யிருந்து வந்திருக்கிற இந்



தப் பயல்கள் எப்போ போவான்களோ, தெரியலையே அம்மா! சுத்த மோசம்!'' என்றான்.

அம்மா சட்டென்று அவன் வாயைப் பொத்தினாள்.

''அப்படியெல்லாம் சொல்லக் கூடாது. விருந்தாளியா வந்திருக்கிறவங்க மனசு புண்படும்படியாகப் பேசக் கூடாது'' என்றாள்.

''அவர்கள் மட்டும் பேசலாமா?''

''அதையெல்லாம் பெரிசா எடுத்துக்காதே! கொஞ்சம் பொறுத்துக்கோ!'' என்று சாந்தப்படுத்தினாள் அம்மா.

பாஸ்கரன் தினமும் மடிப்புக் கலையாத சட்டை-பாண்ட் போட்டுக் கொண்டான். கிராப்பை அழகாக வாரி முன்பக்கம் சிலுப்பி விட்டுக் கொண்



''டேய், டேய், மெதுவாப் பார்த்து ஓட்டுடா. நான் சைக்கிள் பின்னாலே ஏறிப்போறது இதுதாண்டா முதல் தடவை.''

''பயப்படாதேடா, நானும் சைக்கிள் ஓட்டுறது இதுதாண்டா முதல் தடவை.''

டான். 'குட்', 'எஸ்' என்றெல்லாம் அடிக்கடி சொன்னான்.

பெரியம்மா, தன் பிள்ளைகள் பாஸ்கரனையும் முரளியையும் பார்த்துப் பூரித்துப் போனாள்.

அவள், கண்ணப்பனின் அம்மாவைப் பார்த்து, ''என்னடி நீ, இந்தக் காலத்திலேயும் உன் பிள்ளையை இப்படி வளர்த்திருக்கிறே? எது கேட்டாலும் 'தெரியாது, தெரியாது' என்கிறான்! இப்படியே விட்டு வச்சா, மக்கு பிளாஸ்திரியாக அல்லவா போயிடுவான்!'' என்றாள்.

தன் பிள்ளைகளைப் பற்றி அவள் மிகவும் பெருமையாகப் பேசினாள்:

''எங்க பாஸ்கரன் இருக்கிறானே, அவன் சித்திரம் வரையறதிலே கெட்டிக்காரன். ஸ்கூல்லே நடந்த சித்திரப் போட்டியிலே அவன்தான் முதல் பரிசு வாங்கினான். எங்க வீட்டுக் கூடத்திலே ஒரு படம் வரைஞ்சு மாட்டியிருக்கிறான் பாரு... அடடா! வர்றவங்க போறவங்க எல்லாரும் மூக்கு மேலே விரலை வைச்சு ஆச்சரியப்பட்டுப் போறாங்க!

''எங்க முரளி இருக்கானே, அவன் விளையாட்டிலே முதல் பரிசு வாங்கியிருக்கிறான்! அவன் விளையாடறப்போ எல்லாப் பையன்களும் கையைத் தட்டி ஆரவாரம் பண்ணுவாங்க பாரு... ஐயையோ! கண்கொள்ளாக் காட்சிதான்! அவன் அப்பாவுக்கு ஒரே சந்தோஷம். அவனுக்கு மட்டை, பந்து எல்லாம் வாங்கிக் கொடுத்திருக்கிறார்!''

கண்ணப்பனுக்குச் சங்கடமாக இருந்தது. மிகவும் வருத்தப்பட்டான்.

அன்று மாலை நடந்த நிகழ்ச்சி அவனது வருத்தத்தை மிகவும் அதிகப் படுத்திவிட்டது.

கண்ணப்பனின் அம்மாவிடம் பாஸ்கரன் சொன்னான்: ''சித்தி, எனக்கு ஒரு ஆசை. அதாவது, நம்ம கண்ணப்பனை எங்க கூட மெட்ராஸுக்கு அழைச்சுக்கிட்டுப் போகணும். அங்கே மவுண்ட் ரோட்டிலே நிறுத்தி வச்சு, காரும் பஸ்ஸும் 'சர் சர்'ன்னு போறதைக் கண்டு இவன் அல்லாடறதைப் பார்த்து ரசிக்கணும்! எப்படி?''

இப்படிச் சொல்லிவிட்டு, அந்தக் காட்சியை மனத்திற்குள் கற்பனை செய்து ரசித்தபடியே 'ஹாஹா' என்று சிரித்தான்.

பெரியம்மாவுக்குச் சிரிப்பை அடக்க முடியவில்லை. மூக்குக் கண்ணாடி நழுவிக் கீழே விழுந்துவிடும் அளவுக்கு அவள் விழுந்து விழுந்து சிரித்தாள். அவளும் அந்தக் காட்சியைக் கற்பனை செய்து பார்த்திருக்க வேண்டும் என்று தோன்றியது.

கண்ணப்பன் கவலையோடு கன்னத்தில் கையை வைத்தபடி இருந்தான். மற்றவர்கள் அவனை உதவாக்கரையாக அல்லவா நினைத்து விட்டார்கள்!

ஒரு நாள் மாலை, அம்மா, பெரியம்மா, பாஸ்கர், முரளி, கண்ணப்பன், அவன் தங்கை மாலா — எல்லோருமாகக் கோவிலுக்குப் போனார்கள். சுவாமி தரிசனம் செய்துவிட்டுத் திரும்பி வந்து கொண்டிருந்தார்கள்.

முயல் குட்டி

-வேதம்-

கண்ணன் வீட்டுத் தோட்டத்தில்
கண்ணை உருட்டும் முயல்குட்டி!
பண்ணி வைத்த ரொட்டியைப்போல்
பார்க்க அழகு! படுகட்டி!

பிங்க் ரோஜா நிறத்திலே
பீதி கொண்ட இருகண்கள்!
தங்கைப் பாப்பா போல்; குட்டை!
தடவிப் பார்த்தால் புசுபுசுவால்!

குட்டி அலைபோல் துள்ளிற்று!
கொஞ்சிப் பார்த்தோம்! திமிரிற்று!
''சுட்டிப் பயலே!'' என, 'கோஸை'
திணித்தோம் வாயில்; கடித்திற்று!'



எல்லோரும் முன்னால் போய்க்கொண்டிருந்தார்கள். கண்ணப்பன் மட்டும் அவர்களுடன் சேராமல் தனியாகப் பின்னால் வந்து கொண்டிருந்தான். அப்படியும் பாஸ்கரன் பின்னால் திரும்பித் திரும்பிப் பார்த்து என்னவோ கேலியாகப் பேசிக் கொண்டு போனான்.

அந்தச் சமயம் அவர்கள் ஓர் ஆற்றின் கரையோரமாகப் போய்க்கொண்டிருந்தார்கள். பின்னால் திரும்பித் திரும்பிப் பார்த்தபடி கண்ணப்பனைக் கிண்டல் செய்து கொண்டே ஆற்றங்கரையோரமாக நடந்து வந்த பாஸ்கரனின் கால் சறுக்கி விட்டது. நொப்பும் நுரையுமாகச் சுழிவிட்டு ஓடிக்கொண்டிருந்த ஆற்றில் அவன் விழுந்து விட்டான்! கையையும் காலையும் போட்டு உதைத்துக் கொண்டு, 'ஆவ், ஆவ்' என்று வாயைப் பிளந்து தண்ணீரையும் குடிக்கத் தொடங்கி விட்டான். விழி பிதுங்கிக் கொண்டு வந்தது. ஆற்றின் வேகமான இழுப்பிலே அவன் அடித்துச் செல்லப்பட்டான்!

''ஐயோ! ஐயோ! பாஸ்கரா!''என்று அலறினார்கள் அவனுடன் முன்னால் வந்து கொண்டிருந்தவர்கள்.

''ஐயோ! அவனுக்கு நீச்சல் தெரியாதே!'' என்று கத்தினாள் பெரியம்மா.

''ஐயோ! இப்போ என்ன செய்வது? யாராவது காப்பாற்ற மாட்டார்களா?'' என்று கையைப் பிசைந்தான் முரளி.

ஓடிவந்த கண்ணப்பன் சரேலென்று ஆற்றில் பாய்ந்து நீந்தினான். பாஸ்கரனைப் பிடித்து இழுத்துக் கொண்டு கரையேறினான்.

அடேயப்பா! பயல் என்னமாய் நீந்துகிறான் — அதுவும் இன்னொருவனையும் சேர்த்து இழுத்துக் கொண்டு! தினமும் நீந்திக் நீந்திக் கண்ணப்பனுக்குப் பழக்கமாகியிருந்தது.

எமகாதகப் பயல்! சரியான சமயத்தில், தன் உயிரைப் பற்றிக் கவலைப் படாமல் பாஸ்கரனைக் கரை சேர்த்துக் காப்பாற்றி விட்டான்! இல்லாத போனால் பாஸ்கரன் ஆற்று நீரிலே அடித்துச் செல்லப்பட்டிருப்பான்.

பெரியம்மா, ஆச்சரியத்தாலும் மகன் காப்பாற்றப்பட்ட ஆனந்தத்தாலும் வாயைப் பிளந்தாள்.

தண்ணீர் சொட்டச் சொட்ட வெடவெடத்து நின்று கொண்டுருந்த பாஸ்கரனைப் பார்த்துச் சிரித்தான் கண்ணப்பனின் தங்கை மாலா.

''என்ன பாஸ்கர் அண்ணா, உனக்கு நீந்தத் தெரியாதா? எங்க கண்ணப்பன் அண்ணா எப்படி நீஞ்சினான் பார்! இப்போ அவன் மட்டும் ஆற்றிலே பாய்ந்து உன்னைத் தூக்கி யிருக்காத போனா, உன் கதி என்ன ஆகியிருக்கும்? நீயும் முரளியும் சேர்ந்துக்கிட்டு அவனுக்கு அது தெரியலே, இது தெரியவேன்னு சும்மா கிண்டல் பண்ணிக்கிட்டே இருந்தீங்களே! அவனுக்குத் தெரிஞ்சது உங்களுக்குத் தெரியலையே!'' என்றாள் அவள்.

யாரும் பதில் பேசவில்லை.


பெரியம்மாவின் முகத்தில் அசடு வழிந்தது.


''என்ன, பெரியம்மா?'' என்றாள் மாலா.

''சும்மா இருடி மாலா!'' என்று அம்மா அதட்டினாள்.


கண்ணப்பனுக்கு இப்போது மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. அவனது சோர்வெல்லாம் பறந்து விட்டது. மற்றவர்களுக்குத் தெரியாதது அவனுக்குத் தெரிந்திருக்கிறதே!

பூக்கூடை





பட எழுத்துக்கள்





இந்தப் படங்களைப் பார்த்ததும் யாரோ ஒரு தம்பி அல்லது தங்கை வரைந்தது என்றுதானே நினைக்கிறீர்கள்? இல்லை. பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த மனிதர்களுக்கு எழுதத் தெரியாது. காரணம், அப்போது எழுத்துக்களே இல்லை!

ஒரு குதிரையைப் பற்றிக் குறிப்பிட வேண்டுமானால் உடனே குதிரையின் படத்தை வரைந்து விடுவார்கள். 'பருந்து' என்று எழுதுவதற்குப் பதில் ஒரு பருந்தின் படத்தையே போட்டுக் காட்டுவார்கள். 'தோட்டம்' என்று எழுதுவதற்குப் பதில் சில மரங்களை வரைவார்கள். அப்படி அவர்கள் வரைந்த எழுத்துக்களுக்குப் 'பட எழுத்துக்கள்' என்று பெயர்.

எண் 13ஐ ஏன் வெறுக்கிறார்கள்?

மேல் நாடுகளில் 13 என்ற எண் துர்அதிர்ஷ்டம் பிடித்தது என்று பலர் நினைப்பதாகச் சென்ற இதழில் படித்தீர்கள்.

இதற்கு என்ன காரணம்?


ஏசுநாதரும் அவரது சிஷ்யர்களும் விருந்து உண்ண அமர்ந்தார்களாம். மொத்தம் 13 பேர் இருந்தார்களாம். அவர்களில் முதல் முதலாக எழுந்த ஜூடாஸ் இஸ்காரியட் (JUDAS ISCARIOT) என்பவர் இயேசுநாதரைக் காட்டிக் கொடுத்துவிட்டுத் தூக்குப் போட்டுக்கொண்டு இறந்து விட்டாராம்.



ஆகையால் 13 பேர் ஓரிடத்தில் இருந்து அவர்களில் ஒருவர் முதலாவதாக எழுந்தால், அவர் ஏதேனும் கெடுதல் செய்து விடுவார். அத்துடன், அதே ஆண்டில் இறந்து போய்விடுவார் என்ற மூட நம்பிக்கை பிறந்தது. பிறகு 13 என்ற எண்ணே துர் அதிர்ஷ்டம் பிடித்தது என்றாகி விட்டது!

தமிழும் மலையாளமும்


தமிழ்	மலையாளம்
நான்	ஞான்
நாங்கள்	ஞங்ஙள்
தேங்காய்	தேங்ஙா
மாங்காய்	மாங்ஙா
நீங்கள்	நிங்ஙள்
நாவல்	ஞாவல்
அவைகள்	அவகள்
அவன்	அவ்ன்
அவர்	அவர்



குழந்தைகளே நடத்தும் இரயில்வே!

சோவியத் நாட்டில், குழந்தைகளே நடத்தும் ரயில்வே போக்கு வரத்து

இருக்கிறது! ஒன்று இரண்டா? முப்பதுக்கு மேற்பட்ட ரயில்வேக்கள் அந்த நாட்டில் குழந்தைகளாலேயே நடத்தப் படுகின்றன. அந்த ரயில்வேக்களில் வேலை பார்க்கும் எல்லாருமே குழந்தைகள்தாம்! என்ஜினியர், ஸ்டேஷன் மாஸ்டர், கார்டு, பாதை அமைப்போர் எல்லாரும் குழந்தைகளே! இந்த இரயில்வேக்களை அரசாங்கம் நடத்தும் ரயில்வேயைச் சேர்ந்த நிபுணர்கள் அடிக்கடி வந்து பார்வையிடுவார்கள்; யோசனைகள் கூறுவார்கள்; வேண்டிய உதவிகளையும் செய்வார்கள்.



நேரம் தவறாமல், விபத்து இல்லாமல், குழந்தைகள் நடத்தும் இந்த ரயில் போக்குவரத்து நடைபெறுகிறது!

ஆண்டுதோறும் சுமார் 10 லட்சம் குழந்தைகள் இந்த ரயில்வேக்களில் பயணம் செய்கிறார்கள்!

தங்க நகரம்

'தங்க நகரம்' என்று கேள்விப் பட்டிருக்கிறீர்களா?

'ஓ! ஞான பீடப் பரிசு பெற்ற அகிலன் எங்களுக்காக எழுதிய 'தங்க நகரம்' என்ற கதைப் புத்தகம்தானே?' என்று சிலர் கேட்கலாம்.

இது புத்தகமல்ல. உண்மையிலேயே அப்படி ஒரு நகரம் இருக்கிறது. எங்கே?

தென் ஆப்பிரிக்காவில் உள்ள ஜோகனஸ்பர்க் நகரத்தை City of Gold என்று அழைக்கிறார்கள். அந்நகரத்திலும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் தங்கம் வெட்டி எடுக்கப் படுகிறது. உலகில் கிடைக்கக் கூடிய தங்கத்தில் பாதி தென் ஆப்பிரிக்காவில்தான் கிடைக்கிறது.

கழுத்திலே வளையல்!

கைக்குத்தான் வளையல் போடுவார்கள். கழுத்துக்கு யாராவது வளையல் போடுவார்களா?

பர்மாவில் 'பாண்டுங்' என்று ஒரு ஜாதியார் இருக்கிறார்கள். அவர்கள் சின்னஞ் சிறு பெண் குழந்தைகளின் கழுத்திலே பித்தளை வளையங்களை மாட்டி வைக்கிறார்கள். வளையங்களை மாட்டி வைப்பதால் கழுத்து நீளுகிறது. கழுத்து நீள நீள ஒன்றன் மேல் ஒன்றாக வளையங்களை மாட்டிக் கொண்டே போகிறார்கள்.

''ஐயையோ! இப்படிச் செய்தால் கழுத்து ஒட்டைச் சிவிங்கி போல் ஆகிவிடுமே!'' என்று நாம் கவலைப்படலாம். ஆனால் அவர்கள் ஊரில் கழுத்து நீளமாக இருப்பவள்தான் அழகியாம்! அவளைக் கல்யாணம் செய்து கொள்ள 'நான் முந்தி, நான் முந்தி' என்று இளைஞர்கள்போட்டிபோட்டுக்கொண்டு முன் வருவார்களாம்.



பர்மாதேசத்து குட்டிக்கதைகள்

புத்தரும் அணிலும்

புத்தர் உண்மையானது எது என்று ஆராயும் பொருட்டு வீட்டை விட்டு வெளியேறினார். நாளாக நாளாகப் புத்தருக்கு எதுவும் தோன்றவில்லை. தன் னம்பிக்கை இழந்து தம் வீட்டிற்கே திரும்பிவிட நினைத்தார். புத்தர் அவ்வாறு நினைக்கையில் அவர் ஓர் அணிலைக் கண்டார். அந்த அணில் ஏரியின் கரை



யில் அமர்ந்து கொண்டு வாலைத் தண்ணீருக்குள் நனைத்தது. பிறகு வெளியே எடுத்து நிலத்தின் மீது உதறியது. இப்படியே அது பலமுறை செய்து கொண்டிருந்தது.

புத்தர் அந்த அணிலைப் பார்த்து, ''அணிலே, நீ என்ன செய்கிறாய்?'' என்று கேட்டார்.

உடனே அணில், ''இந்த ஏரியில் உள்ள தண்ணீரைக் காலி செய்கிறேன்'' என்றது.

இதைக் கேட்ட புத்தர், ''என்ன! இந்த ஏரியில் உள்ள நீரை வெளியேற்றுவதா? இது உன்னால் முடியாத காரியம். நீ உன்னுடைய வாலைக் கோடி தடவை தண்ணீருக்குள் விட்டு விட்டு வெளியே உதறினாலும் நீர் குறையாது. முன்பு இருந்த அளவே தண்ணீர் இருக்கும்'' என்றார்.

இதைக் கேட்ட அணில், ''நல்லது நான் கடைசி வரை விடாமுயற்சி செய்வேன்'' என்றது.

இதைக் கேட்ட புத்தர் அணில் தனக்குப் பாடம் கற்பித்து விட்டதாக நினைத்துக் கொண்டார். பிறகு அவர், வீட்டுக்குப் போகும் எண்ணத்தைக் கைவிட்டு உண்மையைத் தேடிப் புறப்பட்டார்.

மேகம் பேசியது!

ஒரே ஊரில் அடுத்தடுத்த வீடுகளில் வாழ்ந்து வந்தார்கள் இரு நண்பர்கள். அவர்கள் பொருள் சம்பாதிக்கும் பொருட்டுத் தங்கள் மனைவியரை வீட்டில் விட்டு விட்டுக் கிளம்பிச் சென்றார்கள்.

அவர்கள் இருவரும் ஊரை விட்டு வெகு தொலைவில் வந்து பொருள் சேர்த்தார்கள். அப்போது அந்த இருவரில் ஒருவன் மற்றவனைக் கொன்றுவிட்டு அவனுடைய பணத்தையும் தானே எடுத்துக் கொள்ள ஆசைப்பட்டான். எனவே, மற்றவனை அடித்துக் கொன்று விட்டான். சாகும் தருவாயில் இருந்தவன் மற்றவனை நோக்கி, ''நாம் இங்கு தனியாக இருக்கிறோம். எனவே நீ என்னைக் கொல்வதை யாரும் அறிய மாட்டார்கள் என்று நினைக்காதே! வானத்தில் உள்ள மேகம் இவற்றையெல்லாம் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறது. அந்த மேகம் உன்னுடைய தீய செயலை என் மனைவிக்குக் கூறும்'' என்று சொல்லிவிட்டு இறந்துபோனான்.

கொலை செய்தவன் இறந்தவன் கூறியதைக் கேட்டுச் சிரித்தான். பிறகு, இறந்தவனின் பணத்தை எடுத்துக்



கொண்டு தன் வீட்டை வந்தடைந்தான். அப்படி வந்தவன், ''என் கூட்டாளி இங்கிருந்து கிளம்பிய சில நாட்களிலேயே பிரிந்து சென்றுவிட்டான்'' என்று கூறினான்.

நாட்கள் நகர்ந்தன. ஒரு நாள் அவன் தன் வீட்டுக்கு வெளியே உட்கார்ந்திருக்கும்போது, வானத்தில் மேகம் நகர்ந்து செல்வதைப் பார்த்தான். அதைக் கண்டவுடன், இறக்

கும் தருவாயில் தன் கூட்டாளி கூறியது அவனது நினைவுக்கு வந்தது.

''மேகம் அவன் மனைவியிடம் போய்க் கூறும் என்றானே, எவ்வளவு முட்டாள் அவன்! மேகம் பேசுமா எங்காவது?'' என முணு முணுத்துக் கொண்டான்.

அவன் சிரிப்பதையும், முணு முணுப்பதையும் கண்ட அவன் மனைவி, ''என்ன காரணம்?'' என்று கேட்க, அவன் ''ஒன்றுமில்லை'' என்று கூறி மழுப்பினான்.

ஆனால், அவன் மனைவி திரும்பத் திரும்பக் கேட்டுத் தொந்தரவு செய்தாள். அவனும் வேறு வழியின்றி, ''நீ இதை யாரிடமும் சொல்லக்கூடாது'' என்று உறுதிமொழி வாங்கிக் கொண்டு எப்படி அவன் தன் கூட்டாளியைக் கொன்றுவிட்டுப் பணத்தை எடுத்துக் கொண்டு வந்தான் என்பதைக் கூறினான்.

அவனுடைய மனைவி இரண்டு மூன்று வாரங்கள் இது பற்றி யாரிடமும் கூறவில்லை. பிறகு ஒரு நாள் தன் தோழியிடம் கூறினாள். அந்தத் தோழி அவள் தோழியிடம் கூற, அது இப்படியே பரவி, இறந்தவனின் மனைவியிடம் போய்விட்டது. அப்புறம் என்ன?

கொலை செய்தவன் கைது செய்யப்பட்டுத் தண்டனை பெற்றான்!

பறவைகளும் எலிகளும்

ஒரு மேட்டு நிலத்தில் பறவைகளும் அவற்றின் ராஜாவும் மகிழ்ச்சியாகவும் பாதுகாப்பாகவும் வாழ்ந்து வந்தன. அந்நிலத்தை விட்டு வேறு எங்கும் போகக் கூடாது என்று கட்டளை இட்டிருந்தது பறவை ராஜா.

ஒரு நாள் பறவை ராஜாவுக்குத் தெரியாமல் அந்தப் பறவைகள் எல்லாம் ஒன்று சேர்ந்துகொண்டு தாழ்ந்த நிலத்தை நோக்கிச் சென்றன. அங்கு தான் நிறைய வயல்களும் நெல்லும் இருந்தன. அதைக் கண்டவுடன் பறவைகள் எல்லாம் அவற்றைத் தின்னும் ஆவலுடன் வயலில் இறங்கின. அந்த வயலில் ஒருவன் பெரிய வலை ஒன்றை விரித்து வைத்திருந்தான். அந்த வலையில் பறவைகள் சிக்கிக் கொண்டன. அவை பறக்க முயற்சி செய்தன. ஆனால், வலையில் நன்றாகச் சிக்கிக்கொண்டதால் பறக்க முடியவில்லை.

அப்போது அவை பறவை ராஜாவின் கட்டளையை மீறியது தவறு என்பதை உணர்ந்தன.



பறவைகளைக் காணாமல் தேடியலைந்த பறவை ராஜா, வலையில் சிக்கிக் கொண்ட பறவைகளைப் பார்த்தது. ''என்னுடைய கட்டளையை மீறிய தால்தானே இந்தத் துன்பம்? சரி, இப்போது நான் ஒன்று கூறுகிறேன். ஒற்றுமையுடன் செயல்பட்டால் இந்த வலையில் இருந்து மீளலாம்'' என்று கூறியது பறவை ராஜா.

இதனைக் கேட்ட பறவைகள் ''நீங்கள் என்ன சொன்னாலும் கேட்கிறோம். எங்களை இந்தச் சிறையிலிருந்து விடுதலை செய்யுங்கள், ராஜாவே'' என்று கெஞ்சின.

பறவை ராஜன் அப்பறவைகளை நோக்கி ''நான் பறக்கவும் என்றவுடன் நீங்கள் அனைவரும் ஒன்றுசேர்ந்து ஒரே சமயத்தில் பறக்கத் தொடங்க வேண்டும்'' என்றது.

மற்றப் பறவைகள் இதற்கு ஒப்புக் கொண்டன. பறவை ராஜன் ''பறக்கவும்'' என்றவுடன் எல்லாப் பறவைகளும் ஒன்றாகக் காலில் மாட்டிய வலையுடன் பறக்கத் தொடங்கின. அவை தங்கள் வாழ் நிலமாகிய மேட்டு நிலத்தைச் சென்றடைந்தன. இருந்த போதிலும் அவைகளின் காலில் வலை இருந்ததால் தனித் தனியாகப் பிரிந்து பறக்க முடியவில்லை. வருந்தின.

பறவை ராஜனுக்கு ஒரு எலி தோழனாக இருந்தது. அந்த எலிக்குப் பறவை ராஜனை மிகவும் பிடிக்கும். எனவே, பறவை ராஜன் கேட்டுக் கொண்டதற்கிணங்கத் தன் சொந்தக்கார எலிகள் பலவற்றை அது அழைத்துக்கொண்டு வந்தது. எல்லா எலிகளும் ஒன்றுகூடி, பறவைகளின் காலில் மாட்டியிருந்த வலைகளை அறுத்தெறிந்தன. பறவைகள் மகிழ்ச்சியுடன் பறந்து திரிந்தன.



சிப்பு வியாபாரி: இந்தச் சிப்பு மிகவும் உறுதியானது. கீழே போட்டால் உடையாது. வளைத்தால் ஒடியாது; சுத்தியலால் அடித்தால் கூட அப்படியே இருக்கும்.
சிறுவன்: அதெல்லாம் சரிதான். தலை வார முடியுமா?



''சார், இவன் என்னை எருமை மாடுன்னு சொல்றான். நான் எருமை மாடு மாதிரியா இருக்கேன்?''
''தம்பி, என்னாலே எப்படிச் சொல்ல முடியும்? நான் மிருக வைத்தியர் இல்லையே!''



அம்மா: டேய் சந்துரு, நீ இந்தவருஷம் பரீட்சையிலே பாஸானால் அப்பா சைக்கிள் வாங்கித் தரதாச் சொன்னாரில்லையா?
சந்துரு: ஆமாம்மா.
அம்மா: பின்னே ஏன் இப்பவெல்லாம் நீ ஒழுங்காப் படிக்கிறதே இல்லை?
சந்துரு: சைக்கிள் வாங்கினவுடனே திடும்னு ஓட்ட முடியுமா அம்மா? அதுதான் காலையிலேயும் மாலையிலேயும் கத்துக்கறேன்.

மனிதனைச் சந்தித்த ஓநாய்

ஒரு நரியும் ஒரு ஓநாயும் ஒரு நாள் பேசிக் கொண்டிருந்தன. அப்போது நரி, ஓநாயிடம், ''உலகில் உள்ள உயிரினங்களிலேயே அதிக வலிமை வாய்ந்தது மனித இனம்தான்'' என்று கூறியது. ஆனால், ஓநாய் அதை ஒப்புக் கொள்ளவில்லை. அது நரியிடம், ''அடுத்த தடவை நான் மனிதனைப் பார்க்கும்போது அவனுடன் சண்டை போட்டு, அவனை வீழ்த்த முடியும் என்று காட்டுகிறேன்'' என்றது.

இரண்டு நாட்களுக்குப் பிறகு நரியும் ஓநாயும் வெளியில் வந்து சுற்றிக்கொண்டிருந்த சமயம், ஒரு மனிதனைக் கண்டன. உடனே ஓநாய் அந்த மனிதன் மீது பாய்ந்தது. ஆனால், அந்த மனிதன் கையில் துப்பாக்கி இருந்தது. அதனை உயர்த்தி முகத்துக்கு நேராகப் பிடித்துக்கொண்டான். ஓநாயைக் குறி வைத்துச் சுட்டான். 'டுமீல்' என்ற சத்தம் கேட்டது. ஆயினும் ஓநாய் தப்பி ஓடி விட்டது.



நரி, அதன் நண்பனான ஓநாயைப் பார்த்துச் சிரித்தது: ''மனிதன் ஓநாயை விட வலிமை வாய்ந்தவன் என்பதை இப்போதாவது ஒப்புக் கொள்கிறாயா?'' என்று கேட்டது.

அதற்கு ஓநாய், ''இல்லை. மனிதன் எவ்வித ஆயுதமும் இல்லாமல் என்னுடன் சண்டைக்கு வந்தால் நான் அவனை அடித்து வீழ்த்தி விடுவேன். ஆனால், அவன் ஒரு நீளக் குச்சியை வாயில் வைத்துக் கொண்டு இடியையும் மின்னலையும் என்மீது ஊதி விடுகிறானே!'' என்றது.


படித்துச் சிரிப்போம்!
கிருஷ்ணசங்கர்
நான்கு கைகள்
என்னடா சொல்கிறாய்? உன் தாத்தாவுக்கு நாலு கைகளா?
ஆமாண்டா. வலது கை, இடது கை, பொக்கை, வழுக்கை.
நான் போகலாமா?
ஏனுங்க, நான் இந்தப் பக்கமா போகலாமாங்க?
ஏன் அப்படிக் கேட்கிறாய்?
வாகனங்கள் போகக் கூடாது
இந்தப் பக்கமாக வாகனங்கள் போகக் கூடாதுன்னு போட்டிருக்கே. என் பேரு, மயில் வாகனம்
STORES
காதரின் அப்பா
நம்மோட படிக்கிறானே காதர், அவனுடைய ஃபாதர் இங்கிலாந்திலே இருக்கிறாராம்.
அப்படியா! சரி அந்தக் காதருடைய ஃபாதருக்கு அங்கே என்ன வேலையாம்?
தூதர் வேலையாம்
தருவானா?
டேய் ராமு, பக்கத்து வீட்டு பாலுவை அடித்து விட்டாயாமே. அவனிடம் போய் மன்னிப்புக் கேளுடா போ.
அவனே அடிச்சபிறகு, அவனிடம் போய் நான் எதைக்கேட்டாலும் தரமாட்டான், அப்பா.



ஹாக்கி ஆடுவோம்!

'ஹாக்கி ஆண்கள் மட்டும்தான் ஆடலாமா? பெண்களும் கூடத்தான்!' என்று சிறுமிகளும் போட்டி போடுவது காதில் விழுகிறது! இதோ நீங்கள் சரிநிகர் சமானமாக விளையாடக் கூடிய விளையாட்டுத்தான் ஹாக்கி! ஒரு குழுவுக்குப் பதினொரு ஆட்டக்காரர்கள் இருப்பார்கள். ஒவ்வொரு ஆட்டக்காரர் கையிலும் ஒரு வளைந்த குச்சி (Stick) இருக்கும். இந்த ஆட்டத்தின் குறிக்கோள் என்ன தெரியுமா? எதிர்க் குழுவின் கோலில் வளையத்துக்குள் சென்று பந்தை அடிப்பதுதான்! எதிரி கட்சியினர் பந்து கோலுக்குள் விழாமல் தடுப்பார்கள். எந்தக் குழு அதிக 'கோல்' களைப் போடுகிறதோ, அதுவே வென்ற குழுவாகக் கருதப்படும்!

ஆட்டத்தை நிர்ணயிக்க இரு நடுவர்கள் இருப்பார்கள். நேரக் கணக்கைக் குறிப்பிட நேரக் கண்காணிப்பாளர்களும் உண்டு. ஒவ்வொரு அம்பயரும் ஒரு பாதி யளவு மைதானத்தை நிர்வகிப்பார்! அவர் கையில் ஒரு விசில் உண்டு. ஆட்டத்தைச் செவ்வனே நிர்வகிக்க!


ஆட்டக்காரர்கள் அரைக் கால் சட்டையும் சட்டையும் அணிந்திருப்பர். ஒவ்வொரு குழுவுக்கும் தனித் தனி வர்ணம் உண்டு!

கோல்கீப்பர்கள் தங்களைப் பாது காத்துக் கொள்வதற்காக முகமூடி, (face guard) கையுறைகள் 'பாட்'கள், (Pads), கனத்த பூட்ஸ்கள் அணிந்திருப்பார்கள்

ஆட்டம் இரண்டு பகுதிகளாகப் பிரித்து ஆடப்படும். ஒவ்வொரு பகுதி நேரம் 35 நிமிடங்கள் ஆகும். ஒரு பாதி ஆட்டம் முடிந்ததும் ஐந்து அல்லது பத்து நிமிஷங்கள் ஓய்வு நேரம் அளிப்பது உண்டு.

ஹாக்கி ஆட்டக்காரர்கள் தங்கள் குச்சிகளைப் பயன்படுத்தியே பந்தைத் தடுத்து நிறுத்தி அடிச் செல்ல வேண்டும். கோல்கீப்பருக்கு மட்டும் அவர் பகுதியில் பந்தைக் காலாலோ, உடம்பாலோ தடுத்து நிறுத்த உரிமையுண்டு.

இரண்டு குழு காப்டன்களும், 'பூவா, தலையா' வீசி யார் எந்தப் பகுதியில் ஆடுவது என்று நிர்ணயித்துக் கொள்வார்கள். பந்து மைதானத்தின் நடு மத்தியில் Bully க்குப் பிறகு தொடங்கப்படும். Bully என்பது பந்தை இரு ஆட்டக்காரர்களுக்கு மத்தியில் வைத்து, இரு ஆட்டக்காரர்களும் தங்கள் குச்சியைத் தரையில் தட்டி, பிறகு எதிரியின் குச்சியைப் பந்துக்கு மேல் தட்டி – இப்படி மூன்று தடவை



குண்டுமணி

செய்த பிறகு பந்தை ஒரு ஆட்டக்காரர் தட்ட வேண்டும்.

ஹாக்கி மைதானம் 92 மீட்டர் (100 கஜம்) நீளமும், 55 மீட்டர் (60 கஜம்) அகலமும் கொண்டது.

அகலப் பக்கங்களின் நடுவே 4 மீட்டர் இடைவெளியில் $2\frac{1}{8}$ மீட்டர் உயரமுள்ள இரண்டிரண்டு கம்பங்கள் நடப்பட்டிருக்கும். இக்கம்பங்களின் மேல் முனைகள் மரத்துண்டினால் இணைக்கப்பட்டிருக்கும். இவற்றுக்குக் கோல் கம்பங்கள் என்று பெயர். இக் கம்பங்களுக்கு இடையில் பந்தை அடித்து கோல் போடவேண்டும்.

கோல் கீப்பர் தவிர மைதானத்தில் ஆட்டக்காரர்கள் கீழ் வருமாறு பிரித்து வைக்கப்படுவர். இடது வலது 'பாக்' (Back) ஆட்டக்காரர்கள். 'ஆஃப்-பாக்குகள் — மூன்று பேர்கள் இருப்பார்கள். (அதாவது சென்டர் ஆஃப், இடது, வலது பகுதி ஆட்டக்காரர்கள்). முன்னணி ஆட்டக்காரர்கள் ஐந்து பேர், அதாவது சென்டர் ஃபார்வர்ட், இன்சைட் ரைட், இன்சைட் லெஃப்ட, லெஃப்ட் விங், ரைட் விங் என்று ஐவர் இடம் பெறுவார்கள்.

'பெனால்டி ஸ்டிரோக்' எதிரிக் குழுவுக்கு வழங்கப்படும். பந்தை எதிரியிடமிருந்து பாதுகாக்கு முகமாக 'பௌல்' செய்தால், (அது தடுக்காமலிருந்தால் கோல் ஆகியிருக்கலாம்) தடுப்பாளர் குழு மீது 'பெனால்டி ஸ்டிரோக்' வழங்குவார்கள்.

ஹாக்கி மிகப் பழைமையான விளையாட்டு. உலகின் பல பாகங்களில் பிரபலமாகி வருகிறது. இந்த விளையாட்டு கிறிஸ்து பிறப்பதற்கு 2000 ஆண்டுகளுக்கு முன்னாலேயே தோன்றியிருக்கிறது.

ஹாக்கி 1908 ஒலிம்பிக் போட்டிகளில் இடம் பெற்றிருக்கிறது. லண்டனில் நடைபெற்ற ஒலிம்பிக்கில் இங்கிலாந்து அயர்லாந்துக் குழுவை வென்றிருக்கிறது.

1924ல் ஹாக்கிக்கு சர்வதேச கழகம் தோற்றுவிக்கப்பட்டது. இந்தியாவில் முதல் ஹாக்கி கிளப் 1885ம் ஆண்டு கல்கத்தாவில் தொடங்கப் பட்டது. 1925ம் வருஷம் இந்திய ஹாக்கி பெடரேஷன் ஆரம்பிக்கப் பட்டது. ஆம்ஸ்டர்டாம் ஒலிம்பிக்கில் இந்தியா பங்கேற்று ஜயக்கொடி நாட்டியது. 'ஹாக்கியில் மந்திரவாதி' என்ற புகழைப் பெற்றவர் தயான் சந்த். 1928லிருந்து 1956 வரை இந்தியர்கள் உலக ஹாக்கிப் போட்டியில் முடிசூடா மன்னர்களாகத் திகழ்ந்தார்கள். 1960ம் வருஷம்தான் பாகிஸ்தான் இந்தியாவைத் தோற்கடித்து 'முடிசூடா மன்னர்' பதவியைப் பெற்றார்கள். 1964ம் வருஷம் இந்தியா இழந்த புகழை மீண்டும் பெற்றது. 1968ம் வருஷம் பாகிஸ்தானுக்கே வெற்றி. 1972 மியூனிச் ஒலிம்பிக்கில் மேற்கு ஜெர்மனி ஹாக்கியில் வென்று தனிப் புகழ் பெற்றது. 1976 மாண்ட்ரீயலில் நியூஸிலாந்து ஆஸ்திரேலியாவைத் தோல்வியுறச் செய்து பெருமை பெற்றது.

சமீபத்தில் ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் பாகிஸ்தான் இந்தியாவைத் தோல்வியடையவைத்துத் தங்கள் புகழை நிலைநிறுத்தியது தனிச் சிறப்பு! பாகிஸ்தான் ஆட்டக்காரர்களின் ஆட்டத் திறமை அனைவரையும் அயர வைத்தது!



நூறாவது இறகு



சிறுமி அபிராமிக்குப் பத்து வயது தான் இருக்கும்! மிக மிகச் சுறுசுறுப்பானவள். ஒரு நிமிடத்தையும் வீணாக்க மாட்டாள். எப்பொழுதும் ஏதாவது பயனுள்ள வேலைகளில் ஈடுபட்டிருப்பாள்.

''பொழுது போகவில்லையே'' என்று அவள் எப்பொழுதும் சொன்னதில்லை. 'பொழுது போதவில்லையே' என்றுதான் அவள் குறைப்பட்டுக் கொள்வாள். அவள் வீட்டிலும் தொலைக் காட்சிப் பெட்டி இருந்தது. ஆனால், அதில் முக்கியமான நிகழ்ச்சிகளை மட்டும்தான் பார்ப்பாள். சுருக்கமாகச் சொன்னால் ''நேரம் பொன்னுக்குச் சமம்'' என்பதை அபிராமி நூற்றுக்கு நூறு கடைப் பிடித்து வந்தாள்.

சமீப காலமாகப் பலவித பட்சிகளின் இறகுகளைச் சேகரித்துக்கொண்டு வருகிறாள், அபிராமி. தன் வீட்டுத் தோட்டத்திலும் தோப்புக்களிலும் அவ்வப்போது கிடைக்கும் பல்வேறு பட்சிகளின் இறகுகளை யெல்லாம் எடுத்து வந்து தனி ஆல்பத்தில் ஒட்டி அழகு பார்த்து வருகிறாள். ஒவ்வொரு பட்சியின் வண்ண இறகைப் பார்க்கும் போதெல்லாம் அந்தப் பட்சியின் குரலும், அங்க அசைவுகளும், பறக்கும் விதமும், அவை உண்ணும் உணவும் பழக்க வழக்கங்களும் அவள் நினைவுக்கு வரும். இதுவரை அபிராமி 99 விதமான இறகுகளைச் சேர்த்திருந்தாள்.

ஒரு நாள் செய்தித் தாளைப் படித்துக் கொண்டிருந்த அபிராமி ஒரு விளம்பரத்தைப் படித்ததும் மகிழ்ச்சியுடன் துள்ளிக் குதித்தாள். மதுரையில் இருந்த ஒரு சிறுவர் பொழுதுபோக்கு மன்றம், அந்தச் செய்தித் தாளில் ஒரு போட்டியை அறிவித்திருந்தது. அதன்படி நூறு விதமான பறவைகளின் இறகுகளைச் சேகரித்து ஆல்பத்தில் ஒட்டி அனுப்பும் சிறுவன் அல்லது சிறுமிக்கு ஐந்நூறு ரூபாய் பரிசு தரப்படும் என்று அறிவித்து, அதற்கான கடைசி நாளையும் குறிப்பிட்டிருந்தது.

சரியாக இன்னும் ஒரு மாதமே இருக்கிறது. அதற்குள் இன்னும் ஒரே ஒரு இறகு கிடைத்து விட்டால் அபிராமியின் ஆல்பத்தில் நூறு இறகுகள் சேர்ந்து ஐந்நூறு ரூபாய் பரிசும் கிடைத்து விடும்!

அபிராமிக்குத் தெரிந்தவரை அவள் ஆல்பத்தில் அதுவரை இடம் பெறாதது பஞ்சவர்ணக் கிளியின் இறகு ஒன்று தான்! ''அந்தப் பஞ்சவர்ணக் கிளி யாரிடம் இருக்கும்?' என்ற யோசனையில் ஆழ்ந்தபடி வாசகசாலையிலிருந்து, வீடு நோக்கி வந்து கொண்டிருந்தாள்.

'கீ...க்...கீ! — கீ....க்...கி! — கிக்கீ!'

ஏதோ கிளி கத்தும் சத்தம் கேட்கவே அபிராமி ஆவலுடன் சுற்று முற்றும் பார்த்தாள்! என்ன ஆச்சரியம்! அவள் அருகே இருந்த ஒரு வீட்டின் வராந்தாவில், அழகிய, பெரிய பஞ்சவர்ணக் கிளி கூண்டிற்குள் உட்கார்ந்தபடி கத்

டிக் கொண்டிருந்தது. அதன் உடல் முழுவதும் ஐந்து வகை நிறங்களோடு கூடிய பல இறகுகள்!

அபிராமிக்கு ஒரே மகிழ்ச்சி! அந்த வீடு தன் வகுப்பில் படிக்கும் பசுபதியின் வீடு என்று தெரிந்தபோது அந்த மகிழ்ச்சி இரட்டிப்பாகியது. சமீபத்தில் தான் அந்தக் கிளி அவர்கள் வீட்டுக்கு வந்திருக்க வேண்டும் என்று தோன்றியது அவளுக்கு!

அபிராமியைப் பார்த்த பஞ்ச வர்ணக் கிளி ''கிக்கீ! கிக்கீ!'' என்று தொடர்ந்து பலமாகக் கத்தியது. அது அப்படிக் கத்துவதைக் கேட்ட பசுபதி கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்தான். அபிராமி அங்கே நிற்பதைப் பார்த்துவிட்டு, ''ஓ! வகுப்புத் தலைவி அபிராமிஅவர்களே! கனம் பொருந்திய வகுப்புத் தலைவி அவர்களே! வர வேண்டும், வர வேண்டும்'' என்றான், சற்றுக் கிண்டலான குரலில்.



பசுபதி அப்படி அவளை வரவேற்றது அபிராமிக்கு என்னவோ போலிருந்தது.

''பசுபதி! என்னை ஏன் இப்படிக் கிண்டல் செய்கிறாய்?'' என்று கேட்டாள் அபிராமி.

''ஆமாம்! நீ மட்டும் ஆசிரியரிடம் தினம் என்னைக் காட்டிக் கொடுத்து அடி வாங்கச் செய்யலாமா ?'' என்று கேட்டான் பசுபதி, கோபத்துடன்.

அன்று வகுப்பில் நடந்ததை நினைத்துப் பார்த்தாள் அபிராமி.

அபிராமியும் பசுபதியும் ஒரே வகுப்பு. அந்த வகுப்பின் ஆசிரியர், பிள்ளைகள் ஒழுக்கம் தவறி நடந்தாலும் சரி, பாடங்களைச் சரியாகப் படிக்காவிட்டாலும் சரி, — தண்டனையளிப்பார்.

மாணவர்கள் எல்லாரும் தினந்தோறும் பதினைந்து வரிகள் நிறுத்தி அழகாக எழுதிக் கொண்டு வர வேண்டும் என்று அவர் சமீபத்தில் சொல்லியிருந்தார். அப்படி மாணவர்கள் எழுதிக்கொண்டு வந்த கையெழுத்து நோட்டுப் புத்தகங்களை ஒன்றாகச் சேர்த்து ஆசிரியரிடம் கொடுப்பதும், கையெழுத்து எழுதாதவர்களின் பெயர்களை ஆசிரியருக்குத் தெரிவிப்பதும் வகுப்புத் தலைவியின் தினசரி கடமை.

முதலில் எல்லாப் பிள்ளைகளும் ஒழுங்காகக் கையெழுத்து எழுதிக் கொண்டு வந்தார்கள். சில நாட்களுக்குப் பிறகு பசுபதி மட்டும் கையெழுத்து எழுதுவதை நிறுத்தி விட்டான். இதை அபிராமி ஆசிரியரிடம் தெரிவித்தாள். அதனால் ஆசிரியர் பசுபதியைப் பல முறை கண்டித்தும், அடித்தும் வந்தார். அன்று கூடப் பலர் முன்னிலையில் பசுபதியை ஆசிரியர் கண்டித்தார். இதை மனத்தில் வைத்துக் கொண்டு தான் இப்போது பசுபதி கோபத்துடன் தன்னைக் கிண்டல் செய்கிறான் என்பதை உணர்ந்த அபிராமி மிகவும் மனம் வருந்தினாள்.

''பசுபதி! கையெழுத்து எழுதாதவர்களை ஆசிரியரிடம் சொல்வது என் கடமை. அதற்காக என்னைக் கோபிப்பதில் பயனில்லை. இந்தக் கையெழுத்துப் பயிற்சியும் நமது நன்மைக்காகத் தானே!'' என்றாள் அபிராமி.

''அதைப்பற்றி நீ சொல்ல வேண்டாம்! நீ நினைத்தால் என்னைக் காட்டிக் கொடுக்காமல் இருந்திருக்கலாம்!'' என்றான் பசுபதி. ''சரி! நீ என்மேல் வீண் கோபம் கொண்டிருக்கிறாய். நான் வருகிறேன்!'' என்றாள் அபிராமி.

''நில்! எதற்காக இப்போது வந்தாய்? என்ன வேண்டும்?'' என்று கேட்டான் பசுபதி.

''வேண்டாம்! நான் அதைச் சொல்லிப் பயனில்லை'' என்றாள் அபிராமி.

''பரவாயில்லை சொல். முடிந்தால் உனக்கு வேண்டியதைத் தருகிறேன்!'' என்றான் பசுபதி

அபிராமியும் தான் இறகுகளைச் சேகரித்து வருவதைப் பற்றியும், செய்தித் தாளில் வந்த விளம்பரம் பற்றியும் சொல்லிவிட்டு, ''நான் இப்பொழுது நூறாவது இறகைத் தேடிக் கொண்டிருக்கிறேன். இந்தப் பஞ்சவர்ணக் கிளியின் இறகு கிடைத்து விட்டால் நூறு இறகுகள் ஆகிவிடும். இதைக் கேட்கத்தான் வந்தேன்'' என்றாள்.

''அப்படியா? கவலைப் படாதே! இதோ தருகிறேன்'' என்றபடி கிளிக் கூண்டைத் திறந்து அதில் ஓர் ஓரமாகக் கிடந்த ஒரு நீண்ட இறகை எடுத்து வந்து அபிராமியிடம் நீட்டி, ''அபிராமி! இந்த இறகிற்காக நீ காசு எதுவும் தரவேண்டாம். எனக்கு ஒரே ஒரு உதவி செய்தால் போதும்'' என்றான்.

பாதி - பாதி

முதல் சொல்லின் பின் பாதி, இரண்டாம் சொல்லின் முன் பாதியாக இருக்கிறது. இரண்டாம் சொல்லின் பின் பாதி, மூன்றும் சொல்லின் முன் பாதியாக இருக்கிறது.

இப்படி வேறு ஒரு நான்கு எழுத்துச் சொல்லை எடுத்துக் கொண்டு இதே போல் எத்தனை சொற்களை தொடர்ச்சியாக அமைக்க முடியும் என்று பாருங்கள். மூன்றுக்கு மேல் இருந்தால் எழுதி அனுப்புங்கள்.

சி	ங்	க	ம்				
		க	ம்	ப	ம்		
				ப	ம்	பா	ய்

''என்ன உதவி?''

''நான் நாளையும் வழக்கம் போல் கையெழுத்து எழுதப் போவதில்லை... எனக்குக் கையெழுத்து எழுதுவது என்றாலே தலைவலி! அதனால், நீ என்னை ஆசிரியரிடம் காட்டிக் கொடுக்கக் கூடாது. நீ சொல்லா விட்டால் ஆசிரியரும் என்னை ஒன்றும் சொல்ல மாட்டார்'' என்றான்.

அபிராமி யோசித்தாள். தனக்கு வேண்டிய இறகுக்காகத் தன்னுடைய கடமையை விட்டுவிட அவளுக்கு விருப்பம் இல்லை. அப்படிச் செய்வது, தான் பசுபதிக்குச் செய்யும் தீங்கு என்று நினைத்தாள்.

''பசுபதி! எனக்கு என் கடமைதான் பெரிது. இந்த இறகுக்காக நான் ஆசிரியரை ஏமாற்ற மாட்டேன். பதிலாக நீ திருந்தி, கையெழுத்து எழுதத் தொடங்கினால், நான் மிகவும் மகிழ்ச்சியடைவேன்!'' என்றாள் அபிராமி.

''அபிராமி! அப்படியானால் ஐந்நூறு ரூபாயைக் கோட்டை விடப் போகிறாயா? வீண் பிடிவாதம் செய்யாதே. இறகை வாங்கிக்கொள். நான் சொல்லியபடி செய்!'' என்றான் பசுபதி.

அபிராமி மனம் தளரவில்லை. ''நட்பைவிட எனக்குக் கடமைதான் பெரியது'' என்று சொல்லிவிட்டு விடுவிடென்று தன் வீட்டை நோக்கி நடந்தாள் அபிராமி.

சில நாட்கள் கடந்தன. அபிராமியின் பள்ளியில் ஓர் அதிசயம் நடந்தது. வருடா வருடம் நடக்கின்ற கையெழுத்துப் போட்டியில் எப்போதும் அபிராமியே முதல் பரிசு பெறுவது வழக்கம். ஆனால், இந்த முறை பசுபதிக்குக் கிடைத்து விட்டது. இது பற்றி மாணவர்கள் அனைவரும் ஆச்சரியம் அடைந்தனர். அன்று முழுவதும் அதைப் பற்றியே பேசிக்கொண்டனர். பலர் பசுபதியிடம் சென்று தங்கள் வாழ்த்துக்களையும் மகிழ்ச்சியையும் தெரிவித்துக் கொண்டனர். அதனால் பசுபதியும் மிகவும் மகிழ்ச்சியுடன் காணப்பட்டான்.

''பசுபதி!உனக்கு என் வாழ்த்துக்கள்! இப்பொழுதாவது என்மீதிருந்த கோபம் போயிற்றா?'' என்று அபிராமி அன்று பள்ளிக்கூடம் முடிந்ததும் பசுபதியிடம் வந்து கேட்டாள்.

பசுபதிக்கு அபிராமியைத் தலை நிமிர்ந்து பார்க்கவே சங்கடமாக இருந்தது.

''அபிராமி! நான் போட்டியில் வெற்றி பெற்றதற்கு நீதான் முதல்

காரணம். உன் கடமையை நீ ஒழுங்காகச் செய்ததால்தான் ஆசிரியர் என்னைக் கடிந்து கொண்டார். பல மாணவர்களுக்கு முன்பு நான் தினமும் ஆசிரியரிடம் திட்டு வாங்குவது அவமானமாக இருந்தது. அதனால், அன்று முதல் கையெழுத்து எழுதத் தொடங்கி இப்பொழுது வெற்றியும் பெற்றுவிட்டேன். உனக்கு மிகவும் நன்றி!'' என்ற பசுபதி தன் புத்தகப் பையிலிருந்த பஞ்ச வர்ணக் கிளி இறகை எடுத்து நீட்டி, ''அபிராமி! இந்தா, நீ கேட்ட பஞ்ச வர்ணக் கிளி இறகு! உன் கடமையைச் செய்ததற்காக நான் இதைத் தருகிறேன்'' என்றான்.

''வேண்டாம் பசுபதி! கடமையைச் செய்ததற்காக நன்றி சொன்னால் போதும் பரிசு தரவேண்டிய அவசியமில்லை. நான் செய்த கடமைக்காக இப்போது இதை வாங்கிக் கொள்வதும் தவறு'' என்று கூறி மறுத்தாள் அபிராமி.

''இல்லை அபிராமி! நீ இதை வாங்கிக்கொள்ளத்தான் வேண்டும். வாங்கிக் கொண்டு போட்டியில் கலந்துகொள்ளத்தான் வேண்டும். அப்படி வாங்கிக் கொள்ளாவிட்டால் மறுபடியும் கையெழுத்து எழுதுவதை நிறுத்திவிடுவேன்'' என்றான் பசுபதி பிடிவாதமாக.

''அடடே! அப்படியானால் இறகை வாங்கிக் கொள்கிறேன்'' என்று கூறி அபிராமி இறகைப் பெற்றுக் கொண்டு, ''பசுபதி, இனிமேல் நான் போட்டியில் கலந்து கொள்ள முடியாது'' என்றாள்.

''ஏன்?'' என்று கேட்டான் பசுபதி.

''போட்டிக்கான கடைசி நாள் நேற்றுத்தான். இருந்தாலும் நான் கவலைப்படவில்லை. உன் கையெழுத்தும் மனமும் மாறியதே எனக்குப் பெரிய மகிழ்ச்சி! இனி இந்த இறகை என் ஆல்பத்தில் பார்க்கும் போதெல்லாம் நீ கையெழுத்துப் போட்டியில் கலந்து கொண்டு பரிசு வாங்கினது என் நினைவுக்கு வரும்!'' என்றாள் அபிராமி.

அபிராமி போட்டியில் கலந்துகொள்ளாமல் போனது தன்னால்தான் என்று நினைத்துப் பார்த்தபோது பசுபதிக்கு வருத்தமாக இருந்தது. ''என்னை மன்னித்துவிடு அபிராமி'' என்றான் பசுபதி தழுதழுத்த குரலில்.

இப்பொழுது அபிராமி நூற்றி ஓராவது இறகைத் தேடிக் கொண்டிருக்கிறாள். உங்களிடமிருந்தால் கொண்டு போய்க் கொடுங்கள். ஆனால், பதிலுக்கு மட்டும் அபிராமியிடம் எதையும் கேட்டு விடாதீர்கள்! காரணம், அவள் கதைதான் உங்களுக்குத் தெரியுமே!

நூறு தடவை



-இரத்தினம்



சின்னக்கண்ணுவின் சுற்றுலா!

கூத்தபிரான்—

அந்த ஊருக்குப் பெயர் பாரத மாதாபுரம். தாய் நாட்டு விடுதலைக்காகப் பாடுபட்ட தலைவர்கள் நினைவாக ஒரு நல்லவர் அந்த ஊருக்குப் பெயர் வைத்தார்.

அந்த ஊரிலே ஒரு சின்னப் பள்ளிக்கூடம். ஊர்ப் பிள்ளைகள் எல்லாரும் அந்தப் பள்ளிக்கூடத்தில் படிக்கிறார்கள் என்று சொல்லிவிட முடியாது. ஆனால், படிக்கிற பிள்ளைகள் மீது மிகவும் அக்கறை காட்டுகிறார்கள்; நன்றாகப் படிப்புச் சொல்லிக்கொடுத்து அவர்களை நாட்டுக்கும், வீட்டுக்கும் நல்ல பிள்ளைகளாக ஆக்கவேண்டும் என்ற உள்ளன்போடு பாடுபட்டு உழைக்கிற சில ஆசிரியர்கள் அங்கே இருக்கிறார்கள். நாட்டைப் பற்றியும் தலைவர்களைப் பற்றியும் அடிக்கடி சொல்லிப் பிள்ளைகளை வளர்க்க வேண்டும் என்ற துடிப்போடு செயல்பட்டு வருகிறார்கள். இப்போது பாரத மாதாபுரம் என்ற ஊருக்குப்போகலாம், வாருங்கள்.

அதோ தெரிகிறதே, தேசிய மூவர்ணக்கொடி. அதுதான் பாரதமாதா புரம். பள்ளிக்கூடத்தின் முன்னாலே உயர்ந்த கம்பத்தில்தான் அந்தக் கொடி கம்பீரமாகப் பறக்கிறது.

தாயின் மணிக் கொடி பறக்கிறதைப் பார்த்துக் கொண்டே பள்ளிக்கூடத்துக்கு முதலிலே போவோம்.

இப்போது காலை நேரம் ஆனதால் பிரார்த்தனைக் கூட்டம் நடக்கிறது. நாமும் ஓர் ஓரமாக நின்று பிரார்த்தனையில் கலந்து கொள்வோம்.

குழந்தைகள் பிரார்த்தனைப் பாடல்களைப் பாடி முடிக்கிறார்கள். அப்படியே சுத்தமான தரை, சாணம் போட்டு மொற மொறவென்று காட்சியளிக்கிறது. அழகான மாக்கோலங்கள் போடப் பட்டுள்ளன. குழந்தைகள் அமைதியாய் உட்கார்ந்திருக்க, ஒரு பெரியவர் எழுந்திருந்து பேச ஆரம்பிக்கிறார். அவர் தூய கதர் ஆடை அணிந்து, நெற்றியில் சந்தனப்பொட்டு

இட்டு நடுநாயகமாகக்காட்சியளிக்கிறார். அவருக்கு என்ன பெயர் தெரியுமா?

ஐயாக்கண்ணு.

அவர் அப்பள்ளிக்கூடத்தின் தலைமை ஆசிரியர் மட்டுமல்ல; பழம் பெரும் தேசபக்தரும் கூட!

''அன்பு மாணவ மணிகளே! உங்களுக்கு எங்கள் நல்லாசிகள். ஒரு மகிழ்ச்சியான செய்தி. நாம் எல்லோரும் தசரா விடுமுறைக்கு ஒரு சுற்றுலா போகப் போகிறோம்.''

குழந்தைகள் கைதட்டுகிறார்கள்.

''திரும்பி வர, கிட்டத்தட்டப் பதினைந்து நாட்களாகும். ரயில் கட்டணம் கூட சலுகையிலேயே வாங்கப் போகிறோம். அதை மட்டும் பிள்ளைகள் கொடுத்தால் போதும். சாப்பாடு, தங்க இடம், போன்றவற்றைப் பள்ளிக்கூடம் பார்த்துக் கொள்ளும்'' என்றார்.

''இன்னும் ஒரு வாரத்திலே பணம் கட்டியாகணும். எவ்வளவு பணம் ஆகும் என்பதை நாளைக்குச் சொல்லுவோம்'' என்று சுற்றுலா விவரங்களைச் சுருக்கமாகச் சொல்லி முடித்தார்.

பிரார்த்தனை முடிந்து, பிள்ளைகள் போகும்போது ஒரே ஆரவாரம்.

''நான் நிச்சயம் போகப் போகிறேன்.''

''எங்கப்பா பணம் தருவாரு.''

''நிச்சயமா நான் போவேம்பா.''

''ஜாலியா பதினைஞ்சு நாள் சுத்தப் போறோம்.''

''நீ வருவியா, மாட்டியா?''

''நீயும் வா, நாம ரெண்டு பேரும் ஒண்ணாப் போவோம்.''

இப்படி, சுற்றுலா பற்றி மெதுவாகவும், பலமாகவும் பேசிக்கொண்டே சென்றார்கள்.

ஆமாம், அங்கே யார் தனியா, தலையைக் குனிந்தபடி, ஏழாம் கிளாசுக்குள்ளே போகிறது? அவன் ஏன் வாயைத் திறக்கவே யில்லை? அதனாலென்ன? அவனுக்காக வாயைத் திறந்து பரிந்து பேச அவனுக்கு நண்பர்களா இல்லை? பார்வதி, பவானி, பரமு, எல்லாரும் அவனை விட்டு விடுவார்களா?

''ஏண்டா சின்னக் கண்ணு, ஏன் என்னவோ போல இருக்கே?'' - இது பார்வதியின் கேள்வி.



"ஏன், நீ சுற்றுலாவுக்கு வரப் போறதில்லையா?" பவானி அடுத்த கேள்வியைக் கேட்டாள்.

"இந்தச் சுற்றுலா ரொம்பப் பயனுள்ளதுடா. குறைந்த செலவில் நாம் வட இந்தியா பூராவையும் சுற்றிவிட்டு வரப்போகிறோம்." பரமுவின் சுற்றுலா சிறப்பின் விளக்கம் இப்படி.

"இல்லே, நான் சுற்றுலாவுக்கு வரலே. என்னால வர முடியாது. எனக்கு அதுக்கு வேண்டிய வசதியில்லே. என்னை எதுவும் கேட்காதீங்க. நீங்க போயிட்டு வந்து,பார்த்ததையெல்லாம் சொல்லுங்க, அது போதும். நான் வரலே" என்றான். அவனைச் சுற்றி, மற்ற மாணவர்களும் சூழ்ந்து கொண்டார்கள். தலைமை ஆசிரியர் ஐயாக்கண்ணு நடத்த வேண்டிய வகுப்பு அது. வகுப்புக்குள்ளே வரும்போது அவர் இக்காட்சியைக் கண்டார். உடனே, "சரிசரி, எல்லாரும் உட்கார்ந்து பாடத்தைக் கவனிங்க" என்று வகுப்பைத் துவக்கினார்.



"டேய் சுப்பு! நீ என்னைப் பற்றி உன் வகுப்பிலே கேவலமாப் பேசறியாம். என்னை 'முதல் நம்பர் முட்டாள்'னு சொன்னியாமே!"
"மற்றதெல்லாம் சொல்லியிருப்பேன். ஆனால், மறந்துபோய்க்கூட உன்னை 'முதல் நம்பர்'னு சொல்லியிருக்க மாட்டேன்!"

வகுப்பு துவங்கி முடியும்வரை அவர் சின்னக் கண்ணுவையே கவனித்துக் கொண்டு பாடம் நடத்தினார். வகுப்பு முடிய மணி அடித்ததும், அவர் சின்னக் கண்ணுவை ஒரு முறை உற்றுப் பார்த்துவிட்டுப் போனார்.

அவ்வளவுதான்! அந்தப் பார்வையின் சக்தியால் சின்னக் கண்ணுவும் அந்தச் சுற்றுலாவில் இடம் பெற்று விட்டான்.

காரணம், சின்னக்கண்ணு நல்ல புத்திசாலி. படிப்பில் மிகவும் கெட்டிக்காரன். அத்துடன் பள்ளிக்கூடத்திலேயே மிகவும் அடக்கமான, மரியாதை தெரிந்த மாணவன் அவன். சுற்றுலாவில் இடம் பெற வேண்டும் என்பது தலைமை ஆசிரியரின் எண்ணம். அவனுக்கு வசதி இல்லை என்பதை உணர்ந்து அவரும் மற்ற ஆசிரியர்களும் ஊரில் உள்ள பணக்காரர்களை அவனுக்கு உதவும்படி கேட்டுக் கொண்டார்கள். உதவி கிடைத்தது. சின்னக்கண்ணுவுக்கும் சுற்றுலாவில் இடம் கிடைத்தது. சின்னக்கண்ணு அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. தலைமை ஆசிரியர் கால்களில் அத்தனை பேர் முன்னிலையிலும் சாஷ்டாங்கமாக விழுந்து வணங்கி, "சார்; எனக்கு நீங்கதான் சகலமும்" என்று தேம்பித் தேம்பி அழுதான்.

எப்படியோ பாரதமாதா புரத்துப் பள்ளிக் குழந்தைகள் குதூகலத்துடன் சுற்றுலாப் புறப்பட்டார்கள்.

தலைமை ஆசிரியர், மற்றும் ஆசிரியர்கள், குழந்தைகள் எல்லோரும் பஸ்ஸில் புறப்பட்டுப் பட்டணம் வந்து அங்கிருந்து ரயிலில் கிளம்ப வேண்டும்.

எல்லாரையும் வழியனுப்புவதற்காகப் பாரதமாதாபுரம் மக்கள் அனைவரும் பேருந்து நிலையத்தில் கூடினர். ஆசிரியர்களிடத்தில் தங்கள் குழந்தைகளை ஒப்படைத்து, "பிள்ளையைப் பார்த்துக்குங்க சார்" "அவன் ஒரு மாதிரி, பத்திரமாப் பார்த்துக்குங்க". "உங்களை நம்பித்தான் அனுப்பறோம். பிள்ளை பத்திரமுங்க" என்று தங்கள் தங்கள் பிள்ளைகளை ஒப்படைத்துவிட்டு நிற்க, "பாரதமாதாவுக்கு ஜே", "வந்தே மாதரம்!","மகாத்மா காந்தி வாழ்க" என்று பிள்ளைகளின் கோஷம் பாரதமாதாபுரத்தில் ஒலிக்க பஸ் ஊரிலிருந்து கிளம்பி, பட்டணம் நோக்கிச் செல்லத் தொடங்கியது. பிள்ளைகள் கையில் மூவர்ணக் கொடி இருந்தது. சட்டையில் இந்தியாவின் படம். அதில் அண்ணல் காந்திஜியின் உருவம் அச்சிடப்பட்ட பேட்ஜ். தலைமை ஆசிரியர் திட்டமிட்டபடி, டெல்லி, கல்கத்தா, பம்பாய், ஆக்ரா, ஹைதராபாத், மைசூர், பெங்களூர் என்று பல சரித்திரப் புகழ் வாய்ந்த இடங்களுக்குக் குழந்தைகளை அழைத்துச் சென்றார்கள். பல அரிய விஷயங்களை நேரில் பார்த்தும் கேட்டும் அவர்கள் தெரிந்து கொள்ளும் வாய்ப்பை அளித்தார்கள்.

பிள்ளைகளுக்குச் சுற்றுலாக் காலத்தில் உடம்புக்கு எதுவும் வராமல் பார்த்துக் கொள்ள, அவர்களுடன் கூடவே ஒரு மருத்துவரையும் அழைத்துச் சென்றார்கள். அதனால், பிள்ளைகள் நல்ல விதமாக, ஆரோக்கியத்துடன் சுற்றுலாவை முடித்துக் கொண்டு பாரத மாதாபுரம் நோக்கி விரைவு ரயில் வண்டியில் பட்டணம் வந்து கொண்டிருந்தார்கள். இவர்களுக்கென்று தனிப் பெட்டி தரப் பட்டது. அதனால், பிள்ளைகள் சுதந்திரமாய் ஓடிப் பிடித்து தங்கள் வீட்டில் விளையாடுவது போல் விளையாடினார்கள். அத்தனை பேரும் மகிழ்ச்சியுடன் இருந்தார்கள். இருப்பினும் 'காலை,மாலை என்ற இரண்டு வேளைகளிலும் பிரார்த்தனையை மறக்கவில்லை. விடாமல் நடத்தி வந்தார்கள்.


வைத்து, அதிலிருந்த பொருள்களை எடுத்து வைத்தார்கள்.

''இது டில்லியில் வாங்கினது''; ''இது நான் பம்பாயில் வாங்கினது பாருங்கள் சார்'', ''கல்கத்தாவிலே வாங்கினேன், நல்லா இருக்கா ஸார்?'' ''இதெல்லாம் மைசூர்ல வாங்கின சாமான்கள், எப்படி ஸார் இருக்கு?'' என்று ஒவ்வொரு பையனும், தான் ஆசையோடு ஒவ்வொரு மாநிலத்தில் வாங்கின பொருள்களைப் போட்டி போட்டுக் கொண்டு ஒவ்வொன்றாக எடுத்து நீட்டினான். தலைமை ஆசிரியரும், மற்ற ஆசிரியர்களும் வாங்கிப் பார்த்துவிட்டுத் திருப்பிக் கொடுத்தார்கள்.

ஆனால், சின்னக்கண்ணுவோ பேசாமல் இதை யெல்லாம் பார்த்துக்

''ரமேஷ், உன் அம்மா எவ்வளவு பிரியமா இந்தப் பழங்களைக் கொடுத்தனுப்பி யிருக்கிறாங்க. நானே நானே நேரிலே வந்து, உன் அம்மாவைப் பார்த்து, இந்த அரைடஜன் பழங்களைக் கொடுத்ததற்கு நன்றி சொல்லப் போறேன்.''

''சொல்லுங்க மாமி சொல்லுங்க. ஆனால், அரை டஜன்னு சொல்லாதீங்க. ஒரு டஜன்னு சொல்லுங்க.''



அன்று மாலையில் பிரார்த்தனைக் கூட்டம். வண்டியில், 'ரகுபதி ராகவ ராஜா ராம்' பாடலுக்கு சிப்ளாக் கட்டை போடுவதில் ரயிலின் வேகம் 'ஜிகுஜிகு ஜிகு' என்று சரியான தாளத்துடன் இணைந்து வருவது போல் இருந்தது.

பிரார்த்தனை நிறைவு அடைந்தவுடன், தலைமை ஆசிரியர் ஐயாக்கண்ணு, ''பிள்ளைகளே, இப்போது உங்ககிட்ட சில கேள்விகள் கேட்கப் போகிறேன். அதற்குப் பதில் சொல்ல வேண்டும்'' என்றார்.

பிள்ளைகள் ஒருவரை யொருவர் பார்த்துக் கொண்டனர். ''ஒண்ணுமில்லே, நீங்கள் எல்லோரும் என்ன என்ன பொருள்கள் வாங்கினீர்கள் என்று தெரிஞ்சுக்கலாமா? அவற்றைப் பார்க்கலாமா?'' என்று கேட்டார்.

அவ்வளவுதான். பிள்ளைகள் ஓடிப் போய்த் தங்கள் பெட்டிகள், பைகள் எல்லாவற்றையும் கொண்டு வந்து

கொண்டே உட்கார்ந்திருந்தான். அப்போது, பிரபு என்ற மாணவன், ''என்னடா சின்னக்கண்ணு,நீ எந்த சாமானும் வாங்கலையா?'' என்று கேட்டான்.

''இல்லே, நான் ஒண்ணும் வாங்கல்லே, என்னிடம் அதுக்கெல்லாம் செலவழிக்கக் காசு இல்லே'' என்று பதில் சொன்னான்.

''எல்லா மாநிலத்தையும் சுத்திப் பார்த்துவிட்டு வெறும் கையோடவா ஊர் திரும்பறே'' என்றான் சேகர் என்ற இன்னொரு மாணவன்.

உடனே சின்னக்கண்ணு துள்ளி எழுந்து, ''இல்லே, நான் வெறும் கையோட ஊர் திரும்பலே, நானும் ஒவ்வொரு மாநிலத்தின் நினைவா பெருமையா ஒண்ணு கொண்டு வந்திருக்கேன்'' என்றான்.

இதைக் கேட்ட தலைமை ஆசிரியர், ''அப்படியா! எங்கே அதைக் காட்டு, பார்க்கலாம்'' என்றார்.

''வேண்டாம் ஸார்.''

''அட என்னதான் நீ ஆசையா வாங்கிட்டு வந்திருக்கிறாய், பார்க்கலாம்.''

''ஆசையா வாங்கிட்டு வரல்லேஸார்! எடுத்துக்கிட்டு வந்திருக்கேன் ஸார்.''

''என்ன! எடுத்துக்கிட்டு வர்ரியா! என்ன சொல்றே? எனக்கு ஒன்னும் புரியலையே?''

''ஆமாம் ஸார்!'' என்று சொல்லித் தன் கைப் பையை எடுத்து, அதிலிருந்து ஒரு பெரிய காகிதப் பொட்டலத்தை எடுத்தான். அத்தனை பேர் கண்களும் அந்தப் பொட்டலத்தையே உற்றுப் பார்த்தன. அதற்குள் என்ன உள்ளது என்பதை அறிய ஆவலாக இருந்தன.

ஆனால் சின்னக்கண்ணுவோ, ''வேண்டாம் சார். நான் பொட்டலத்தைப் பிரிக்கலே, எல்லோரும் என்னைக் கேலி செய்வாங்க; பரிகாசம் பண்ணுவாங்க'' என்று சொல்லி, தான் எடுத்த அந்தக் காகிதப் பொட்டலத்தை மீண்டும் கைப் பையில் வைக்கப் போனான்.

தலைமை ஆசிரியர் ஐயாக்கண்ணுவோ ''அந்தப் பொட்டலத்தை இப்படிக் கொடு; என்னதுன்னு பார்க்கலாம்'' என்று அந்தக் காகிதப் பொட்டலத்தை அவனிடமிருந்து 'லபக்' என்று எடுத்துக்கொண்டு, அதை அவசரம் அவசரமாகப் பிரித்தார். அதில் சின்னச் சின்னப் பால் பவுடர் பையில் வெறும் மணலாக இருந்தது. நூலால் அந்தப் பைகளை நன்கு கட்டி வைத்திருந்தான். ஒவ்வொன்றிலும் ஒரு துண்டுக் காகிதம் இருந்தது. 'மகாராஷ்டிரம்', 'டில்லி', 'கல்கத்தா', 'கர்நாடகம்', 'ஆந்திரம்' என்று ஒவ்வொரு துண்டுக் காகிதத்திலும் பென்சிலால் அழகாக எழுதி இருந்தது. உடனே நிமிர்ந்து சின்னக் கண்ணுவைப் பார்த்தார். தன் பதிலை அவர் எதிர்பார்க்கிறார் என்பதை உணர்ந்த சின்னக்கண்ணு, உடனே ''இதெல்லாம் ஒவ்வொரு மாநிலங்களின் நினைவாக நான்சேகரித்த மணல்'' என்று சொன்னான்.

''மணலா, எதுக்கு?''

''ஸார், இந்த மணல் எல்லாம் எடுத்துக்கிட்டுப் போய், நம்ம பள்ளிக் கூடத்துக்கு முன்னாலே பெரிசா ஒரு பள்ளம் வெட்டி, அதிலே போட்டு, ஒரு ரோஜாச் செடி நடப்போறேன்.''

''ஏன் அப்படிச் செய்யப் போறே?''

''ம்... அதுவா சார், எல்லா மாநிலத்து மணலையும் ஒரே இடத்தில் கொட்டி, அங்கே செடி நட்டு, அந்தச் செடியில் பூக்கிற பூக்களைப் பறிச்சு நம் பள்ளிக் கட்டிடங்களில் மாட்டியுள்ள காந்தி, நேரு, பட்டேல், ராஜாஜி காமராஜ் ஆகிய தலைவர் படங்களுக்குப் போடணும். அதன் மூலம் ஒருமைப் பாட்டைக் கண்டு சந்தோஷப்படணும். இந்தியாவே நம்முடைய பள்ளிக்கூடம் என்கிற எண்ணம் ஏற்படணும்'' என்று குட்டிப் பிரசங்கம் செய்தான். 'இவன் சொல்வதைக் கேட்கவேண்டும்' என்று எண்ணி ஓடும் ரயில்கூட இப்போது அவுட்டரில் ஸிக்னலுக்காக நின்று கொண்டிருந்தது.

சின்னக்கண்ணு சொன்னதைக் கேட்ட தலைமை ஆசிரியர் ஐயாக் கண்ணு, உடனே தம் கழுத்தில் இருந்த கதர்த் துண்டை எடுத்துச் சின்னக்கண்ணு கழுத்திலே போட்டு, ''சபாஷ், சபாஷ்'' என்று கைதட்டினார். மகிழ்ச்சியால் பலமாகக் கை தட்டினார். உடனே ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவரும் சேர்ந்து கைதட்டினார்கள்.

அந்த மகிழ்ச்சியில் ஸிக்னல் பெற்று ரயிலும் புறப்பட்டது.

பிஞ்சு உள்ளத்தில் இப்படி ஒரு நாட்டுப் பற்றா? இவன் வருங்காலத்தில் ஒரு காந்தியோ நேருவோ, ராஜாஜியோ! யார் கண்டார்கள்?


'சின்னக்கண்ணுவைக் கற்றுலாவில் சேர்த்துக் கொண்டது நாம் செய்த பாக்கியம்' என்று எண்ணி எண்ணி மகிழ்ந்தார் தலைமை ஆசிரியர்.



ஓர் ஆசிரியை, மாணவிகளிடம், 'பண்பு' என்ற சொல்லைப் பயன் படுத்தி ஒரு வாக்கியம் எழுதச்சொன்னார்.

ஒரு மாணவி எழுதியிருந்தாள்: ''பண்பு என்பது மூன்று எழுத்துக்கள் கொண்ட ஒரு சொல்.''

கோகுலம் சிறுவர் சங்கம் முதல் உறுப்பினர்



எஸ். எஸ். ராமன்

கோகுலம் சிறுவர் சங்கத்தில் சேர அடேயப்பா! தினமும் எத்தனை மனுக்கள் வருகின்றன! இதுவரை ஆயிரத்துக்கு மேற்பட்ட மனுக்கள் வந்து குவிந்துள்ளன!

உறுப்பினர் மனு அடங்கிய முதல் உறையைப் பிரித்தோம். சென்னை, ஷெனாய் நகரைச் சேர்ந்த எஸ். எஸ். ராமனின் பெயரைக் கண்டோம். 8—11—69ல் பிறந்த அந்தத் தம்பிதான் இந்தச் சங்கத்தின் முதல் உறுப்பினன். ராமனின் படத்தை மகிழ்ச்சியுடன் வெளியிட்டு உங்களுக்கு அறிமுகம் செய்துவைக்கிறோம்.

ராமனுடைய மனுவைத் தொடர்ந்து வந்த மனுக்களுக்கெல்லாம் வரிசையாக எண் கொடுத்திருக்கிறோம். தகுதி உடைய எல்லாருக்கும் உறுப்பினர் அட்டை அனுப்பிவிட்டோம். ஒவ்வொருவருக்கும் அட்டையில் உறுப்பினர் எண் கொடுத்திருக்கிறோம். அந்த வரிசைப்படி கோகுலத்தில் உறுப்பினர் பெயர்களை முகவரியுடன் வெளியிடுவோம். ஒரே இதழில் எல்லாப் பெயர்களையும் வெளியிட இயலாது என்பது உங்களுக்குத் தெரியும். இந்த இதழில் பல உறுப்பினர்களின் பெயர்களைக் காணலாம். தொடர்ந்து மற்றவர்களின் பெயர்களும் 'கோகுல'த்தில் வெளிவரும்.

'கோகுலத்தில் நம் பெயர்கள் வெளிவந்த பிறகுதான் நாம் உறுப்பினர் என்னும் தகுதியைப் பெறுவோமோ?' என்ற சந்தேகம் சிலருக்கு ஏற்படலாம். அந்த சந்தேகம் வேண்டாம். உறுப்பினர் அட்டை கிடைத்தவுடனே உறுப்பினராகிவிடுகிறீர்கள்!

உறுப்பினர்கள் கோகுலத்துக்கு எதை எழுதினாலும், எப்போது எழுதினாலும் பெயரின் பக்கத்தில் உறுப்பினர் எண்ணைக் குறிப்பிட வேண்டும். மறந்து விடாதீர்கள்!

இந்த இதழிலும், இதோ பின்புறத்தில் கோகுலம் சிறுவர் சங்கத்தைப் பற்றிய விவரங்களும், உறுப்பினர் மனுவும் அச்சாகி இருக்கின்றன. இன்னும் உறுப்பினராகச் சேராதவர்களும் விரைவில் சேர்ந்து கொள்ளலாம். —ஆசிரியர்

பையனின் பதில்


"சார், என் படிப்பு சம்பந்தமாக எங்க அப்பா உங்களோட பேசணுமாம். உங்களை டெலிபோன் பண்ணச் சொன்னாங்க."

"அப்படியா? சரி, உன் அப்பா டெலிபோன் நம்பர் என்ன?"

"அது டெலிபோன் டைரக்டரியிலே இருக்கு சார்."

"சரி, உன் அப்பா பேரு என்ன? மறந்து போச்சே...."

"அதுவும் அந்த டைரக்டரியிலே இருக்கு சார்."



கோகுலம் சிறுவர் சங்கம்

கிண்டி, சென்னை-600 032

இச்சங்கத்தில் யார் சேரலாம்?

தமிழ் தெரிந்த குழந்தைகள் உலகில் எங்கிருந்தாலும், அவர்கள் கோகுலம் குழந்தைகள் சங்கத்தில் சேரவேண்டும் என்பது எங்கள் ஆசை.

15 வயதுக்கு உட்பட்டவர்கள் மட்டுமே இதில் உறுப்பினர் ஆகலாம்.

உறுப்பினர் ஆனதும்.....

கோகுலத்திற்கு நீங்கள் எதை எழுதினாலும் எப்போது எழுதினாலும் மறக்காமல் உறுப்பினர் எண்ணைக் குறிப்பிடுங்கள்.

உங்கள் ஒவ்வொருவருக்கும் கோகுலம் முத்திரையுடன் (பிள்ளையாரும் கண்ணனும்) கூடிய உறுப்பினர் அட்டையை அனுப்புவோம்.

அதில் ஒவ்வொரு உறுப்பினருக்கும் ஓர் எண் கொடுக்கப்பட்டிருக்கும். உறுப்பினர் பெயரும், பிறந்த நாளும் முகவரியும் அதில் இருக்கும்.

பயன் என்ன?

உறுப்பினர் ஆனவர்களின் பெயர்களை முகவரியுடன் கோகுலத்தில் வெளியிடுவோம். உறுப்பினர்கள் இதன் மூலம் பேனா நண்பர்கள் ஆகலாம்.

உறுப்பினர்கள் கோகுலத்துக்குக் கதைகள், கவிதைகள், துணுக்குகள், இன்னும் பயனுள்ள விஷயங்களை அனுப்பலாம். யோசனைகளையும் கருத்துக்களையும் தெரிவிக்கலாம். நன்றாயிருந்தால் வெளியிடுவோம்.

உறுப்பினர்களுக்கான பலவிதப் போட்டிகளை நடத்துவோம். வெற்றி பெறுவோர் பரிசுகள் பெறலாம். அவர்களின் படங்களையும் வெளியிடுவோம்.

'கோகுலம்' கௌரவ ஆசிரியர், ஆசிரியர், அல்லது 'கோகுலத்தின் பிரதிநிதிகள் உங்கள் பகுதிக்கு வந்தால் அறிவிப்போம். சந்தித்து உரையாடலாம்.

ஆண்டுக்கு ஒரு முறை நல்ல முறையில், பயன் தரும் வகையில் விழா நடத்தலாம்.

உறுப்பினராகக் கட்டணம் உண்டா?

இல்லை. கீழேயுள்ள கூப்பனைப் பூர்த்தி செய்து இப்பக்கத்தை அப்படியே கோகுலம் முகவரிக்கு அனுப்பினால் போதும். தமிழ் நாட்டுக்கு வெளியில் உள்ளவர்கள் முகவரியை ஆங்கிலத்தில் எழுத வேண்டும்.

கோகுலம் சிறுவர் சங்கம்

உறுப்பினர் மனு

பெயர்:

பிறந்த தேதி:

முகவரி:

கையெழுத்து

பத்திரிகை


எங்கே, என்ன நடக்கிறது
என்பதைக் காட்டும் கண்ணாடி!
இங்கே இப்படி இருக்கிறது
என்று சொல்லும் முன்னோடி!

நாட்டில் நடக்கும் நடப்புகளை
நாளும் நமக்குச் சொல்லிடுமே!
வீட்டில் இருந்தே அறிந்திடவே
வேண்டிய செய்தி தந்திடுமே!

கதையும் பாட்டும் கட்டுரையும்
கருத்தாய்ப் படிக்க வைத்திடுமே!
விதமாய்ப் படமும் விளக்கமுமே
விரும்பிய வண்ணம் அளித்திடுமே!

வானிலை, விளம்பரம், விளையாட்டு
வாடிக்கை யாக வழங்கிடுமே!
மேனிலை அதனால் வந்திடுமே!
மேலும் அறிவு பெருகிடுமே!

-பி. வி. கிரி



என் பொழுது போக்கு



காளான் வளர்த்தல்

ஜெ. எஸ். திவாகர்



என் மாமா கோவையில் இருந்தார். கோடை விடுமுறைக்கு அவர் வீட்டுக்குப் போயிருந்தேன். மாமி எனக்கு ஒரு விருந்து அளித்தார். சமையல் வாய் மணக்க நன்றாக இருந்தது. ஆனால், என்ன காய்கறி என்றே தெரியவில்லை.

"சமையல் ருசியாக இருக்கிறது. குழம்பிலும் கூட்டிலும் என்ன காய்கறி போட்டிருக்கிறீர்கள்?" - மாமியிடம் கேட்டேன்.

"எல்லாம் 'மஷ்ரூம்' மயம்!"-மாமி பதில் அளித்தார்.

"மஷ்ரூமா! அப்படி என்றால் என்ன?"

"அதோ பார்! அதுதான் மஷ்ரூம். தமிழில் காளான் என்று பெயர்."-கூடத்தின் ஒரு மூலையைச் சுட்டிக் காண்பித்தார் மாமி. பாலித்தின் பேப்பரால் மூடப்பட்டு இருந்தது. அருகில் சென்றேன். பேப்பரை விலக்கிப் பார்த்தேன். செடி முளைத்தாற்போல் அடர்த்தியாக இருந்தது. வெளிர்ச் சாம்பல் நிறம். சுமார் 4 அங்குல உயரம் இருந்தது.

"நிறைய வாங்கியிருக்கிறீர்களோ?"- மாமியிடம் கேட்டேன்?

"வாங்கவில்லை. வீட்டிலேயே வளர்க்கிறோம்."

"என்ன! வீட்டிலேயே வளர்க்கிறீர்களா? நாய்க் குடை மாதிரி இருக்கிறதே!" — சந்தேகத்தோடு கேட்டேன்.

"மழைக் காலத்தில் குப்பை மீதும், மரக்கட்டை மீதும் முளைக்கிறதே, அது சாதாரண நாய்க்குடை. ரொம்பவிஷம். உடம்புக்குக் கெடுதல்...."

"ஐயையோ! நாய்க் குடையையா இன்றைக்குச் சமைத்தீர்கள்?"

"பயப்படாதே, திவாகர்! நீ சாப்பிட்டது சாதாரண நாய்க்குடை இல்லை. வேறு வகைக் காளான்."

" 'விஷக் காளானைச் சாப்பிட்டவருக்கு வாந்தி பேதி!' என்று அடிக்கடி பேப்பரில் படித்திருக்கிறேன். இன்றைக்கு நான் நிறையக் காளான் சாப்பிட்டுவிட்டேன். நிஜமாகவே பயமாக இருக்கிறது, மாமி."

"திவாகர்! நீ இன்றைக்குச் சாப்பிட்டது வைக்கோல் காளான் (Paddy Straw Mush Room). இதை வைக்கோல் நாய்க்குடை என்றும் சொல்வார்கள். அது உடம்புக்கு ரொம்ப நல்லது. புரதச் சத்து ஏராளம். உன் மாமா இதற்குப் 'புரதக் குடை' என்றே செல்லமாகப் பெயர் வைத்திருக்கிறார்."

"அப்படியா? முட்டையில்தான் புரதச் சத்து அதிகம் என்று படித்திருக்கிறேன்."

"முட்டையை விடச் சிறந்தது காளான். இதில் கூடுதலாகப் புரதம் இருக்கிறது. உன்னைப் போன்ற சிறுவர்கள் இதைச் சாப்பிட்டால் ரொம்ப நல்லது."

"இது சிறுவர்களுக்கு மட்டும்தானா? பெரியவர்களும் சாப்பிடலாமா?"

"எல்லோரும் சாப்பிடலாம். 'மஷ்ரூம் சூப்' என்று நீ கேள்விப்பட்டதில்லையா? உலகெங்கிலும் மக்கள் இதை

விரும்பிச் சாப்பிடுகின்றனர். மேலும், சர்க்கரை நோயுள்ளவர்களுக்கு இது சிறந்த உணவு. ஏனென்றால் இதில் மாவுப் பொருளே இல்லை.''

''அதானே பார்த்தேன். மாமாவுக்கு சர்க்கரை வியாதி. கட்டாயம் இதைச் சாப்பிட வேண்டும். காளான் இவ்வளவு சிறந்தது என்றால் விலை ரொம்ப அதிகமாக இருக்குமோ?''

''விலையும் குறைவு. வளர்ப்பதும் எளிது.''

''அதை எனக்குச் சொல்லிக் கொடுங்களேன். சென்னைக்குப் போனதும் நானும் வளர்க்கிறேன்.''

''காளானில் லட்சத்துக்கும் அதிகமான வகைகள் உண்டாம். ஆனாலும், உணவாகச் சில காளான்களே பயன்படுகின்றன. பந்துக் காளான் என்று ஒரு வகை உண்டு. அதையும் உணவுக்காக வளர்க்கிறார்கள். குங்குமப்பால் தொப்பி என்றுகூட ஒரு வகை இருக்கிறதாம். அதை வற்றல் போட்டுச் சாப்பிடுவார்களாம். இதோ உன் மாமாவே வந்து விட்டார். நாங்கள் வளர்க்கும் வைக்கோல் காளானைப்பற்றி அவரையே கேட்டுக்கொள். விவரமாகச் சொல்லுவார்.''

★ ★ ★

காளான் வளர்க்கும் கலையை மாமாவிடம் கேட்டுத் தெரிந்து கொண்டேன். சென்னைக்கு வந்ததும் செயலில் இறங்கினேன். எனக்கு ஒரு நல்ல பொழுது போக்குக் கிடைத்தது. என் அம்மாவுக்குக் குழம்புக்குக் காளான் கிடைத்தது. உங்களுக்கும் சுவையான கட்டுரை கிடைத்தது. காளான் வளர்க்கும் விதத்தைச் சுருக்கமாகக் கீழே கொடுத்திருக்கிறேன். இன்னும் என்ன தாமதம்? நீங்களும் உங்கள் வீட்டில் வைக்கோல் காளானை வளர்க்க வேண்டியது தானே!



நோட்ஸின் மகிமை!

''தம்பி, நீ இந்த நோட்ஸைப் படிச்சால், பரீட்சைக்குப் படிக்கிற நேரத்திலே பாதி மிச்சமாகும்!''

''அப்படின்னா, இதிலே இரண்டு நோட்ஸ் கொடுங்கோ.''

★ ★ ★


தேவையான பொருட்கள்:

1. காளான் நுண் விதைகள்-2 பாட்டில்கள். இந்த நுண்ணிய விதைகளைச் சிறு சிறு வைக்கோல் குச்சிகளில் பூசி, பாட்டில்களில் அடைத்திருப்பார்கள். கோவை விவசாயக் கல்லூரியில் விதைகள் கிடைக்கும்; ஆலோசனைகளும் கிடைக்கும்.

2. துவரம்பருப்பு மாவு - 15 கிராம்

3. புது வைக்கோல் - 2 பிரி.

4. உடையாத செங்கல் (9''×4½'') -18.



5. வெள்ளை பாலிதீன் பேப்பர் இரண்டு மீட்டர்.

6. வீட்டுக்குள் நேரடியாக வெய்யில் படாத இடம் தேவை. சமையல் அறை அல்லது கூடத்தின் மூலையாக இருக்கலாம்.

எப்படி வளர்க்கிறேன்?

வைக்கோல் பிரிகளை நன்றாக முறுக்குவேன். அவற்றை இரண்டு இரண்டு அடி நீளமுள்ள துண்டுகளாக வெட்டுவேன். மொத்தம் 16 துண்டுகள். கனம் சுமார் அரை அடி இருக்கும். அவற்றை நல்ல நீரில் ஒரு நாள் முழுவதும் ஊற வைப்பேன்.

வீட்டுக்குள் வெய்யில் படாத இடத்தில் செங்கற்களைச் சதுரமாகப் பரப்புவேன். மொத்தம் 18 செங்கற்கள். சதுரம் இரண்டே காலுக்கு இரண்டே கால் அடி இருக்கும்.

வைக்கோல் துண்டுகளில் நான்கை எடுத்து நீரை வடிய விடுவேன். அவற்றைச் செங்கல் சதுரத்தின் மீது ஒன்றன் பக்கத்தில் ஒன்றாக வரிசையாக வைப்பேன். உட்புறமாக விளிம்பிலிருந்து அரை அங்குலம் தள்ளி, அரை அடிக்கு ஒன்றாக வைக்கோல் பிரிகளின் மீது காளான் விதை பூசிய குச்சிகளைச் செருகுவேன். பிறகு விதையின் மீது துவரம் பருப்பு மாவைத் தூவுவேன்.

பிறகு, இன்னும் நாலு வைக்கோல் துண்டுகளை எடுத்து நீரை வடிய விடுவேன். முன்பு, வைக்கோல் துண்டுகளை நீள வசத்தில் வைத்தேன். இப்போதும் அதே முறையில் வைக்க மாட்டேன். குறுக்காக வைப்பேன். அவற்றிலும் காளான் விதைக் குச்சிகளைச் செருகி மாவைத் தூவுவேன். இதே போல் வைக்கோல் பிரிகளை ஒன்றன் மேல் ஒன்றாக நான்கு அடுக்குகள் வைப்பேன்.

குறுக்காகவும் நெடுக்காகவும் மொத்தம் நான்கு அடுக்குகள் வைக்கோல் பிரிகளும், அவற்றுக்கான காளான் விதைக் குச்சிகளும் இருக்கும். பிறகு காற்றுப் படாதபடி வெள்ளை பாலித்தீன் பேப்பரால் அழுத்தி மூடுவேன். ஓரங்களை இழுத்து வைக்கோல் பிரியின் அடியில் செருகி வைப்பேன்.

இரண்டு அல்லது மூன்று நாட்களுக்கு ஒரு முறை பாலித்தீன் பேப்பரைத் திறந்து பூவாளியால் இலேசாக நீரைத் தெளிப்பேன். சுமார் 10 நாட்களில் கடுகளவு வெள்ளையாகச் சிறிய முளை தெரியும். அதன் பிறகு ஏழெட்டு நாட்களில் நாலு அங்குல உயரத்தில் நெருக்கமாகக் காளான்கள் வளர்ந்திருக்கும். காளான் குடை மலர்ந்ததும் அதை உடனே பறித்து விடுவேன்.

பாலித்தீன் பேப்பருக்குள் ஈரத் தன்மையை ஒரே சீராக வைத்திருந்தால் நன்றாக வளரும். நிறையக் காளான்கள் கிடைக்கும்.

அவற்றைப் பறித்து அம்மாவிடம் கொடுப்பேன்.

அப்புறம்?

அம்மா சுவையாகச் சமைப்பாள். நான் நன்றாகச் சாப்பிடுவேன்.

The following particulars regarding the ownership of 'GOKULAM' the Tamil monthly newspaper, are published, as called for by Rule 8 of the Registration of Newspapers (Central) Rules 1956.

FORM IV

1. *Place of Publication:* Madras
2. *Periodicity of Publication:* Monthly
3. *Name of Printer:* V. Murali
   Nationality: Indian
   Address: AA-117, Shanthi Colony
   Anna Nagar
   Madras-600 040
4. *Name of Publisher:* V. Murali
   Nationality: Indian
   Address: AA-117, Shanthi Colony
   Anna Nagar
   Madras-600 040
5. *Name of Editor:* K. Rajendran
   Nationality: Indian
   Address: 1, Purushothama Mudaliar Rd.
   Lake Area
   Nungambakkam
   Madras-600 034
6. *Names and addresses of individuals who own the newspaper and partners or shareholders holding more than one per cent of the total capital:*
   Bharathan Publications Private Limited
   84/1-C, Race Course Road, Guindy,
   Madras-600 032

V. Murali
Publisher

1-3-1983

சிரித்து வாழ வேண்டும்!

உங்களில் பலர் அடிக்கடி சினிமா பார்க்க ஆசைப்படுகிறீர்கள்.

சிலருக்கு சினிமாப் பாட்டு மிகவும் பிடிக்கிறது.

பொதுவாக சினிமாவில் குழந்தைகளுக்கு என்று தனியான பாடல்கள் இல்லாவிட்டால்கூட, நீங்கள் பாடத்தான் செய்கிறீர்கள். ஏனெனில் அவை காதுக்கு இனிமையாக இருக்கின்றன. சில பாட்டுக்கள் எளிமையாகவும் இருக்கின்றன. அதனால்தான் உங்கள் வாய் தானாகவே பாடுகின்றது.

தமிழில் பேசும் படங்கள் தோன்றி ஐம்பது ஆண்டுகளுக்கு மேல் ஆகின்றன. சினிமாவின் பொன் விழா, சிறப்பாக முடிந்து விட்டது.

இதுவரை தமிழில் ஆயிரக் கணக்கான திரைப்படங்கள் வெளி வந்துள்ளன.

அவைகளில் குழந்தைகளுக்காகவே தயாரிக்கப்பட்ட படங்கள் மிக மிகக் குறைவு. புராணப் படங்கள் சிலவற்றில் கதாநாயகர்களே குழந்தைகளாக இருப்பார்கள். நந்தகுமார், கிருஷ்ண லீலா, பக்த துருவன், மார்க்கண்டேயன், பிரகலாதன், பக்த கௌரி, பால முருகன் இவர்களின் புராணக் கதைகள் சினிமாவாக வந்துள்ளன.

இவைகளில் குழந்தைகளே நடித்திருக்கிறார்கள். இந்தப் படங்களில் பக்திப் பாடல்கள் நிறைய உண்டு. ஆயினும் அவைகள் அனைத்தும் குழந்தைப் பாடல்கள் என்று சொல்ல முடியாது.

சினிமாவில் பலர் குழந்தை நட்சத்திரங்களாக நடித்திருக்கிறார்கள்.

இப்போது உனக்கு நன்றாகத் தெரிந்த கமலஹாசன் பெரிய சினிமா நட்சத்திரம். ஆனால், அவர் சின்ன வயதிலே குழந்தை நட்சத்திரமாக அறிமுகமானவர்தான்.

குழந்தையாக கமலஹாசன் நடித்த படம் எது தெரியுமா?

களத்தூர் கண்ணம்மா. அந்தப் படத்தில் கண்ணம்மாவாக நடித்தவர் சாவித்திரி. அவருக்கு மகனாக நடித்தார் கமலஹாசன்.

அந்தக் குழந்தை ஒரு கோவிலில் முருகன் சன்னிதியில் நின்று தன் தோழர்களுடன் ஒரு பாட்டுப் பாடுகிறான்.

அந்தப் பாட்டை நீ அடிக்கடி கேட்டிருப்பாய்.



✠ தியாகபூமியில் பேபி சரோஜா

✠ களத்தூர் கண்ணம்மாவில் சாவித்திரி, கமல்



புத்தனேரி மாமா

''அம்மாவும் நீயே! அப்பாவும் நீயே!
அன்புடனே ஆதரிக்கும்
தெய்வமும் நீயே
முருகா... முருகா...''

என்ற பாட்டுத்தான் அது.

''தந்தை முகம் தாயின் முகம்
கண்டறியோமே! — மனச்
சாந்தி தரும் இனிய சொல்லைக்
கேட்டறியோமே...
எங்களுக்கோர் அன்பு செய்ய
யாரும் இல்லையே — இதை
அறியாயோ முருகா...!''

என்று அந்தக் குழந்தை உருக்கமாகப் பாடுகின்றது. கமலஹாசன் பாடுவது போன்ற இந்தப் பாடலை எம். எஸ். ராஜேஸ்வரி பாடியுள்ளார். பாடலை எழுதியவர் டி. கே. சுந்தர வாத்தியார்.

சுமார் 45 ஆண்டுகளுக்கு முன் என் சிறு வயதில் நான் 'பால யோகினி' என்னும் ஒரு படம் பார்த்தேன். அதில் நடித்த குழந்தை நட்சத்திரம் தன் சொந்தக் குரலிலேயே பாடியது எனக்கு நினைவிருக்கிறது.

அந்தக் குழந்தையின் பெயர் பேபி சரோஜா. கதையில் வரும் குழந்தையின் பெயரும் சரோஜாதான்.

'பால யோகினி' கதையில் சப்-கலெக்டரின் மகளான சரோஜா, சரசா என்னும் ஏழைக் குழந்தை மீது மிகுந்த பாசம் கொள்கிறது. அந்தக் குழந்தையின் பசியைப் போக்குவதற்காகத் தன் வீட்டிலிருந்து பட்சணங்கள் கொடுத்து மகிழ்விக்கிறது.

இப்படி எல்லாரையும் தன்னுடைய அன்பால் கவர்ந்த சரோஜா ஒரு பொம்மையைக் கையில் வைத்துக் கொண்டே, பொம்மைக் குதிரைமீது ஆடிக்கொண்டே பாடுகிறது:

கண்ணே பாப்பா!
மிட்டாயி வாங்கித்
தருகிறேனே நான்''

என்ற அந்தப் பாட்டு அந்தக் காலத்தில் எங்கும் ஒலித்தது.

''உழைத்தே வறுமை
ஒட்டிடத் துணிவோம்''

என்ற நல்ல கருத்துள்ள பாட்டும் 'பால யோகினி' படத்தில் உண்டு. பாடலை எழுதியவர் பாபநாசம் சிவன்என்ற புகழ் பெற்ற தாத்தா. தமிழில் ஏராளமான பாடல்கள் எழுதிய பெரியவர் அவர்.

சினிமாவில் குழந்தைகளே பாடும் பாட்டு ஒரு வகை; குழந்தைகளுக்காகப் பெரியவர்கள் பாடும் பாட்டு மற்றொரு வகை.

அப்படி, முன்காலத்திலே, ''சத்திய சீலன்'' என்ற படத்தில் ஓர் எளிமையான பாட்டுப் பாடப்பட்டது.

அதைப் பாடியவர் அந்தக் காலத்தில் மிகவும் புகழ்பெற்ற நடிகர்; பாடகர்; அவர் பெயர் எம். கே. தியாகராஜ பாகவதர். அவர் சினிமாவில் தன் சொந்தக் குரலிலேயே அற்புதமாகப் பாடியவர்.

பகைவர்களை வென்று சத்தியசீலன் மணிமகுடம் சூடும்போது, கொலு மண்டபத்தில் பாடப்படுகின்ற பாட்டு, குழந்தைகளுக்கு மிகவும் ஏற்றது.

''சொல்லு பாப்பா — நீ
சொல்லு பாப்பா
சுகம்பெற வழி ஒன்று
சொல்லு பாப்பா''

என்று எம். கே. தியாகராஜ பாகவதர் அரசன் முன் பாடுகிறார். அந்தப் பாட்டைக் கேட்டு மகிழும் அரசனாகவும், பாகவதரே கம்பீரமாகக் கொலுவீற்றிருக்கிறார். இப்படி அவரது இரட்டை வேடம் மக்களை மிகவும் கவர்ந்தது.

''ஓடி விளையாடு பாப்பா'' என்று மகா கவி பாரதியார் சின்னக் குழந்தைகளுக்கு நல்ல நீதிகளை எளிமையாகச் சொன்னார் அல்லவா?

அதே போல, 'சொல்லு பாப்பா' பாட்டிலும்,

''வெல்லும் பகை ஒழியச்
சொல்லு பாப்பா — நம்
வெற்றிக் கொடிபறக்கச்
சொல்லு பாப்பா
நல்ல தமிழ் வளரச்
சொல்லு பாப்பா — மக்கள்
ஞான விலாசம் பெறச்
சொல்லு பாப்பா
கைத்தொழில் ஓங்கவென்று
சொல்லு பாப்பா''

என்றெல்லாம் மிகவும் எளிமையான சொற்கள் இனிமையாக அமைந்



அலைகடல் சூழ் உலகினிலே
அரிய தமிழ் நாடுண்டாம்.


அரிய தமிழ் நாட்டினிலே
அழியாத இனமுண்டாம்.

அழியாத இனந்தனிலே
அமுதுநிகர் மொழியுண்டாம்.

அமுதுநிகர் மொழியினிலே
அகர முதற் குறளுண்டாம்.

அகர முதற் குறள்தனிலே
அகிலமெல்லாம் அடங்கிடுமே!

- மன்றவாணன்



துள்ளன. ஜனகை கவிகுஞ்சரம் என்பவர் எழுதிய பாடல் இது.

இதைப் போலவே சில ஆண்டுகளுக்கு முன் வெளி வந்த 'நம் நாடு' என்ற படத்திலும் ஓர் அருமையான பாட்டு வருகிறது.

அந்தப் பாடலை நீ அடிக்கடி கேட்டிருப்பாய்.

''நல்ல பேரை வாங்க வேண்டும்
பிள்ளைகளே! — நம்
நாடு என்னும் தோட்டத்திலே
நாளை மலரும் முல்லைகளே!''

என்ற இனிய பாடலை, புரட்சி நடிகர், இன்றைய தமிழக முதல்வர், எம்.ஜி. ஆர். அவர்கள் பாடுவது போல அமைந்த காட்சி அற்புதமானது.


ஏழைக் குழந்தைகளோடு பாசத்தோடு பழகி, உற்சாகம் ஊட்டும் வண்ணம் கதாநாயகன் பாடுகின்ற பாடல் அது.

''பாலூட்டும் அன்னை அவள்
நடமாடும் தெய்வம்
அறிவூட்டும் தந்தை நல்
வழிகாட்டும் தலைவன்
கிளிபோலப் பேசு — இளம்
குயில்போலப் பாடு
மலர் போலச் சிரித்து — நீ
குறள் போல வாழ்வாய்''

என்றெல்லாம் குழந்தைகளுக்கு ஏற்ற இனிய கருத்துக்களை அந்தப் பாட்டிலே காணலாம்.

பாடல் ஆசிரியர் வாலி; பாடியவர் டி. எம். சவுந்தரராஜன்; இசை எம். எஸ். விசுவநாதன்.

※ நல்லபேரை...



''தூங்காதே தம்பி தூங்காதே—வெறும்
சோம்பேறி என்ற பெயர் வாங்காதே''

என்ற பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் இயற்றிய பாடலும்,

''சிரித்து வாழவேண்டும் — பிறர்
சிரிக்க வாழ்ந்திடாதே!''

என்ற பாடலும் எம்.ஜி.ஆர். அவர்கள் நடித்த படங்களில் ஒலித்த சிறப்பை நீ கேட்டிருப்பாய்.

இந்தச் சமயத்தில் இன்னொரு பழைய படத்தையும் நினைவூட்ட விரும்புகிறேன்.

தாய்நாட்டுப் பற்றை ஊட்டுகின்ற 'மாத்ரு பூமி' என்ற அருமையான படத்தில் குழந்தைகளுக்கும் வீரம் ஊட்டும் பாடல் காட்சி இடம் பெற்றுள்ளது.

நம் நாடு ஆங்கிலேயரிட்டம் அடிமைப் பட்டுக் கிடந்த காலத்தில், தேச பக்தியை ஊட்டுவதற்காகத் தயாரிக்கப் பட்ட படம் 'மாத்ரு பூமி.'



✠ மாத்ருபூமியில் டி.வி. குமுதினி அரச குமாரனுக்கு வாள் பயிற்சி கற்றுத்தரும் காட்சி

''அன்னையின் காலில் விலங்குகளோ?
அந்தோ! நாம் அறிவில் விலங்குகளோ?''

என்று வீரத் தாய் பாடுவதாக அமைந்த அருமையான பாட்டு மறக்கமுடியாதது.

கிரேக்க நாட்டு வீரன் மினந்தர் என்பவன் நம் நாட்டில் உதயகிரி அரசனோடு போர் புரிந்த சமயம், மக்களின் தேச பக்தியை குமுதினி என்னும் வீரப் பெண்ணின் மூலம் காட்டுகின்ற கதை.

குமுதினி சின்னஞ் சிறு அரச குமாரனுக்கு வீர விளையாட்டுப் பாடல் மூலம் வீரம் ஊட்டுகிறாள்.



தேங்காய்க் கணக்கு

ஒரே தெருவில் வரிசையாக மூன்று கோயில்கள் இருக்கின்றன. ஒருவர் சில தேங்காய்களை எடுத்துச் சென்றார். ஆனால் அவர் ஒவ்வொரு கோயிலுக்குள் நுழையும்போதும் அவர் கையிலுள்ள தேங்காய்கள் இரண்டு மடங்கு ஆகி விடும். அவர் ஒவ்வொரு கோயிலிலும் சம எண்ணிக்கை உள்ள தேங்காய்களை உடைத்தார். வீட்டுக்கு வரும்போது கையில் தேங்காய் எதுவும் இல்லை.

அப்படியானால் அவர் எவ்வளவு தேங்காய்களை முதலில் எடுத்துச் சென்றார்? ஒவ்வொரு கோயிலிலும் எத்தனை தேங்காய்கள் உடைத்தார்?

- என். வி. கல்யாணராமன்

''வடிவேலினை வீசுவோம்
வீரமோடு எதிரியை மோதுவோம்!
அபிமன்யு போல் நீ வீரனாக இரு!''

என்றெல்லாம் பாடி அந்தச் சிறுவனுக்கு வாள் வீசப் பயிற்சி அளிக்கும் படத்தைப் பக்கத்தில் காணலாம்.

''ஏ பாரத வீரரே!
கொட்டுவீர் கொட்டுவீர்
மாத்ருபூமி நகரா!''

என்று வீரர்கள் அணிவகுத்துப் பாடும் வீரப் பாடலில்,


''அஞ்சி வணங்கி அடங்கி ஒடுங்கிடும்
அடிமைகள் நாமோ? பாரத வீரா!
பாரத அன்னையின் பங்கம் அறுத்தல்
நம் கடன் அன்றோ?''

என்றெல்லாம் எழுச்சி ஊட்டும் வரிகளை வீரப் பெண் வேடத்தில் டி.வி. குமுதினி பாடினார். இப்படி எத்தனையோ பயனுள்ள பாடல்கள் சினிமாவில் முழங்கியுள்ளன.

[illegible]


தேவர்கள் ஆட்சி தோற்றது. சிவபெருமான் தவத்தைக் கலைக்க அனுப்பிய மன்மதன் எரிந்ததும் அழுதனர், தொழுதனர்.
பெருமானே! சூரபன்மன் கொடுமை தாங்க முடியவில்லையே!
நம்மை எதிர்த்த தட்சன் யாகத்தில் பங்கு கொண்ட பாவத்தால் சூரபன்மன் கொடுமைக்கு ஆளானீர். கவலை வேண்டாம். பார்வதியை மணந்து குமாரனைத் தருவோம். அவன் உங்களைக் காப்பான்.
வெற்றிவேல் வீரவேல் 2
கதை: சுகிசிவம் ❖ படம்: விஜு
கிழவராக வந்து பார்வதியின் தவத்தைச் சோதிக்கிறார் சிவபெருமான். அருகில் பார்வதியின் தோழி.
மாணிக்கத்தை மற்றவர் தேட வேண்டும். மாணிக்கம் யாரைத் தேடுகிறது? பெண்ணே! யாரைத் தேடி இந்தத் தவம்?
“சிவனை மணப்பதற்காக!”
சிவனை அடைய முடியுமா?.. சே..சே அடைந்தாலும் என்ன பொருத்தம்? அவனுக்கு மாலை எலும்பு.. ஆடை தோல்.. வாகனம் எருது.. கையில் கபாலம்.. வசிக்கும் இடம் சுடுகாடு.. உனக்குப் பொருந்தாது பெண்ணே!
கிழவரே! இங்கிருந்து நீர் கிளம்புகிறீரா? நான் போகட்டுமோ?


தவத்தை
கலைச்சிடும்.
விரைவில்
மணப்போம்.
பலித்தது தவம்.
கிடைத்தது சிவம்.
நாட்கள்
நகர்ந்தன.
தேவர்கள்
வெந்தனர்.
"சுவாமி! சூரபத்மன்
கொடுமைகள் தீர குமாரனைக்
கொடுங்கள்!"
நெருப்புப் பொறிகள் ஆறு
நெற்றிக் கண்ணில்
பிறந்தன.
நிலை குலைந்து ஓடினர்
தேவர்.
இயற்கை திகைத்தது.
ஆனால் யாருக்கும்
அறிவு இல்லை.


"மலைகள் வெடிபட
கடல்கள் வற்றின?
எங்கும் இதே நிலை.
எங்களைக் காப்பாற்றுங்கள்"
நெற்றிக் கண் நெருப்பைத் தாங்க முடியாத
கங்கை சரவணப் பொய்கையில்
சேர்த்தாள். உதித்தனன் முருகன். மகிழ்ந்தனர்
தேவர்.
நீரில் பூத்தன நெருப்பு
மலர்கள்.
"வாயு! அக்கினி!
நெருப்புப் பொறிகளைச்
சுமந்து போய்
கங்கையில்
விடுங்கள்...ம்."
நீர், நிலம், நெருப்பு, காற்று, வானம் ஆகியவை பஞ்சபூதங்கள்
எனப்படும். அவை கடவுளுக்கு அடிமை. சிவபிரானின்
நெற்றிக் கண்ணில் உதித்த முருகனை நெருப்பும்
காற்றும் வான் வழியே சுமந்து, நீரில் சேர்க்க நிலத்தில்
தவழ்ந்தான் முருகன். ஆதலால் ஐம்பூதங்களின்
தலைவன் அவன்.
முருகனுக்குத் துணைவர்
ஒன்பது வீரர்.
அவர்கள் நவசக்திகள்
வயிற்றில் தோன்றினர்.
ஆறு கார்த்திகைப் பெண்கள்
அழைக்கவும் ஆறுமுகன்
ஆறு முருகனாய்த் தோன்றினான்.
பாலூட்டி, சீராட்டி
வளர்த்தனர்.


ஆறுமுகனின்
ஆடல்கள் அநேகம்.
அவன் ஆடுகிறான்.
பாடுகிறான். கை கொட்டி
ரசிக்கிறான். சிரிக்கிறான்.
ஒரு முருகன்
தூங்குகிறான்.
ஒருவனோ நாள்
முழுவதும் அழுது
கொண்டே
இருக்கிறான்.
குழந்தையைக் காண
வந்தாள் பார்வதி.
ஆறு முருகனையும் அள்ளி அணைத்தாள்.
ஆறு முருகன் — ஆறுமுகன் ஆனான்.
"ஆறும் நம்
குழந்தை!
யாரை
எடுப்பது?"
கங்கை கொடுத்ததால் காங்கேயன். கார்த்திகை
வளர்த்ததால் கார்த்திகேயன். சரவணத்தில் தவழ்ந்ததால் சரவணன்.
பார்வதியால் கட்டப்பெற்றதால் கந்தன். ஆறு முகங்களை
உடையதால் சண்முகன் ஆனான்.
முருகனுக்கு ஏன் ஆறுமுகம்?
தொடரும்

நெடுங்கதை

ஜோதிர்லதா கிரிஜா



திண்டுக்கல்லுக்கு இரண்டு டிக்கெட்!

சினிமாத் தியேட்டரைச் சுற்றி ஒரே கூட்டம். தியேட்டரை நெருங்க நெருங்க வெங்கிட்டுவுக்கு மனசு அடித்துக்கொண்டது. 'டிக்கெட் டிக்கெட்' என்றே தன் இருதயம் அடித்துக்கொண்டது போல் அவனுக்குத் தோன்றியது. ஜேஜே என்று நூற்றுக் கணக்கில் தலைக்குத் தலை சத்தம் போட்டுக் கொண்டு தியேட்டரைச் சுற்றிக் காணப்பட்ட மனிதர்களைப் பார்த்ததும் அவனுக்கு அவநம்பிக்கை ஏற்பட்டது. அவன் மிக விரைவாகத் தியேட்டரின் சுற்றுச் சுவருக்குள் கால் வைத்தான்.

அவன் பயந்தது போலவே ஆயிற்று. டிக்கெட்டுகளெல்லாம் விற்றுப்போய் விட்டன. வெங்கிட்டு ஏமாற்றத்துடன் திரும்பினான். தெருவுக்கு நடந்தான். அவன் பத்தடிகூட நடந்திருக்க மாட்டான். எதிரில் ரத்தினம் வந்தான்.

''என்னடா, டிக்கெட் கிடைக்கவில்லையா?'' என்ற ரத்தினத்தின் குரல் கேட்டு அவன் தலையை உயர்த்தினான்.

''ஆமாண்டா ரத்தினம்!'' என்றான். அவன் குரலில் ஒரே துயரம். கண்களிலோ சொல்லி முடியாத ஏமாற்றம் தெரிந்தது.

''உனக்கு நன்றாய் வேண்டும்!'' என்று ரத்தினம் சிரித்தான்.

''ஏண்டா?'' என்று வெங்கிட்டு சற்றுக் கோபமாகவும் வியப்பாகவும் கேட்டான்.

''நானும் இந்தப் படம் பார்க்கவில்லை என்று உனக்குத் தெரியும், இல்லையா?'' என்று ரத்தினம் கண்களை உருட்டிக் கொண்டே கேட்டான்.

அவன் என்ன கேட்கப் போகிறான் என்பது வெங்கிட்டுவுக்குப் புரிந்தது.

''ஏன் என்னைக் கூப்பிட வில்லை? ஏதடா, நம்ம ஃபிரண்டாச்சே என்ற ஞாபகம் கொஞ்சமாவது உனக்கு வந்ததா? வந்திருந்தால் என்னையும் கூப்பிட்டிருப்பாய், இல்லையா? என்னை மறந்ததால்தான் உனக்கு டிக்கெட் கிடைக்கவில்லை! உனக்கு நன்றாய் வேண்டும்!'' என்றான் ரத்தினம்.

''டேய் ரத்தினம், அப்படியெல்லாம் பேசாதே. என் அப்பாவுக்குத்தான் சினிமா, டிராமாவெல்லாம் பிடிக்காதே.

அதனாலே என் அம்மாவின் அனுமதி பெற்றுப் பணம் வாங்க நான் பட்ட பாடு... அப்பப்பா! அனுமதி பெற்றதும் தியேட்டரை நோக்கி ஓடோடி வந்தேன். வந்த உற்சாகத்தில் என்னையே நான் மறந்து போனேன். அப்புறமல்லவா உன்னை ஞாபகம் வைத்துக் கொள்ள?'' என்று வெங்கிட்டு சமாளித்தான்.

''பெரிய ஆள்டா நீ. எதற்கும் ஒரு பதில் தயாராய் வைத்திருப்பாய்!'' என்று ரத்தினம் சிரித்தான்.

''சரி வாடா ரத்தினம். டிக்கெட் தான் கிடைத்துச் சினிமா பார்க்கவில்லை. ஓட்டலுக்காவது போய் வயிறு முட்ட டிபன் சாப்பிடலாம்!'' என்றான்.

''என் அம்மா சாமான் வாங்கத் தந்த பத்து ரூபாய்தான் என்னிடம் இருக்குது. வேறு காசு இல்லையேடா!''

''அதைப் பத்தி உனக்கு என்னடா? நான் வைத்திருக்கிறேன், வாடா!''

இருவரும் ஓர் ஓட்டலுக்குள் புகுந்தார்கள். வேண்டியவற்றை வாங்கி ரசித்துச் சாப்பிட்டார்கள். பில்லை வாங்கிக் கொண்டு கல்லாவுக்கு நடந்தார்கள். முதலாளியிடம் காசைக் கொடுத்து மீதிச் சில்லறையை வாங்கிக் கொண்டு தலை நிமிர்ந்த வெங்கிட்டு திடுக்கிட்டான். ரத்தினமும்தான். வெங்கிட்டுவின் அப்பா ஓட்டலுக்குள் நுழைந்து கொண்டிருந்தார். ஓட்டலில் கூட்டம் அவ்வளவாக இல்லை. இதனால் நுழைந்தபோதே அவர், அவர்களைக் கவனித்து விட்டார். அவர் கண்கள் விரிந்தன. அவற்றில் தெரிந்தது வெறும் வியப்பு மட்டும் இல்லை. கோபமும் இருந்தது. இதைப் புரிந்து கொண்ட வெங்கிட்டுவின் மார்பு படபடவென்றது.

ரத்தினத்துக்கு வெங்கிட்டுவின் அப்பாவைப் பற்றி நன்கு தெரியும். இதனால் அவனுக்கும் அச்சம் ஏற்பட்டது.

அவர்களுடன் ஓட்டல் வாசலுக்கு வந்த சிவசாமி, ''காசு ஏதடா உனக்கு?'' என்று கடுமையான குரலில் வெங்கிட்டுவைப் பார்த்துக் கேட்டார். கேட்டதோடு நில்லாமல் அவன் காதைப் பிடித்து முறுக்கினார். வெங்கிட்டுவின் வலக் காது அப்படியே சிவந்துபோய் விட்டது. வலி தாங்க முடியவில்லை அவனுக்கு. காதை முறுக்கிய வலியை விட, ஓட்டல் வாசலில் நாலு பேர் பார்வையில் பட அப்பா அப்படிச் செய்தது அவனுக்கு அதிக வலியை ஏற்படுத்தியது. அத்தனை பேரும் தன்னை வேடிக்கை பார்ப்பதாக அவனுக்குத் தோன்றியது. இதனால் அவனது வலி மேலும் அதிகமாயிற்று.

அவன் பதில் சொல்ல வாயைத் திறப்பதற்குள், ''அடேடே! சிவசாமியா? எங்கே இப்படி? இந்த ஊரில் தான் இருக்கிறாயா?'' என்று இரைந்த குரலில் கூவியபடி ஒரு பெரியவர் அங்கே வந்தார். சிவசாமியின் தோளை உரிமையாகத் தொட்டார். சிவசாமி வெங்கிட்டுவின் காதை விட்டுவிட்டார். திரும்பிப் பார்த்தார்.

அப்பாடா! வெங்கிட்டுவின் காதுக்கு விடுதலை கிடைத்தது! ஒரு நிமிடத்துக்குள் அவனது சின்னக் காது எப்படித் தான் சிவந்து போய்விட்டது!

''அடேடே, கோபுவா! நீ சௌக்கியமா?'' என்று பதிலுக்குக் கேட்ட சிவசாமி அந்த மனிதரை அணைத்துக் கொண்டார். வெகு நாட்களுக்குப் பிறகு அவர்கள் சந்தித்துக் கொண்டது வெங்கிட்டுவுக்குப் புரிந்தது. சரியான நேரத்தில் சஞ்சீவியாக வந்து சேர்ந்து தன் காதுக்கு விடுதலை வாங்கித் தந்த அவரை அவன் மனம் வாழ்த்தியது.

சட்டென்று திரும்பிய சிவசாமி, ''போடா வீட்டுக்கு. நான் வந்து பேசிக் கொள்கிறேன்'' என்றார்.

'தப்பினோம் பிழைத்தோம்' என்று வெங்கிட்டுவும் ரத்தினமும் சிட்டாய்ப் பறந்தார்கள்.

சிறிது தூரம் சென்றதும், வெங்கிட்டு சொன்னான்: ''எங்கள் அப்பாவுக்கு ரொம்ப முன்கோபம்டா. அடித்து நொறுக்கிவிடுவார். 'அடியாத மாடு படியாது' என்று அடிக்கடி சொல்லுவார். ஆனாலும் அயலாரின் முன்னால் நம்மை அடித்தால் நமக்கு அவமான

வேலை காலி இல்லை

கடை முதலாளி: ஏய், வீணாக என்னைத் தொந்தரவு செய்யாதே! இப்போ இங்கே வேலை எதுவும் காலி இல்லை. இன்னும் அஞ்சு வருஷம் கழிச்சு வா. அப்போது பாக்கலாம்.

வேலை தேடி வந்த பையன்: சரிங்க. ஆனால் அப்போது நான் எப்போ வரணும்? காலையிலா, மாலையிலா?



மாக இருக்காதா? அதை யெல்லாம் யோசிக்கவே மாட்டார்!'' என்றான்.

''அது சரி, அந்த கோபு மாமா யாருடா?'' என்று ரத்தினம் கேட்டான்.

''எனக்குத் தெரியாது. என் அப்பாவுடைய பழைய சிநேகிதராக இருக்கும். அவரை இதற்கு முன்னால் நான் பார்த்தது இல்லை...'' என்று வெங்கிட்டு பதில் சொன்னான்.

''ஆமாம், நம் பரீட்சை முடிவுகள் எல்லாம் என்றைக்குத் தெரியுமாம்? அதைப் பற்றி உனக்கு ஏதாவது தெரியுமா?'' என்று ரத்தினம் விசாரித்தான்.

''ரிசல்ட் இன்றைக்கு வரவேண்டும் என்று நினைக்கிறேன். தப்பினால் நாளை வந்துவிடும். எதற்கும் நம் சுப்புணி வீட்டுக்குப் போய்க் கேட்கலாமாடா? நம் ஹெட் மாஸ்டருடைய பிள்ளை அவனுடைய நெருங்கிய நண்பனல்லவா? அவனுக்கு விஷயம் தெரிந்திருக்கும்'' என்று வெங்கிட்டு சொன்னான். சொல்லி விட்டு அவன் தலையை உயர்த்தியபோது ஒரு சைக்கிள் அவர்கள் பக்கம் வந்தது. சைக்கிளில் இருந்தது சுப்புணியேதான்!

இருவரையும் பார்த்ததும் சுப்புணி சைக்கிளை நிறுத்திவிட்டுக் கீழே இறங்கினான். புன்னகை செய்தான். ''எங்கேடா போகிறீர்கள்?'' என்றான்.

''இப்போதுதாண்டா உன் பேரைச் சொன்னோம். அதற்குள் நீயே வந்து விட்டாய். நம் ரிசல்ட் பற்றி ஏதாவது தெரியுமாடா?'' என்று வெங்கிட்டு கேட்டான்.

''ஓ, வந்தாச்சே! அப்படியானால் உங்களுக்கு விஷயமே இன்னும் தெரியாதா என்ன?'' என்று சுப்புணி வியப்புடன் வினவினான்.

''வந்தாச்சா? நாங்கள் பாஸாடா'' என்று ரத்தினம் அவசரப்பட்டான். வெங்கிட்டுவுக்குப் பரபரப்பாக இருந்தது.

சுப்புணி உடனே பதில் சொல்லவில்லை. கொஞ்சம் தயங்கினான். பிறகு ''நான் பாஸாகி விட்டேன்.... ஆனால், நீங்கள் இருவரும்தான்... எப்படிடா அதை என் வாயால் சொல்வது?'' என்றான்.

ரத்தினமும் வெங்கிட்டுவும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள். இருவர் முகங்களும் வெளிறின.

''என்னடா ஆச்சு சுப்புணி? நாங்க ரெண்டு பேரும் பெயில் ஆகி விட்டோமா?'' என்று வெங்கிட்டு வாய் விட்டுக் கேட்டான். அவன் குரலும் நடுங்கியது.

''ஆமாம், வெங்கிட்டு. நீங்கள் இருவருமே பாஸாகவில்லை. பரீட்சை எல்லாம் நன்றாக எழுதியதாகச் சொல்லிக் கொண்டிருந்தீர்களே?'' என்று கேட்டு விட்டுச் சுப்புணி அவர்களை இரக்கத்துடன் பார்த்தான்.

இருவரும் பதிலே சொல்லாமல் நின்று கொண்டிருந்தார்கள். ஓரிரு வினாடிகள் நின்றுவிட்டு சுப்புணி சைக்கிளில் ஏறிப் போய் விட்டான்...

வெங்கிட்டுவும் ரத்தினமும் தரையைப் பார்த்துக் கொண்டு மெதுவாக நடக்கலானார்கள். இருவருக்குமே அழுகை வந்தது. அடக்கிக் கொள்ள முடியவில்லை. ஒரு வருடத்துப் படிப்பு வீண். இனிமேல் அதே வகுப்பில் மறுபடியும் அதே பாடங்களைக் கட்டிக் கொண்டு அழவேண்டும். அவமானப்பட வேண்டும். மற்ற எல்லாரும் மேல் வகுப்புக்குப் போய் ஆரவாரத்துடன் உட்காருவார்கள். மிகவும் வருத்தமாக இருக்கும். ஏமாற்றமாக இருக்கும்....

அக்கம் பக்கத்து மனிதர்கள் அப்பா—அம்மாவிடம் துக்கம் கேட்பார்கள். அப்பாவின் நடைக் கம்பை நினைத்தபோது வெங்கிட்டுவுக்கு முதுகில் வலித்தது. கையில் கம்பை எடுத்தால், எந்த இடத்தில் அடிக்கிறோம் என்ற நினைப்பே இல்லாமல் அடித்து நொறுக்கி விடக் கூடியவர். சின்ன விஷயங்களுக்கே அடிக்கிறவர், இப்போது 'பெயில்' ஆகிவிட்டு வந்து நிற்கிறதைப் பார்த்தால்...வெங்கிட்டுவுக்கு வேர்க்கத் தொடங்கியது. வயிற்றில் என்னவோ புரண்டது. ரத்தினத்தினுடைய அப்பாவைப் பற்றிக் கேட்கவே வேண்டியதில்லை. ரத்தினம் கோட்டை விட்டது தெரிந்தால், அவரது இடுப்பு வார் இரண்டாகிவிடும்!



நல்ல பெயர்

''என் பெண் குழந்தைக்கு நல்ல பெயரா வைக்கணும். மனசிலே 'ஒட்டற' மாதிரி ஒரு பேரு சொல்லுங்க.''

'' 'பசை'ன்னு வையுங்க.''

—ஜி. குமரேசன்

''ஏண்டா வெங்கிட்டு, பரிட்சை யெல்லாம் சரியாகத்தானேடா எழுதிய தாய் நினைத்துக் கொண்டிருந்தோம்? ரொம்ப நன்ருக எழுதா விட்டாலும் பெயில் ஆகிற அளவுக்கு மோச மாகவாடா எழுதினேம்?ஏண்டாபெயில் ஆகிவிட்டது?'' என்று ரத்தினம் புலம் பினன். தொண்டை அடைத்ததில் வாய் குழறியது.

''இனிமேல் அதைப் பற்றிப் பேசி லாபமில்லே. நம் அப்பாக்களின் வசவு களிலிருந்தும், அடி உதைகளிலிருந்தும் தப்ப ஒரே ஒரு வழிதான் இருக்கிறது.'' என்று வெங்கிட்டு முனகினன்.

'':என்னடா அது?'' என்று ரத்தினம் கண்களைத் துடைத்துக் கொண்டே ஆவலுடன் கேட்டான்.

''உன்னிடம் ஏதாவது பணம் இருக் கிறதாடா ரத்தினம்?''

''சாமான் வாங்கி வரச் சொல்லி அம்மா கொடுத்த இந்தப் பத்து ரூபாய் தான் இருக்குது.''

''சரி, அப்படியாளுல் என் கூடவா!''

''எங்கேடா?''

''என் மேல் நம்பிக்கை இருக்கிறதா உனக்கு?... அப்படியாளுல், பேசாமல் என்னேடு வா. அப்போதுதான் தப்ப லாம்'' என்று வாயாடி வெங்கிட்டு ரத் தினத்தை இழுத்துக் கொண்டு ஓடத் தொடங்கினன். ஒன்றுமே புரியாமல் ரத்தினம் வெங்கிட்டுவைப் பின்-தொடர்ந்தான்.

இருவரும் ஓடிக் கொண்டிருந்த பாதை ரயில்வே நிலையத்தைச் சென்று அடைந்தது. இருவரும் பயணச் சீட்டுக் கொடுக்கும் இடத்தை அடைந்தனர். ரத்தினத்திடமிருந்த ரூபாயை வாங்கி ''திண்டுக்கல்லுக்கு இரண்டு டிக் கெட்டுகள்!'' என்ருன் வெங்கிட்டு.

பயணச் சீட்டுகளுடன் திண்டுக்கல் போகிற ரயில் எது என்று விசாரித் துத் தெரிந்து கொண்டு, இருவரும் அதில் ஏறிக் கொண்டார்கள். ஜன்னல் ஓரம் தேடி உட்கார்ந்துகொண்டார்கள். இருவரின் இதயங்களும் படபட வென்று துடிக்கத் தொடங்கின.

ஐந்தே நிமிடங்களில் உரக்கக் கூவி விட்டு அந்த வண்டித் தொடர் புகை யைக் கக்கிக் கொண்டு கிளம்பியது.

ரயில் வண்டி அடுத்த நிலையத்தில் நின்றது. 'ஆவ்' என்று கொட்டாவி யுடன் சோம்பல் முறித்துக்கொண்டே திரும்பிய வெங்கிட்டு திடுக்கிட்டான். அவன் கைகால்கள் சில்லிட்டன. நாக் கைப் புரட்ட முடியாத அளவுக்கு அவன் திகைத்துப் போயிருந்தான். சில விநாடிநேரத் திகைப்புக்குப் பிறகு அவன் மெதுவாக ரத்தினத்தின் பக்கம் திரும்பினன். மெல்ல அவனது தோளைத் தொட்டு, ரகசியமாக,



''டே, ரத்தினம், என் அப்பாவுடைய ஃபிரண்ட் அந்தக் கோபு மாமா அதோ அங்கே உட்கார்ந்து பேப்பர் படித்துக் கொண்டிருக்கிறார், பார்!'' என்று பின் பக்கத்து இருக்கையைக் காட்டினான்.

அவர்களுக்குப் பின்புறத்துப் பல கையில் ஓட்டலில் அவர்கள் கண்ட கோபு மாமா மொட்டுப் போல உட்கார்ந்து கொண்டிருந்தார். அவரது வாய் வெற்றிலையை மென்று கொண்டிருந்தது. கைகள் செய்தித் தாள் ஒன்றைப் பிடித்துக் கொண்டிருந்தது. கண்கள் பரபரவென்று அதில் ஓடிக் கொண்டிருந்தன.

''நான் சிவசாமியின் பிள்ளை என்று இவர் தெரிந்துகொள்ள நியாயமே இல்லை. ஏனெனில் இவர் ஓட்டலில் என்னைக் கவனித்தது மாதிரியே தெரியவில்லை. தவிர, அப்பாவும் என்னை அவருக்கு அறிமுகப்படுத்தவில்லை. எதற்கும் நாம் அடுத்த கம்பார்ட்மெண்டுக்குப் போய்விடுவதே நல்லது!'' என்றான் வெங்கிட்டு.

''அதுதாண்டா சரி!'' என்று ரத்தினம் அவனை ஆமோதித்தான்.


அவர்களது திட்டத்துக்கு ஏற்ற மாதிரி வண்டி சிலநொடிகளில் நின்றது. இருவரும் இறங்கி வேறொரு பெட்டிக்குள்ஏறி உட்கார்ந்துகொண்டார்கள். அதற்குப் பிறகு இருவரும் அப்பாடா என்று நிம்மதியாகப் பெருமூச்சு விட்டார்கள்.

...கடைசியில் ஒரு பெரிய குலுக்கலுடனும் கூவலுடனும் வண்டித்-தொடர் திண்டுக்கல்லில் நின்றது. வண்டி குலுங்கிய அதிர்ச்சியில் ரத்தினமும் வெங்கிட்டுவும் மோதிக் கொண்டார்கள். தலையைத் தடவிக்கொண்டே இருவரும் இறங்கினார்கள்.

இருப்புப் பாதை நிலையத்துக் கடிகாரம் எட்டரை மணி காட்டியது. நிலையத்துக்கு வெளியே நல்ல இருட்டு. வெளியே வந்ததும் இருவரும் கால் போனபடி நடந்தார்கள். மாலையில் சாப்பிட்ட சிற்றுண்டி நெஞ்சிலேயே இருந்தது. பயத்திலும் திகிலிலும் ஆழ்ந்து கிடந்ததால் சாப்பிட்ட பண்டங்கள் செரிக்கவில்லை. எனவே அன்றிரவு எதையும் வாங்கிச் சாப்பிட வேண்டாம் என்று இருவரும் முடிவு செய்தார்கள்....

கொஞ்சத் தொலைவு நடந்த பிறகு ஜன சந்தடியற்ற ஓரிடத்தில் ஒரு பெரிய ஆலமரம் தென்பட்டது. அதற்குப் பின்னால் இரண்டு சிமெண்ட் பெஞ்சுகள் இருந்தன. மரத்துக்குப் பின்னால் சென்று பார்த்த பிறகுதான் அவை தெரிந்தன. தெருவிலிருந்து பார்த்த போது அது அவர்களுக்குப் புலப்படவில்லை. இருவரும் அவற்றில் படுத்துக் கொண்டார்கள். படுத்த சிறிது நேரத்தில் ரத்தினம் கண்ணயர்ந்தான். வெங்கிட்டுவுக்குத் தூக்கம் வரவில்லை

வெங்கிட்டு புரண்டு படுத்தான். திடீரென்று ஏதோ பேச்சுக் குரல்கள் கேட்டன. காரணமே இல்லாமல் வெங்கிட்டுவுக்கு அச்சமாக இருந்தது. இன்னதென்று புரியாத திகிலுடன் அவன் சுற்றிலும் பார்த்தான். மரத்துக்கு அந்தப் பக்கத்தில் இரண்டு பேர் உயரமும் பருமனுமாய்—வந்து உட்கார்ந்தது தெரிந்தது. இரவின் அமைதியில் அவர்கள் குரல்கள் பெரிதாக ஒலித்தன. எட்டரை



மணிக்கு இருண்டு கிடந்த இடம் இப்போது வெளிச்சமாக இருந்தது. நல்ல நிலாக் காலம். தப்பித் தவறி அந்த இருவரும் மரத்துக்குப் பின்னால்

இருந்த தங்களைப் பார்த்து விடக் கூடாதே என்று வெங்கிட்டு பயந்தான்.

ஒருவன் நெருப்புப் பெட்டியை உரசி பீடி பற்ற வைத்துக் கொண்டான். பிறகு மற்றவனிடம் பேசினான். வெங்கிட்டு மெதுவாகத் தலையை அசைத்து வளைத்து அவனைப் பார்த்து வைத்துக் கொண்டான். முகத்தை நன்றாகப் பார்த்ததும் அவனுக்குத் திகைப்பு ஏற்பட்டது.

''நன்றாக ஞாபகம் வைத்துக்கொள் அண்ணே. இந்த ஊரிலே வடக்கு ரத வீதியில் இருபதாம் நம்பர் வீடு! நன்றாக நோட் பண்ணிக்கொள். கோபால ரத்தினம் வீடு அது. போய் நம் வேலைத்தனத்தைக் காட்டினால் குறைந்தது ஒரு லட்சமாவது கிடைக்கும். அந்த வீட்டை நாளையே போட்டோ பிடித்து நம் காளிக்கும் ஒரு காப்பி அனுப்பப் போகிறேன்... வருகிற அமாவாசை அன்று போகிறோம் அங்கே! இன்று என்ன கிழமை? ஞாயிறு... திங்கள், செவ்வாய், புதன், வியாழக்கிழமை அமாவாசை.'' அதற்கு அப்புறமும் கூட அவன் ஏதேதோ சொன்னான். ஆனால், எதுவும் வெங்கிட்டுவின் காதுகளில் விழவில்லை. 'இருபதாம் நம்பர் வீடு, வடக்கு ரத வீதி' என்று அவன் மனம் உருப்போட்டுக் கொண்டிருந்தது!

கொஞ்ச நேரத்தில் இரு ஆசாமிகளும் எழுந்து போனார்கள். வெங்கிட்டுவுக்கு ரொம்ப நேரம் வரையில் தூக்கமே வரவில்லை. கடைசியில் ஒரு வழியாகக் கண்ணயர்ந்தான்...

பொழுது விடிந்தது.


சரியான பதில்!

சிறுவன்: அம்மா, இந்த மாமா என்னைப் பார்த்து 'ஹௌ டு யு டு' என்கிறார்.

அம்மா: அதுக்கு நீ என்ன சொன்னே?

சிறுவன்: பதிலுக்கு நானும் 'டு' விட்டுட்டேன்.

-கீதா பஞ்சு



முந்திய இரவு நடந்ததையெல்லாம் அவன் ரத்தினத்துக்கு விவரமாகச் சொன்னான்.

பிறகு, ''ரத்தினம், நாம் ஒரு பெரிய திருட்டைத் தடுத்து நிறுத்தப் போகிறோம். டிபன் சாப்பிட்டு விட்டு நாம் முதலில் வடக்கு ரத வீதியில் இருக்கும் இருபதாம் நம்பர் வீட்டைக் கண்டு பிடிக்க வேண்டும். அந்த வீட்டுக்குச் சொந்தக்காரர் கோபாலரத்தினத்திடம் அந்தத் திருடர்களின் திட்டத்தைத் தெரிவிக்க வேண்டும். போலீசின் உதவியால் அவர் அவர்களைப் பிடித்து விடுவார். நமக்கும் ஏதாவது வெகுமதி கொடுப்பார்....''

இருவரும் வடக்கு ரத வீதியை அடைந்து, இருபதாம் இலக்கம் உள்ள வீட்டைக் கண்டு பிடித்து அதற்கு முன்னால் போய் நின்றார்கள். அந்தத் தெருவிலேயே அதுதான் மிகப் பெரிய வீடு. வீட்டு வாசலில் 'கே. கோபால ரத்தினம், எம்.ஏ., பி.எல், அட்வொகேட்' என்று எழுதப்பட்ட பலகை தொங்கியது. அந்த வீட்டின் சுற்றுச் சுவருக்குள் இரண்டு பையன்கள் 'ஷட்டில் காக்' விளையாடிக் கொண்டிருந்தார்கள். அவர்களும் ரத்தினம், வெங்கிட்டு இருவரின் வயதை ஒத்தவர்கள்.

ரத்தினம் தயங்கித் தயங்கிப் பின்னால் வர, வெங்கிட்டு மளமளவென்று உள்ளே நுழைந்தான். இருவரையும் பார்த்ததும், விளையாடிக் கொண்டிருந்த பையன்கள் விளையாட்டை நிறுத்தி விட்டு இவர்களை நோக்கி வந்தார்கள்.

''மிஸ்டர் கோபாலரத்தினம் இருக்கிறாரா? அவரை உடனே பார்க்க வேண்டும். மிகவும் அவசரம்!'' என்றான் வெங்கிட்டு.

''உள்ளே வந்து உட்காருங்கள். ஐந்து நிமிடத்தில் வந்து விடுவார்'' என்றபடியே இருவரையும் கூடத்துக்கு அவர்கள் அழைத்துச் சென்றார்கள்.

அவர்கள் இருவரும் கோபாலரத்தினத்தின் பிள்ளைகள் என்று இவர்கள் கேட்டுத் தெரிந்து கொண்டார்கள். ஒருவன் பெயர் ராஜன். இன்னொருவன் பெயர் சோமு.

இருவரையும் நாற்காலிகளில் உட்கார்த்திவிட்டு அவர்கள் உள்ளே போனார்கள்.

கொஞ்ச நேரம் கழித்து உள்ளே இருந்து ஒரு பெரியவர் அந்தக் கூடத்துக்கு வந்தார்.

அவரைப் பார்த்ததும் ரத்தினத்துக்கும் வெங்கிட்டுவுக்கும் சொல்லி

முடியாத திகில் விளைந்தது. இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்து அசட்டு விழி விழித்தார்கள். அவர்தான் வெங்கிட்டுவின் அப்பாவுடைய நண்பர். ஓட்டல் வாசலிலும் ரயிலிலும் பார்த்த அதே மனிதர்!

''என்ன விஷயமாக என்னைப் பார்க்க வந்தீர்கள்?'' என்று அவர் கேட்டதும் வெங்கிட்டு, ஒரு வழியாகச் சமாளித்துக்கொண்டு. ''ஒரு முக்கியமான விஷயம். ஆபத்தான விஷயமும் கூட! உங்கள் வீட்டில் வருகிற அமாவாசை இரவில் ஒரு பெரிய கொள்ளை நடக்கப் போகிறது... அது எப்படியோ எங்களுக்குத் தெரிய வந்தது. அதைச் சொல்லத்தான் வந்தோம், மாமா'' என்று வெங்கிட்டு சொல்லிவிட்டு நிறுத்தினான்.

கோபாலரத்தினம் நாற்காலியின் முன்னடிக்கு வந்தார். அவர் முகத்தில் திகில் விளைந்தது. ''என்ன! கொள்ளையா! என் வீட்டிலா! வருகிற அமாவாசையன்றா!'' என்றார்.

''ஆமாம், மாமா. நாங்கள் இருவரும் அண்ணன் தம்பிகள். என் பெயர் ஜெயராமன், என் தம்பி—இவன் பெயர் கோதண்டம். எங்களுக்குஅப்பா அம்மா இல்லை. மாமா வீட்டில் வளர்ந்தோம். மாமி ரொம்பக் கொடுமைப் படுத்தினாள். அதனால் ஊரை விட்டுக் கிளம்பி இங்கு வந்து விட்டோம்.... நேற்றுத்தான் இந்த ஊருக்கு வந்தோம்....'' என்று தொடங்கிய வெங்கிட்டு இரவு நடந்ததைச் சொன்னான்.

கோபாலரத்தினம் திகைத்துப்போய் உட்கார்ந்திருந்தார்.

வெங்கிட்டு மேலும் சொன்னான்: ''தவிர, உங்களுடைய வீட்டை போட்டோ வேறு எடுத்து யாரோ காளி என்பவனுக்கு அனுப்பப் போகிறார்களாம். அவர்களுடைய கூட்டாளி போல் இருக்கிறது. அநேகமாகப் போட்டோ எடுக்க இன்று வருவார்கள் என்று நினைக்கிறேன்!''

''ஜெயராமா, உனக்கும் உன் தம்பி கோதண்டத்துக்கும் நான் எப்படி எனது நன்றியைச் சொல்லப் போகிறேன்? என்ன கைம்மாறு செய்யப்போகிறேன்?'' என்று கோபாலரத்தினம் உணர்ச்சியுடன் சொன்னார்.

'ஜெயராமன்' வெட்கப்பட்டுத் தலையைக் குனிந்து கொண்டான்.


''உங்களுக்கு அப்பா அம்மா இல்லையாதலால் கொஞ்ச நாட்களாவது இங்கு என் வீட்டிலேயே இருங்கள். அப்புறம் உங்களுக்கு ஒரு வழி யோசிக்கிறேன்'' என்று கோபாலரத்தினம் சொன்னார். வெங்கிட்டுவுக்கும் ரத்தினத்துக்கும் தலை கால் தெரியாத மகிழ்ச்சி ஏற்பட்டது. சினிமாவில் வருவது மாதிரி அசலாக நடக்குமா என்று இருவரும் திகைத்தார்கள்.

பிறகு, தம் பிள்ளைகளை அழைத்து ஜெயராமனையும் கோதண்டத்தையும் அவர்களுக்கு அறிமுகப்படுத்தி வைத்-தார். அவர்களுக்கும் எல்லாவற்றையும் சொல்லி வைத்தார். வெளியார் யாருக்கும் அது பற்றித் தெரியக்கூடாது என்று எச்சரித்தார்.

''மாமா, அந்தத் தடியன்கள் உங்கள் வீட்டைப் புகைப்படம் எடுக்க வருவார்களே, அப்போது போலீஸை வைத்து அவர்களைப் பிடித்துவிட்டால் என்ன?'' என்று 'கோதண்டம்' என்ற ரத்தினம் ஆவலுடன் கேட்டான்.

வெங்கிட்டு சிரித்தான். ''போடா முந்திரிக் கொட்டை. அப்படிச் செய்தால் காரியமே கெட்டுப் போகும். அவர்கள் கும்பலாகத் திருடுகிற சமயத்தில்தான் பிடிக்க வேண்டும். முன் கூட்டிப் போலீசுக்குத் தகவல் சொல்லி விட வேண்டும். அமாவாசைக்கு முதல் நாளே சில போலீஸ்காரர்களை இங்கே கூட்டி வந்து தயாராக நிறுத்திவிட வேண்டும். போட்டோ எடுக்கும் போது ஒருவனையோ அல்லது இருவரையோதானே பிடிக்க முடியும்?'' என்று 'ஜெயராமன்' என்ற வெங்கிட்டு சொன்னான்.

''நீ சொல்வதுதான் சரி, ஜெயராமா!'' என்று கோபாலரத்தினம்கூறிப் பாராட்டினார்...



கம்பத்தில் என்ன?

முதல் நாய்: ஏன் அந்தக் கம்பத்தின் மீது தாவித் தாவிக் குதிக்கிறாய்?

இரண்டாவது நாய்: அதோ மேலே பார் இரண்டு எலும்புத் துண்டு தெரியல்லே! அதைக் கடிக்கத்தான்.

-ஜி. குமரேசன்

பிறகு இருவரையும் குளிக்கச்சொல்லி அவர் மாற்றுடைகள் தந்தார். சாப்பிடச் சொன்னார்....

பிற்பகல். ரத்தினம் தூங்கிக்கொண்டிருந்தான். கோபாலரத்தினம் காவல் நிலையத்துக்குப் போயிருந்தார். ராஜனும் சோமுவும் கூடத் தூங்கிக்கொண்டிருந்தார்கள். ஜெயராமன் மெதுவாக வாசற் பக்கம் வந்து நின்றான். வாசற் கதவைத் தாண்டித் தெரு விளக்குக் கம்பத்துக்குப் பக்கத்தில் போய் நின்று கொண்டான். கொஞ்ச நேரம் ஆனதும், திடீரென்று ஒரு சைக்கிள் கோபாலரத்தினத்தின் வீட்டுப் பக்கத்தில் வந்து நின்றது. சைக்கிளிலிருந்து இறங்கிய மனிதன் சுற்று முற்றும் பார்த்தான். வெங்கிட்டு மறைந்து நின்று கவனித்தான்.

வந்தவன் வேக வேகமாக அந்த வீட்டைப் புகைப்படம் பிடித்தான். பிடித்ததும் சைக்கிளில் திரும்பிவிட்டான்.

சிறிது நேரம் சென்றதும் கோபாலரத்தினம் திரும்பி வந்தார். அவரிடம் வெங்கிட்டு நடந்ததைச் சொன்னான்.

''அமாவாசைக்கு முந்தின நாளே, அதாவது புதன் கிழமை மாலை ஆறரை மணிக்கெல்லாம் வெற்றுடையணிந்த போலீஸ்காரர்கள் தக்க ஆயுதங்களுடன் நம் வீட்டுக்கு வந்து விடுவார்கள். அதற்கான ஏற்பாடுகளையெல்லாம் பண்ணி விட்டுத்தான் வருகிறேன்'' என்று அவரும் தெரிவித்தார்.

ராஜனுக்கும் சோமுவுக்கும் இன்னும் பள்ளிக்கூடம் திறக்கவில்லையாதலால் நால்வரும் நன்றாகச் சுற்றினார்கள். சினிமாவுக்குப் போனார்கள். நாடகம் பார்த்தார்கள். ஓட்டலுக்கெல்லாம் போய் வாய்க்கு ருசியாகச் சாப்பிட்டார்கள்.

கிருஷ்ணன் எங்கே?

யசோதை: கிருஷ்ணன் எங்கே காணோம்

தோழி: ''கோகுலம்'' படிச்சுட்டு வரேன்னு பூலோகத்துக்குப் போயிருக்கிறார்.

-எஸ். ஜெயஸ்ரீ



ஆயினும், இடையிடையே வெங்கிட்டுவுக்கும் ரத்தினத்துக்கும் ஊரின் நினைவும் அப்பா அம்மா பற்றிய ஞாபகங்களும் வந்து கொண்டுதான் இருந்தன.

அமாவாசைக்கு இன்னும் ஒரு நாள் இருந்தது. அன்றிரவே கோபாலரத்தினம் ஓசைப்படாமல் பதினைந்து காவலர்களை வரவழைத்து விட்டார். அன்று ஏதும் நிகழவில்லை.

அமாவாசையன்று மாலை ஆறரை மணிக்கு போலீஸ் இன்ஸ்பெக்டரும் சாதாரண உடையில் வந்து சேர்ந்தார்.

பரபரப்பாலும், திகிலாலும் வெங்கிட்டு, ரத்தினம், ராஜன், சோமு ஆகிய நால்வருக்கும் அன்று இரவு தூக்கமே வரவில்லை. எல்லாரும் மாடி அறையில் தான் படுத்துக் கொண்டிருந்தார்கள். கடிகாரத்தில் பத்து, பதினொன்று என்று மணி அடித்ததை எண்ணிக் கொண்டிருந்தார்கள். இவர்கள் படுத்துக் கொண்டிருந்த பக்கத்து அறையில் ஏழு காவலர்களும், கீழே இருந்த அறை ஒன்றில் எட்டுக் காவலர்களும் இன்ஸ்பெக்டருமாகக் காத்திருந்தனர்.

கூடத்துச் சுவர்க் கடிகாரம் பன்னிரண்டு தரம் அடித்து ஓய்ந்தது. எல்லாருமே உஷாரானார்கள். வெங்கிட்டு மெல்ல எழுந்தான்; மெதுவாக நடந்தான்; அறையின் ஜன்னலுக்கு அருகில் போய் நின்றான்; வெளியே எட்டிப் பார்த்தான். மொட்டை மாடியில் காலடிச் சத்தம் கேட்டது. இந்தச் செய்தியை நண்பர்களுக்குத் தெரிவித்தான். பக்கத்து அறைக்கோ அல்லது கீழ்அறைக்கோ போய்ச் சேதியைத் தெரிவித்தாகவேண்டுமே? யார் போய்ச் சொல்வது? வெங்கிட்டுவே போய்ச் சொல்வது என்று முடிவு செய்தார்கள். இரண்டு பேர் போனால் காலடிச் சத்தம் .இருடர்களுக்குக் கேட்டுவிடக் கூடுமே! அதனால்தான்.

வெங்கிட்டு அறையை விட்டு வெளியில் வந்தான். கதவை மற்றவர்கள் சாத்திக் கொண்டார்கள். அவன் பக்கத்து அறைக்குச் செல்லத் திரும்பிய போது அவன் வாயை ஒரு கை இறுக்கமாய்ப் பொத்தியது. வெங்கிட்டு ஐஸ் மாதிரி ஜில்லென்று போனான். கீழே இருந்து வந்த மங்கலான விடிவிளக்கின் வெளிச்சத்தில் வெங்கிட்டு கண்களைப் பிதுக்கிக் கொண்டு அந்த ஆளைப் பார்த்தான். வீட்டைப் புகைப்படம் எடுத்த மனிதன்தான்!

வெங்கிட்டுவால் தன் இதயத் துடிப்பைக் கேட்க முடிந்தது. இதயம் காதுக்குத் தாவி வந்து விட்டதுபோல் உணர்ந்தான்.

''டேலேய்! சத்தம் போட்டியோ கொன்றுவிடுவேன், கொன்று!'' என்று அவன் காதருகே மூணு மூணுப்பாக அவன் உறுமினன். மற்றொரு கையால் கத்தியை எடுத்துக் காட்டினன். மங்கிய வெளிச்சத்திலும் அந்தக் கத்தி பளபளத்தது.

வெங்கிட்டு பரிதாபமாக விழித்தான். தான் செய்யக் கூடியது எதுவும் இல்லை என்ற எண்ணத்தில் அவனை ஏமாற்றம் பற்றிக் கொண்டது. அழுகை வரும் போல் ஆயிற்று. இதற்குள் மொட்டை மாடியிலிருந்து ஏழு பேர் இறங்கி வந்து பக்கத்தில் கூடினர்கள். தடியன்களாய் வந்து நின்ற அவர்களைப் பார்த்ததும் வெங்கிட்டுவின் இதயத் துடிப்பு அதிகரித்தது. நெற்றியில் வேர்வை துளிர்த்தது.

''பணப் பெட்டி இருக்கும் இடத்தைச் சொல்லு. சொன்னல் உன்னைக் கொல்லாமல் விட்டு விடுவோம்'' என்ருன், அவன் வாயைப்பொத்திக் கொண்டிருந்தவன். பிறகு வாயைப் பொத்தியிருந்த கையை நீக்கிவிட்டு அவன் கன்னத்துக்கு அருகே கத்தியைக் காட்டினன்.

வெங்கிட்டு திடீரென்று உதித்த யோசனையில், ''அதோ அந்த அறையில்தான் எல்லாம் இருக்கிறது!'' என்று பக்கத்து அறையைக் காட்டினன். எல்லாரும் போலீஸ்காரர்கள் தயாராய்க் காத்துக் கொண்டிருந்த அறைக்குள் புகுந்தார்கள். அதுதான் நேரமென்று வெங்கிட்டு தடதடவென்று கீழே இறங்கினன். கீழ் அறையில் காத்துக் கொண்டிருந்தவர்களிடம் சேதியைத் தெரிவிக்கத்தான்...


சிறிது நேரத்தில் அந்தத் திருட்டுக் கூட்டத்தைப் போலீஸார் வளைத்துப் பிடித்தார்கள், அவர்கள் கைகளிலே விலங்குகளை மாட்டினர்கள்.

'ஜெயராம'னின் முன்னெச்சரிக்கையால் தம் வீட்டில் கொள்ளை நடக்கவில்லை என்பதில் கோபாலரத்தினத்துக்குச் சொல்லி முடியாத மகிழ்ச்சி. ஒரு திருடர் கூட்டம் தம்மிடம் சிக்கியதைப் பற்றி போலீஸ் இன்ஸ்பெக்டருக்கு மகிழ்ச்சி.

இன்ஸ்பெக்டருக்கு உடனே ஒரு யோசனை தோன்றியது. 'ஜெயராம'னின் ஒத்தாசையால்தான் அந்தத் திருடர் கும்பலைப் பிடிக்க முடிந்தது என்பதால் அவனது புகைப்படத்தைப் பத்திரிகை ஒன்றில் வெளியிட வேண்டும் என்ற யோசனைதான்! எனவே மறுநாள் காலையில் புகைப்படக்காரரை அனுப்பி அவனைப் படம் எடுக்கப் போவது பற்றி அங்கேயே அறிவித்தார். தமது எண்ணத்தையும் வெளியிட்டார். தனது படம் நாளிதழில் வரும் என்ற எண்ணமே வெங்கிட்டுவுக்குப் பரபரப்பைத் தந்தது. ஆனல், தன் அப்பாவின் கண்களில் அந்தப் படம் பட்டுவிடுமே என்பதை நினைத்தபோதோ வயிற்றைக் கலக்கியது.

''அதெல்லாம் வேண்டாம் சார்!'' என்று அவன் அவசரமாகக் குறுக்கிட்டான்.

இன்ஸ்பெக்டர் வாய்க்குள் சிரித்துக் கொண்டார். பிறகு அவன் கன்னத்தில் லேசாகத் தட்டி, ''எவ்வளவு அடக்கம் இந்தப் பயலுக்கு! இதற்காகவே உன் படத்தை 'தின ஒலி'யில் போடப் போகிறேன்'' என்று சிரித்தார். ''அதுமட்டுமில்லை, உனக்கு ஐந்நூறு ரூபாய், ரொக்கப் பரிசும் கிடைக்க ஏற்பாடு செய்வேன்!'' என்ருர்.



ரத்தினத்துக்கும் வெங்கிட்டுவுக்கு ஏற்பட்ட அதே அச்சம்தான் ஏற்பட்டது. அவன் கலவரமடைந்தான். வெங்கிட்டுவைப் பார்த்து அசட்டு விழி விழித்தான். அப்பாவின் கையில் மாட்டிக்கொண்டு அடி உதை வாங்கும் நாள் அதிகத் தொலைவில் இல்லை என்று அவனுக்குப் பட்டது. தேர்வில் தோற்றதற்கு மட்டுமில்லாமல் ஓடிப்போனதற்கும் சேர்ந்து அடி விழும் என்று நினைத்தான். இதனால் அவனது அச்சம் மேலும் அதிகமாயிற்று.

ஆனால், வெங்கிட்டுவின் மனமோ பரபரவென்று யோசனை செய்துகொண்டிருந்தது. பத்திரிகையில் படம் வெளிவந்தாலும் கூட, அதிலிருந்து தப்புவது எப்படி என்பது பற்றி யோசனையில் ஆழ்ந்தான்.

பிள்ளையைக் காணாத ஏக்கத்திலும் வருத்தத்திலும் அலமேலுவின் உடல் மிகவும் மெலிந்து போய்விட்டிருந்தது.

வெங்கிட்டுவின் வீம்புக்கார அப்பா சிவசாமிக்குக்கூட அவனது பிரிவு தாங்க முடியாததாக இருந்தது. வீட்டில் இருந்த ஒவ்வொரு பொருளும் அவருக்கு அவனையே ஞாபகப்படுத்தியது.

திடீரென்று வெங்கிட்டு ஏன் காணாமல் போக வேண்டும் என்று அவருக்குப் புரியவே இல்லை. 'ஒருவேளை ஓட்டலில் தன்னைப் பார்த்து விட்டதால் வீட்டுக்கு வந்ததும் அடிப்பேன் என்ற பயமோ? அப்படித்தான் இருக்க வேண்டும். அடிக்கும் வசவுக்கும் என்னதான் பயம் என்றாலும் அதற்காக வீட்டை விட்டே ஓடிப்போய்விட வேண்டுமா என்ன?.....' என்றெல்லாம் எண்ணி வருத்தமடைந்தார் அவர்.

....சமையலறையிலிருந்து வெளியே வந்த அலமேலு கூடத்தில் உட்கார்ந்து கொண்டிருந்த கணவரிடம் வந்தாள். மார்பின் குறுக்காகக் கையைக் கட்டியபடி அவர் சும்மா உட்கார்ந்து கொண்டிருந்தார். ஆனால், உண்மையில் அவர் சும்மா உட்கார்ந்து கொண்டிருக்கவில்லை. தன்னைப் போலவே அவரும் வெங்கிட்டுவை எண்ணி ஏங்கிக்கொண்டுதான் இருக்கிறார் என்பது அவளுக்குப் புரிந்தது.

''போலீசில் இருந்து ஏதேனும் தகவல் கிடைத்ததா?'' என்று அவள் கேட்டதும் அவர் தலையைத் தூக்கி அவளைப் பார்த்தார்.

''தெரியவில்லை. நேற்றுக்கூட இன்ஸ்பெக்டரைப் பார்த்தேன். ஒன்றும் தெரியவில்லையாம்.'' என்று பதில் கூறிவிட்டு அவர் கண்களைத் துடைத்துக் கொண்டார்.

''பேப்பரில் படம் போட்டு அறிவித்தால் என்ன?'' என்று அலமேலு கேட்டாள்.

''நானே இப்போது அப்படித்தான் ஒரு முடிவுக்கு வந்தேன். உன்னிடம் சொல்ல நினைத்தேன். நீயே கேட்டுவிட்டாய். அதுதான் நல்ல வழி என்று தோன்றுகிறது.... அது சரி. அவனுடைய போட்டோ ஒன்று இருந்ததே அதைக் கொண்டு வா!'' என்றார்.

அலமேலு, ''அது அவனிடம்தான் இருந்தது. நேற்றே அவன் அலமாரியில் எல்லாம் தேடிப் பார்த்து விட்டேன். கிடைக்கவில்லை. ஆனால், ரத்தினம் வீட்டுக் கல்யாணத்தில் அவனும் ரத்தினமும் சேர்ந்து எடுத்துக் கொண்ட படம்தான் இருக்கிறது. கொண்டு வரட்டுமா?'' என்று கேட்டாள்.

''அப்படியானால் இன்னும் நல்லதாய்ப் போயிற்று. இரண்டு பையன்களுக்கும் சேர்ந்து ஒரே விளம்பரமாய்க் கொடுத்து விடலாம். அதுதான் இன்னும் சொல்லப்போனால் மிக நல்ல வழி. சேர்ந்து காணாமல் போன இருவரும் சேர்ந்துதானே இருந்து கொண்டிருப்பார்கள்? அதைக் கொண்டு வா. நான் ரத்தினத்தின் அப்பாவையும் பார்த்து எதற்கும் ஒரு வார்த்தை சொல்லிவிட்டு வருகிறேன்...'' என்று அவர் சற்றுத் தெம்புடன் எழுந்தார்.

அலமேலுவும் உள்ளே சென்றாள். அந்தப் புகைப்படத்தை எடுத்து வந்து கொடுத்தாள். புகைப்படத்துடன் சிவசாமி ரத்தினத்தின் அப்பாவைப் பார்த்து வர உடனே கிளம்பினார்.



...ரத்தினத்தின் வீட்டை அவர் அடைந்தபோது அவன் அப்பா ராமசாமி வீட்டில் இருந்தார். அவர்கள் வீடும் தம் வீட்டைப் போலவே துயரம் நிறைந்த சூழ்நிலையில் இருப்பதைப் பார்த்தார்.

''என்ன சார்! ஏதேனும் தெரிய வந்ததா?'' என்று ராமசாமி கேட்டார். காலையில் அவர் வந்ததில் ஏதேனும் நல்ல செய்தி இருக்க வேண்டும் என்று அவர் நம்பினார். சிவசாமி விஷயத்தைச் சொன்னதும் அவருக்குக் கொஞ்சம் சப்பென்று இருந்தது. இருந்தபோதிலும், அது நல்ல யோசனை என்பதால் அதை உடனே ஏற்றுக் கொண்டார்.

அவர்கள் இருவரும் அதைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தபோது ரத்தினத்தின் அம்மா அங்கே வந்தாள். சிவசாமியைப் பார்த்ததும் 'ஓ'வென்று அழத் தொடங்கினாள். அலமேலு மாதிரியே அவளும் தன் கணவரை சிவசாமியிடம் குறை கூறினாள்.

''குழந்தைகளை அடிப்பதற்கும் ஓர் அளவு வைத்துக் கொள்ள வேண்டும். நீங்கள் அன்று இரண்டு பேரையும் ஓட்டலில் பார்த்தது பற்றி இவரிடம் சொல்லுவீர்கள் என்ற பயத்தால்தான் ரத்தினம் ஓடியிருப்பான்என்றுஎனக்குத் தோன்றவில்லை. வேறு ஏதோ காரணம் இருக்க வேண்டும்... ஒருவேளை பிள்ளை பிடிக்கிறவன் எவனாவது இவர்களைப் பிடித்துக் கொண்டு போயிருப்பானோ!'' என்று ரத்தினத்தின் அம்மா அரற்றினாள். கடைசி வாக்கியத்தைச் சொன்னபோது அவளது குரல் குளறிவிட்டது. கண்களில் கண்ணீர் பீறிட்டது.

கடைசியில் புகழ் பெற்ற ஒரு பத்திரிகையில் இருவருடைய புகைப் படங்களையும் வெளியிடச் செய்து, அதன் கீழே அவர்களைக் கண்டுபிடித்துக் கொடுப்பவர்களுக்கு ரூபாய் ஆயிரம் வெகுமதி அளிக்கப்படும் என்றும் அறிவிக்க முடிவு செய்தார்கள்.

இதற்குள் பக்கத்து வீட்டு மணி, கையிலே ஒரு பத்திரிகையுடன் ஓடிவந்தான். ''மாமா, இதோ உங்கள் வெங்கிட்டுவின் படம்!'' என்று சிவசாமியிடம் பத்திரிகையை நீட்டினான்.

உடனே ஆவலாக அந்தப் பத்திரிகையை வாங்கினார் சிவசாமி. மற்றவர்களும் சுற்றி நின்று பார்த்தார்கள்.

''ஆம், இது வெங்கிட்டுவின் படம்தான்!'' என்றார் ராமசாமி.

அதற்குள்'ரத்தினம் என்ன ஆனானோ?' என்று கவலைப்பட்டாள் ரத்தினத்தின் அம்மா.

''இது வெங்கிட்டுவின் படம்தான். சந்தேகமில்லை. ஆனால், கீழே 'ஜெயராமன்' என்று போட்டிருக்கிறதே!'' என்று வியப்புடன் அந்த விளம்பரத்தைப் படித்தார்.

''அட, என் நண்பன் திண்டுக்கல் கோபால ரத்தினம் வீட்டிலே திருட்டு நடக்க இருந்ததாம். இவன் முன்கூட்டியே அச்செய்தியை கோபால ரத்தினத்துக்கு அறிவித்து அந்தத் திருட்டுக் கும்பலையே பிடித்துக் கொடுத்து விட்டானாம்! போலீஸார் இவன் திறமையைப் பாராட்டி ரூபாய் ஐந்நூறு வெகுமதி கொடுத்திருக்கிறார்களாம்.''



அவரை மட்டும் விடுவதா?

சைக்கிள் பையன்: ஏன் சார் என்னைப் பிடிச்சீங்க?

போலீஸ்காரர்: உனக்கு அறிவில்லை? இரவில் விளக்கு இல்லாமல் சைக்கிள் ஓட்டலாமா? இது குற்றமில்லையா?

சைக்கிள் பையன்: சைக்கிளிலே விளக்கு இல்லாமல் போனது குற்றம் என்கிறீர்கள். அதோ அந்த ஆள் சைக்கிளே இல்லாமல்போகிறாரே, அவரை ஏன் பிடிக்கல்லே?

- பா. ராம்குமார்

''சந்தேகமே இல்லை. இவன் உங்கள் பையன்தான். உடனே புறப்படுங்கள். ரத்தினத்தின் அப்பாவையும் கூடவே அழைத்துப் போங்கள். ரத்தினமும் அவன் கூடவேதான் இருப்பான்'' என்று யோசனை கூறினாள் ரத்தினத்தின் அம்மா.

அன்றே சிவசாமியும் ராமசாமியும் திண்டுக்கல்லுக்குப் புறப்பட்டனர்.

''டேய், ரத்தினம், இன்றைய 'தின ஒலை' நம் ஊருக்கும் போயிருக்கும். என் அப்பா, உன் அப்பா எல்லாரும் என் படத்தைப் பார்த்திருப்பார்கள். உடனே இங்கு ஓடிவருவார்கள். வீட்டுக்கு இழுத்துச் சென்று நன்றாக உதைப்பார்கள். இனியும் இங்கு இருக்கக் கூடாது'' என்றான் வெங்கிட்டு. ''மறுபடியும் நாம் ஓடிப்போய்த்தான் ஆக வேண்டும். நல்ல வேளை, இன்ஸ்பெக்டர் கொடுத்த பரிசில், என் செலவுக்கென்று கோபால ரத்தினம் மாமா ஐம்பது ரூபாய் கொடுத்தார். அது கையில் இருக்கிறது.''

''மீதி நானூற்றைம்பதை அவர் வைத்துக் கொண்டிருக்கிறாரேடா? அது இனிமேல் நம் கைக்கு வராதா?''

''வராதுதான். என்ன செய்வது? நாம் சின்னப் பிள்ளைகள் என்பதால் முழுத் தொகையையும் நம்மிடம் தராமல் அவரே வைத்துக் கொண்டிருக்கிறார். தொலையட்டும். ஏதோ ஐம்பது ரூபாயாவது கொடுத்தாரே! அது மட்டும் நல்லதுதான்.''

இப்படியெல்லாம் தங்களுக்குள் பேசிக் கொண்டு இருவரும் ஓடிப் போகத் திட்டம் தீட்டினார்கள்.

கோபாலரத்தினம் மாமா காட்டிய அன்பை நினைத்தபோது, இப்படிச் சொல்லிக் கொள்ளாமல் ஓடுவது மனசைக் குத்தியது. இருந்தாலும் வேறு வழி இல்லாததால் உடனேயே இருவரும் ஓசைப்படாமல் புறப்பட்டனர். சோமு, ராஜன் ஆகியோரைப் பிரிய நேர்ந்ததும் மனத்தை வருத்தியது.

சந்தை இரைச்சலுடன் காணப்பட்ட இருப்புப் பாதை நிலையத்தை அடைந்து கோடைக்கானல் ரோடுக்குப் பயணச் சீட்டுக்கள் வாங்கிக் கொண்டார்கள். அங்கிருந்து கொடைக்கானல் மலைக்குப் போக எண்ணினார்கள். வெகு நாட்களாக இருவருக்குமே கோடைக் கானல் மலைக்குப் போகும் ஆசை இருந்தது. அந்த ஆசை நிறைவேறப் போவதில் தங்களுடைய வருத்தத்தைக் கொஞ்சம் மறந்தனர்.

... வண்டித் தொடர் கொடைக்கானல் ரோடு இருப்புப் பாதை நிலையத்தில் நின்றது. இருவரும் இறங்கினார்கள். பரிசோதகரிடம் பயணச் சீட்டைக் கொடுத்துவிட்டு வெளியே வந்தார்கள். அருகில் இருந்த தெருக் குழாயில் பல் துலக்கினார்கள்.

பிறகு கொஞ்சத் தொலைவு நடந்தார்கள். ஓர் ஓட்டலுக்குள் நுழைந்தார்கள். அன்று ஓட்டலில் சாப்பிட்டுவிட்டு வெளியே வந்தபோதுதான் மாட்டிக் கொண்டோம் என்ற நினைப்பு இருவருக்குமே ஒரே நேரத்தில் வந்தது. தொடர்ந்தாற் போல நடைபெற்ற எல்லாமே நினைவில் தோன்றின.

வயிறாரச் சாப்பிட்டுவிட்டு நிமிர்ந்த வெங்கிட்டுவின் பார்வையில் சற்றுத் தள்ளி உட்கார்ந்திருந்த சுப்புணி தென்பட்டான். தாங்கள் பரீட்சையில் தவறியதை அவன்தான் தெரிவித்தான் என்பதால் அவனுக்கு உதறத் தொடங்கியது. அவன் கலவரமடைந்து மெதுவாக ரத்தினத்தைக் கிள்ளி அவன் பக்கம் காட்டினான். இதற்குள் தலையை உயர்த்திவிட்ட சுப்புணி இருவரையும் கவனித்து விட்டான். வியப்புடன் எழுந்த அவனைப் பார்த்ததும் வெங்கிட்டு அவசரமாக எழுந்து ரத்தினத்துக்குச் சாடை காட்டினான். இருவரும் ஓட்டலிலிருந்து விரைவாக வெளியேறி ஓடத் தொடங்கினார்கள். சுப்புணியும் அவர்களுக்குப் பின்னால் ஓடத் தொடங்கினான்.



மூன்று பேரும் சாப்பிட்டு விட்டுப் பணம் கொடுக்காமல் ஏமாற்ற ஓடுவதாக ஓட்டல் முதலாளி நினைத்தார். உடனே ஓட்டல் சிப்பந்திகளில் இருவரைக் கூப்பிட்டு அவர்களைப் பிடித்துக்

கொண்டு வரும்படி பணித்தார். ஓட்டப் பந்தயம் ஒன்று அங்கே தொடங்கிற்று.

கோபாலரத்தினம் பிற்பகல் ஒரு மணி அளவில் வீட்டுக்குச் சாப்பிட வந்தார். அவர் பிள்ளைகள் ராஜனும் சோமுவும் ஜெயராமனையும் கோதண்டத்தையும் ரொம்ப நேரமாகக் காணவில்லை என்று அவரிடம் தெரிவித்தனர். அவர்கள் போகக் கூடிய இடங்களில் தேடிப் பார்த்து விட்டதாகவும் சொன்னார்கள். இதைக் கேட்டு கோபாலரத்தினம் வியப்படைந்தார். ஒருவேளை பிடிபட்ட திருடர் கும்பலைச் சேர்ந்த மற்றவர்கள் பழிவாங்கும் எண்ணத்துடன் அவர்களைக் கடத்திக் கொண்டு போயிருப்பார்களோ என்று கவலையடைந்தார். அப்படித்தான் இருக்கும் என்று தோன்றியது. உடனே காவல் நிலையத்துக்குத் தொலை பேசியில் அறிவித்தார். இன்ஸ்பெக்டரும் கவலை தெரிவித்தார். தேட முயற்சிகள் எடுப்பதாக வாக்களித்தார்.

...மறு நாள் ஞாயிற்றுக் கிழமை. கோபாலரத்தினம் ஓய்வாகத் தம் அறையில் உட்கார்ந்திருந்தார். காணாமல் போன பிள்ளைகளைப் பற்றிக் கவலைப் பட்டுக் கொண்டிருந்தார். அப்போது அவர் வீட்டு வாசலில் ஒரு குதிரை வண்டி வந்து நின்றது. அதிலிருந்து இறங்கிய சிவசாமியைப் பார்த்தார். கூடவே ராமசாமியும் இருந்தார். ஆவலுடன் வாசலுக்கு வந்து வரவேற்றார். பிறகு உள்ளே கூட்டிக் கொண்டு போனார்.

''நேற்றைய பேப்பரில் நாங்கள் ஒரு செய்தி பார்த்தோம்'' என்று ஆரம்பித்தார் சிவசாமி.

''என்ன செய்தி?''

அதன் பிறகு சிவசாமி எல்லா விவரங்களையும் அவருக்குச் சொன்னார். தாம் வைத்திருந்த 'தின ஒலி' பத்திரிகையை எடுத்து அவரிடம் காட்டவும் செய்தார்.

''இவன்தான் என்மகன் வெங்கிட்டு''

''வெங்கிட்டுவா இவன் பெயர்?''

''வேங்கடராமன் என்பது முழுப் பெயர். நாங்கள் வெங்கிட்டு என்று தான் கூப்பிடுவோம்.''

''அவனுடன் ஒரு பையன் வந்திருப்பானே? அவன் பெயர் ரத்தினம்'' என்றார் சிவசாமி.

கோபாலரத்தினத்துக்கு எல்லாம் ஒரு நொடியில் விளங்கி விட்டது. ''என் நண்பரின் மகன்தான் வெங்கிட்டு என்று தெரிந்தால் நான் உனக்குத் தக



நிற்கும் காரணம்?

ஆசிரியை: உங்க பையனை ஏ பி சி டி சொல்லச் சொன்னால் க்யூ வந்ததும் நின்று விடுகிறான். அப்புறம் பத்துத் தடவை கேட்டால்தான் மேலே போகிறான். ஏன் அப்படி?

தாயார்: ஹி... ஹி... அவனுக்கு பால் டிப்போ க்யூ, மண்ணெண்ணெய் க்யூ, சர்க்கரை க்யூ — இப்படி அடிக்கடி க்யூவிலே நின்னு பழக்கமாய்டுச்சு. அதான் க்யூ வந்ததும் நின்னுடுறான்.

-இரத்தின மனோகரன்

வல் கொடுத்து விடுவேன் என்ற பயத்தில்தான் அவன் தன் பெயரை மாற்றிச் சொல்லியிருக்கிறான். தன் நண்பனின் பெயரையும் மாற்றிச் சொல்லி யிருக்கிறான்'' என்று ஆரம்பித்து நடந்த கதை முழுவதையும் சிவசாமியிடம் சொன்னார். ''இன்று காலை பதினொன்றரை வரை கையருகே இருந்தவர்கள் இப்படி அநியாயமாய்ப் பறந்து விட்டார்களே!'' என்று கோபாலரத்தினம் வருத்தப்பட்டார். காவல் துறையினரிடம் தான் புகார் கொடுத்துள்ளது பற்றியும் தெரிவித்தவர் எப்படியும் கண்டு பிடித்து விடுவார்கள் என்றுஆறுதல் கூறினார்.

''சரி, நாங்களும் தேடிப் பார்க்கிறோம்'' என்று ஏமாற்றத்துடன் சிவசாமியும் ராமசாமியும் ஊர் திரும்பினர்.

வெங்கிட்டுவும்ரத்தினமும்சிட்டாய்ப் பறந்து கொண்டிருந்தார்கள். சுப்புணியும் சளைக்காமல் ஓடிக் கொண்டிருந்தான். அவர்களைத் துரத்திக்கொண்டு கொஞ்சத் தொலைவு வரை ஓடிவந்த ஓட்டல் சிப்பந்திகள் முடியாமல் நின்று விட்டார்கள். மூவரும் அவர்களின் பார்வையிலிருந்தே மறைந்துவிட்டதால் நம்பிக்கை இழந்தார்கள். மேலும் அவர்களால் விரைவாக ஓடவும் முடிய

வில்லை. பெரிய உடம்புகள். மூச்சு வாங்கிற்று. சோர்ந்து போய் முயற்சியைக் கைவிட்டுத்திரும்பிப் போனார்கள்.

கால் மணி நேரம் ஓடிய பிறகு எதிரில் வந்த இரண்டு லாரிகளால் அவர்களின் ஓட்டம் தடைப்பட்டது: தவிர ஒரு மாடு குறுக்கே வந்ததால் வெங்கிட்டுவும் ரத்தினமும்வேகத்தைக் குறைத்து ஒதுங்கவேண்டியதாயிற்று. அதைப்பயன்படுத்திக் கொண்டு சுப்புணி அவர்களை நெருங்கி விட்டான். மாடு மிரண்டு துரத்தியதில் பயந்து வெங்கிட்டுவும் ரத்தினமும் கீழே வேறு விழுந்து விட்டார்கள். இதற்குள் யாரோ மாட்டை விரட்டவே அது வேறு திசையில் ஓடிவிட்டது.

கீழே விழுந்த இருவரும் எழுவதற்குள் சுப்புணி அவர்களைப் பிடித்துவிட்டான். மிகவும் களைத்திருந்ததாலும், சிறிது காயம் வேறு பட்டுவிட்டதாலும் இருவரும் முழங்கால்களைப் பிடித்துக் கொண்டு நிதானமாக எழுந்தார்கள்.

அவர்களை ஓட விடாமல் அழுத்திப் பிடித்த சுப்புணியின் கண்கள் கண்ணீரில் மூழ்கின.

''டேய் வெங்கிட்டு, ரத்தினம், நீங்கள் என்னை மன்னித்து விடுங்கள். நான் விளையாட்டாகப் பொய்தான் சொன்னேன். நீங்கள் இருவரும் பாசாகி விட்டீர்கள். நான் விளையாட்டுக்குச் சொன்ன பொய் எப்படிப்பட்ட வினையாகி விட்டது! இங்கே நான் என் மாமா வீட்டுக்கு வந்திருக்கிறேன். நீங்கள் இருவரும் ஊரை விட்டு ஓடிப்போன செய்தி எனக்கும் தெரியும். நான் சொன்ன பொய்யை மெய் என்று நினைத்துத்தான் நீங்கள் ஓடி விட்டீர்கள் என்பதையும் புரிந்து கொண்டேன். ஆனால் நான் பயந்து கொண்டு இதைப் பற்றி இதுவரை யாரிடமும் சொல்லவே இல்லை. தயவுசெய்து என்னுடன் திரும்பி வாருங்கள். எல்லாரும் ஊருக்குப் போகலாம். உங்கள் இருவருடைய அப்பாக்களும் அம்மாக்களும் துடியாய்த் துடித்துக் கொண்டிருக்கிறார்கள். நீங்கள் திரும்பி வந்தாலே பெரிய காரியம் என்றுதான் நினைப்பார்கள். அடிக்க மாட்டார்கள்....'' என்று நீளமாய்ப் பேசிய சுப்புணி அழத் தொடங்கினான்.

''பரவாயில்லை சுப்புணி, அழாதே. இது எங்களுக்கும் ஒரு பாடம்தான். விளையாட்டுக்காகக் கூடப் பொய் சொல்லக் கூடாது என்பதை நாம் மூவருமே தெரிந்து கொண்டோம். இல்லையா? சொந்த அனுபவத்தின் மூலம் தெரிந்து கொண்ட பாடமாகையால் எப்போதும் மறக்க மாட்டோம். அப்படித்தானேடா?'' என்று வெங்கிட்டு அவனைச் சமாதானப்படுத்தினான்.

''எப்படியோ போகட்டும். நாங்கள் ஓடிப்போனதால் ஒரு பெரிய கொள்ளைக் காரக் கும்பலைப் பிடிக்க முடிந்தது!'' என்றான் ரத்தினம்.

சுப்புணி கண்ணைத் துடைத்துக் கொண்டான்.

அன்றே மூவரும் ஊருக்குப் புறப்பட்டார்கள்!

அந்தச் சமயமே சுப்புணியின் மாமா அவனது வேண்டுகோளின்படி கோபால ரத்தினத்துக்கும் சிவசாமிக்கும் தனித் தனியாக இரு தந்திகள் அடித்து அவர்களின் வரவைத் தெரிவித்தார்.



அதுதான் எனக்குத் தெரியுமே!

தமிழ் மொழியில் எத்தனை எழுத்துக்கள் என்று கேட்டால் உடனே நீங்கள் ''அதுதான் தெரியுமே! 247 எழுத்துக்கள்'' என்பீர்கள்.

அதே போல ஆங்கிலத்தில் எத்தனை எழுத்துக்கள் என்றாலும், சட்டென 26 எழுத்துக்கள் என்பீர்கள்.

மேலும் சிலமொழிகளைக் கூறி எத்தனை எழுத்துக்கள் என்றால், 'அதுதான் தெரியுமே!'' என்று உங்களால் சொல்ல முடியுமா?

தெரிந்து கொள்ளுங்கள்:

சீனம்	214	எழுத்துக்கள்
பாரசீகம்	31	''
அரபு	28	''
ஸ்பானிஷ்	27	''
ஜெர்மன்	26	''
பிரான்ஸ்	26	''
கிரேக்கம்	24	''
துருக்கி	26	''
லத்தின்	22	''
இத்தாலி	20	''

-பால நடராஜன்



குரங்காரே வாங்க!

அழகு பழனிச்சாமி



குரங்....காரே! குரங்...காரே!
''குட்மார் னிங்!'' சார்! — நீங்க

குந்தியிருக்கும் மரத்தை விட்டுக்
கீழே வாங்க சார்!

மரத்தில் ஏறிக் கிளைகள் தோறும்
தொங்கா தீங்க, சார்!—கொஞ்சம்

இறங்கிக் கீழே வீதி வழியில்
நடந்து வாங்க சார்!

நீண்ட வாலை அப்படி இப்படி
ஆட்டா தீங்க சார்! — அதை

நீக்கி விட்டுப் பார்த்தால் மிகவும்
அழகாய் இருக்கும் சார்!

வேண்டும் முன்னே நிசார்,சட்டை
தந்திடுவேன் சார்! — அதை

விரும்பி நீங்கள் போட்டுக் கொண்டால்
ஜோரா யிருக்கும் சார்!

நண்ப னுகப் பள்ளிக் கூடம்
அழைத்துச் செல்வேன் சார்!—என்

நண்ப ரெல்லாம் உங்களைப் பார்த்து
'சல்யூட்' அடிப்பார் சார்!


கொண்டாட் டமாய் நம்மைச் சுற்றிக்
கூட்டம் கூடும் சார்! — உங்க

குறும்புத் தனத்தை மட்டும் மூட்டை
கட்டி வைக்கணும் சார்!

கோகுலம் சிறுவர் சங்க உறுப்பினர் பட்டியல்

உறுப்பினர் எண், பெயர், முகவரி

1. எஸ். எஸ். ராமன், 15, நாதமுனி நாயுடு தெரு, சென்னை-30
2. என். தயான்குமார், 6, மின்ட் சுப்பராயலு நாயுடு தெரு, சென்னை-21
3. சு. ஜோதிலட்சுமி, 3/28, பிள்ளையார் கோவில் தெரு, சென்னை-74
4. ஏ. கண்ணன், 18, சௌராஷ்டிரா நகர், 4வது தெரு, சென்னை-94
5. எஸ். சங்கர், 27, ராக்கியப்ப முதலி தெரு, சென்னை-4
6. வெ. ரமேஷ், 34, வெங்கு ரெட்டித் தெரு, சென்னை-8
7. எஸ். சந்திரசேகர், 14, ராஜாஜி ரோடு, திருச்சி-6
8. பா. பூங்குழலி, டி-6, T.N.G S. Rental Scheme, A.P. Patrow Salai சென்னை-78
9. பி. நாகராணி, 27, சுசாணி மூர்த்தி கோயில் தெரு, சென்னை-19
10. எம். கவியரசி, 14, முருகப்ப ஆசாரி தெரு, சென்னை-5
11. ப். கிருஷ்ணகுமார், 32, சிம்மக்கல் தெரு, மதுரை-1
12. பி. விஜயா, 15, கருணீகர் தெரு, வடபழனி, சென்னை-26
13. ஆர். ப்ரீதா, 6, இல்லை கங்கா நகர், சென்னை-61
14. இரா. மணிகண்டன், இராமு ரெட்டியார் நடுநிலைப் பள்ளி, கருங்காலிக் குப்பம் (வ.ஆ)
15. ம. உயிர்ஒளி, சி90, திரு வி. க. குடி. சென்னை-102
16. இரா. தியாகராஜன், 72, கம்மாளர் தெரு, திருவண்ணாமலை-1
17. கே. ஆர். பத்மாவதி, 148, எம்.என்.எஸ்.ஆர். ரோடு, சாய்பாபா காலனி. கோவை-11
18. எஸ். ராமன், 1, மீனாட்சி அம்மன் கோவில் வீதி, சத்தியமங்கலம்-1
19. க. பரணி கோமதி, பி-21, டாடுகண்டு நகர், சென்னை-15
20. எஸ். நித்யா, 7, காசிவிசுவநாதர் கோயில் தெரு (மாடி), சென்னை-33
21. எஸ். சரவணன், 24-ஏ, காமராஜர் தெரு. சென்னை-18
22. எஸ். சிவராஜ், 8, உப்புக்காரத் தெரு, மன்னார்குடி
23. எஸ். செந்தமிழ்ச் செல்வி, 20, சாலியத் தெரு, அம்மாப்பேட்டை, தஞ்சைமாவட்டம்
24. கே. அனந்தன், S/o P.L. கிருஷ்ணன், கிராமியப் பல்கலைக் கழகம், காந்தி கிராமம், மதுரை மாவட்டம்
25. பா. ராம்குமார், 40, புதுநகர், நாலாவது தெரு, திருமங்கலம், மதுரை மாவட்டம்
26. என். சுந்தர், 23, வடக்கு வீதி, மலைக்கோட்டை, திருச்சி-2
27. இரா. வெங்கடசுப்பிரமணியன், 25-ஜெ. கே.எஸ். ராமசாமிவீதி, கோவை-38
28. டி. ஜி. கற்பகவல்லி, 16, பஜார் சாலை, சென்னை-4
29. கே. கன்னிஸ்வரி, 34, டி. வி. பட்டணம், உடுமலைப்பேட்டை
30. இரா. சீதா, 24, கிருஷ்ணராயபுரம் வீதி, கோவை-37
31. வி. அனந்தகிருஷ்ணன், பிளாட் எண் 27, சாயி நகர், சென்னை-92
32. கே. வெங்கடேசன், 69, பாபுராவ் தெரு, வேலூர்-4
33. ஏ. கே. சீனிவாசன், 28-ஏ, பாண்டியன் பிள்ளை சந்து, ஆண்டார் தெரு, திருச்சி-2
34. வி.எஸ். அருண்குமார், 71, வி.எம். தெரு, கும்மிடிப்பூண்டி-601201
35. தி. ந. ச. வேங்கடரங்கன், 43, ரங்கநாதன் தெரு, சென்னை-17
36. பி. தமிழ்வாணன் க-2, வீட்டு வசதி வாரியம் காலனி, எஸ்.வி.மில் போஸ்ட் உடுமலைப்பேட்டை
37. எம்.எஸ்.கோமதி.D/o.K.M.சுப்பராஜ், குமாரபுரம், நள்ளி போஸ்ட் (வழி) சாத்தூர்
38. கே. சுதர்சன், சி-18, மெயின்ஸ் ரோடு, பிளாக்-24 நெய்வேலி-1
39. வி. வசுமதி, 3, 17வது தெரு, நங்கைநல்லூர், சென்னை-61
40. இரா. முத்துராமன், சுப்பையர் காம்பவுண்டு, திருப்பத்தூர்-623 211
41. R. SIVAHAMY MAHESWARY, c/o C. Saravanamoorthy, Teacher, Kulukkappara, Palaniarpalayam, P.O. (Kerala) 678555
42. ஜெ. கணேஷ் பாபு, 77-பி, குமரன் தெரு, சேலம்-1
43. ஜெ. ஹரீஸ்வரன், 29, நாராயண நகர், 2வது தெரு, சேலம்-1
44. ஆர். மணிகண்டன், 28, பாரதியார் தெரு, நெல்லிக்குப்பம்
45. இ. கருப்பசாமி, 10, செட்டியக்குடி மெயின் ரோடு, ஸ்ரீவில்லிபுத்தூர்
46. என். மோகனசுந்தரம், 1, மார்க்கெட் ரோடு, பொள்ளாச்சி-1
47. த. அருள்சிவபாலன், 61, புதிய ஏரி, செங்கல்பட்டு-2
48. ம. சுந்தரம், 17, ஐயப்ப செட்டி தெரு, சென்னை-1
49. கோ. சந்திரமௌளீஸ்வரன், C/o Hindu Agent, கைலாசபுரம், திருநெல்வேலி
50. எஸ். ஸ்ரீராம், 45, தெப்பக்குளம் தெரு, சுசீந்திரம்-629704
51. த. செழியன், தமிழரசி இல்லம், பணகுடி, 627109
52. அ. வெங்கடாசலம், 36/2, வடக்குத் தெரு, சிந்துபூந்துறை, திருநெல்வேலி-1
53. இரா. கார்த்திகேயன், 28, தெப்பக்குளம் முதல் சந்து, தூத்துக்குடி-2
54. டி.ஒய். மாரிமுத்து, 24, தங்கவேல் நகர் முதல் தெரு, பட்டுக்கோட்டை



55. ஆர். ரமேஷ், 6/1, துளசிங்கப்பெருமாள் கோயில் 2வது சந்து, சென்னை-5
56. கே. முத்துகுமார், 8/பி, கலிங்கா காலனி, சென்னை-78
57. பி. ஹேமா, Block No. 4, Flat No. 4, L.I.C. Staff Quarters, சென்னை-78
58. பா. சித்ரா, 13, மயிலை ரங்கநாதன் தெரு, சென்னை-17
59. சி. லாவண்யா, ஏ.பி. 22, எல். பிளாக், சென்னை-40
60. சி. ஞானகுரு, சுப்பையர் காம்பவுண்டு, திருப்பத்தூர்-623211
61. வி. நந்தினி, 5-1-51, சிவன் கோவில் தெரு, வத்தலக்குண்டு-624202
62. பி. பாலாஜி சீனிவாசன், 122/4, கொத்தவால்சாவடி தெரு, சென்னை-15
63. என். ராஜா வெங்கடேஷ், 16, ராமகிருஷ்ணா தெரு, சென்னை-17
64. ரெ. கோவிந்தராஜன், 14, சர்தார் மாணிக்கம் தெரு, சென்னை-33
65. வே. செந்தில்குமார், 144, காந்தி ரோடு, திருத்தணி
66. ஆர். விஜயலட்சுமி, 18/36, ஒக்கிலியார் முதல் தெரு, கோவை-1
67. வெ. லோகசுந்தர், 21-பி, மந்திரமூர்த்தி காலனி, திருநெல்வேலி-1
68. சு. செந்தமிழ்ச் செல்வி, 3/6, காமராஜ் காம்பவுண்டு, திருநெல்வேலி-2
69. C. SHEETAL A/2, TARA RANI, N.G. Acharya Road, Bombay-71
70. தி. விசுவநாதன், பி. 4/175, கைலாசபுரம், திருச்சி-14
71. ஜீ. மாலா, 11, நடராஜர் தெரு, விழுப்புரம், 2
72. ஜே. பி. பரத் தங்கப்பன், 19, வெள்ளாளத் தெரு, சென்னை-84
73. டி. வெங்கடகிருஷ்ணன், 32, சிவன் கோவில் தெரு, செங்கம்-606701
74. என். சாரதா. D/o எஸ். நாகசுந்தரம், ஆசிரியர், திருவாடானை-623407
75. ஆர். நாச்சியப்பன், 11, பட்டாபிராமன் பிள்ளை தெரு, திருச்சி-17
76. ஆர். செந்தில்குமார், 35-ஈ, வெங்கடசாமி வீதி, ஈரோடு-1
77. எஸ். அருண்குமார், 33, நந்தா நகர், கோவை-5
78. எஸ். சௌந்தர்யா, 20, மதுரைவீரன் கோவில் தெரு, சென்னை-17
79. ஈ. எஸ். ப்ரீதா, 156, என்.எம்.கே. தெரு, சென்னை-23.
80. பூ. ச. ஹரி, 10ஏ 1/6, உம்மடி ராமாநுஜாலு தெரு, குடியாத்தம்-2
81. கோ. ராஜா, கோகுலா மெடிகல்ஸ், ஜெயம்கொண்டம்-621802
82. ஜெ. சுவாமிநாதன், 49, முதல் டிமாண்டி வீதி, திருப்பூர்-4
83. எஸ். ஜெயலட்சுமி, 4, கோடியாந்தோப்பு தெரு, பள்ளத்தூர்-623107
84. வி. வெங்கடேசன், 36, தேரடித் தெரு, சென்னை-5
85. கி. வாசு வெங்கட், ஸ்டேட் பாங்க் காலனி, அம்மாப்பேட்டை, சேலம்-3



86. கோ. அரங்கநாதன், 34, பெரிய தெரு, சென்னை-5
87. டி. ஆர். விஜயராகவன், 52-எஃப், நெசவாளர் காலனி முதல் தெரு, தருமபுரி-1
88. க. சரஸ்வதி, D/o ச. கணபதி, உரிமையியல் நீதிபதி, தருமபுரி-1
89. ஆர். திருமலைவாசன், 8/6, சித்த முதலி தெரு, தாராமங்கலம், 636502
90. எஸ். சந்திரசேகர், 5, டெய்லர்ஸ் எஸ்டேட், 2வது தெரு, சென்னை-24
91. எம். வெங்கடசுப்பிரமணியன், 4, ராஜாஜி தெரு, சென்னை-63
92. பு. பா. உமாசங்கர், 87, வெள்ளாளத் தெரு, சென்னை-84
93. ஈ. என். கோபாலன், 146, வடக்கு உத்திர வீதி, திருச்சி-6
94. பி. மோகன், 4, சமரபுரி முதலித் தெரு, பொன்னேரி, 601204
95. எஸ். சேஷாத்திரி, 30, திருவேங்கடம் தெரு, சென்னை-33
96. இரா. ஜெயந்தி, 17, டாக்டர் இராமநாதன் தெரு, சேலம்-1
97. நா சாயிகிருஷ்ணன், 30/12, அமிருதின் ஸ்டோர்ஸ், சின்ன சவுக், திருச்சி-2
98. ஏ. பாலாஜி, 4, நாராயண நகர், சேலம்-1
99. சி. ரேவதி, க்யூ 4, ஹவிஸிங் யூனிட், ஏர்க்காடு ரோடு, சேலம்-8
100. ல. வெள்ளையன், 41, பெரியசாமி ரோடு, கோவை-2
101. மு. இரமணன், 93, நூறடி ரோடு, டாடா பாக், கோவை-12
102. பி. ராஜேஷ், 28/7, போலீஸ் லயன், கோவை-44
103. வி. பாலசுப்பிரமணியன், 390, தடாகம் ரோடு, கோவை 40
104. தாயு. சிவகுமார், 36, கன்னங்குறிச்சி மெயின் ரோடு, சேலம்-7
105. வி. ஸ்ரீவித்யா, 13, எஸ். பி. கோவில் தெரு, முதல் சந்து, சென்னை-26
106. வி. கல்யாணி, 13, எஸ். பி. கோவில் தெரு, முதல் சந்து, சேலம்-26
107. செ. சிவகுமார், 4, ஸ்கீம் ரோடு, திண்டுக்கல்-1
108. மு. செந்தில்குமார், ஒன்பதாம் வகுப்பு 'ஆ', அரசு உயர்நிலைப்பள்ளி, முத்துநாயக்கன் பட்டி., புளியூர் நத்தம் போஸ்ட், 624704
109. ப. பார்த்தசாரதி, 41, கிருஷ்ணபவனம், தேனி-626531
110. லெட்பிரியா பாலகிருஷ்ணன், 2வது சர்குலர் ரோடு, சென்னை-82
111. பி. ஆர். ஜெயகுமார், 13, பந்தடி 5வது தெரு, மதுரை-1
112. ஆர். சீனிவாசராகவன், ஏ9/2, எம்.ஐ.ஜி. பிளாக், மதுரை-20
113. ஏ. வாசுதேவன், 25, கந்தப்புரம் தெரு, விருதுநகர்
114. ஆர். ரமேஷ், 67, செந்தி விநாயகபுரம் முதல் தெரு, விருதுநகர்
115. மா. சதீஷ், 58, பஜார் தெரு, திண்டிவனம்-1

(இன்னும் வரும்)



குப்புசாமி அப்புசாமி

அழ.வள்ளியப்பா

அப்புசாமி:

குப்பு சாமி, குப்பு சாமி,
இன்னும் தூக்கமா?

குருட்டு அதிர்ஷ்டம் உன்னைத் தேடி
வந்திருக்குதே!

குப்புசாமி:

அப்பு சாமி சார் எனக்கே
அதிர்ஷ்டம் அடிக்குதா!

அடடே! எங்கே, எப்போ என்று
உடனே கூறுங்கள்?

அப்புசாமி:

பத்துப் பேர்கள் ஒத்துச் சேர்ந்து
வாங்கினீர்களே,

பரிசுச் சீட்டு அதனை உனக்கு
நினைவிருக்குதா?

குப்புசாமி:

பரிசுச் சீட்டை எங்கே வைத்தேன்?
தெரியவில்லையே!

பத்து நாட்கள் ஆகும் அதனைத்
தேடிப் பிடிக்கவே!

அப்புசாமி:

அந்தச் சீட்டு பரிசு பெற்ற
செய்தி கூறவே,

கந்தன் உன்னை எழுப்ப வந்தான்;
முடியவில்லையே!

குப்புசாமி:

பரிசுத் தொகையில் எனக்குப் பெரிய
பங்கு கிடைக்குமே!

பத்தால் அதனை வகுத்து நீங்கள்
கூற வேண்டுமே!

அப்புசாமி:

மொத்தத் தொகையைப் பத்தால் வகுத்துப்
பார்த்தோம் நாங்களும்.

முழுசாய் உனக்கு ரூபாய் ஒன்று
கிடைக்கப் போகுதே!

குப்புசாமி:

ஒற்றை ரூபாய் பெறுவதற்கா
உலுக்கி எழுப்பினீர்?

ஒன்றும் வேண்டாம்; தொடர்ந்து நானும்
நன்கு தூங்குவேன்!

Printed and published by V. Murali on behalf of Ms. Bharathan Publications Private Limited at the Bharathan Press, Race Course Road, Guindy, Madras-32. (Phone: 431543) Edroit; K. Rajendran,

அரவிந்த பரிமளா வொர்க்ஸ்— இந்தியாவின் முதன்மையான அகர்பத்தி ஏற்றுமதியாளர் இன்னும் வகிக்கும் ஸ்தானம் நம். 1



தொடர்ந்து 5வது ஆண்டில் அரவிந்த பரிமளா வொர்க்ஸ், முதன்மையான ஏற்றுமதி செயல் திறமைக்காக 1982 டிசம்பர் 30ந்தேதி அன்று, ராஷ்டிரபதியிட மிருந்து இந்திய அரசாங்க விருதைப் பெற்றனர்.

10 ஆண்டுகளில் அரவிந்த பரிமளா வொர்க்ஸ், 1 சர்வதேச மற்றும் 5 தேசீய விருதுகளையும் சேர்த்து 25 விருதுகளை வென்றுள்ளனர்.

நிலையான தரமும் பலவித நறுமணங்களும் அவர்களுக்கு சர்வதேசப் பாராட்டைப் பெற்றுத் தந்துள்ளன.

அரவிந்த பரிமளா வொர்க்ஸ்— அகர்பத்தி தயாரிப்பிலே முதன்மையானவர்கள்

25

விருதுகள் 10 ஆண்டுகளில்

அரவிந்த
பரிமளா வொர்க்ஸ்
மைசூர்-570 004

SURYA/TAM/787

Regd. No. TN MS (S) 281